# சங்க இலக்கிய ஆய்வுகள்

பதிப்பாசிரியர்
அரங்க. மு. முருகையன்
இரா. அறவேந்தன்
சு. தமிழ்வேலு

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை - 600 113

# சங்க இலக்கிய ஆய்வுகள்

இ.ப.த. மன்றம்
அறிஞர் வ.சுப. மாணிக்கனார்
அறக்கட்டளைக் கட்டுரைகள்

பதிப்பாசிரியர்
அரங்க மு. முருகையன்
இரா. அறவேந்தன்
சு. தமிழ்வேலு

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
சென்னை - 600 113

# BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| Title | : | Sanga Ilakkiya Aaivugal |
| Subject | : | Research on Sanga Ilakkiam Literature |
| Editor | : | M. Murugayan<br>R. Araveendan<br>S. Tamizvelu |
| Publisher | : | International Institute of Tamil Studies,<br>C.I.T. Campus, Taramani,<br>Chennai - 600 113. |
| Copyright | : | An India University Tamil Teachers Association |
| Publication No. | : | 377 |
| Language | : | Tamil |
| Date of Publication | : | 2000 |
| Edition | : | First |
| Paper used | : | TNPL 16 Kg. Super Printing |
| Size of the book | : | Demmy 1/8 |
| No. of Copies | : | 1200 |
| Printing Types | : | 11 Points |
| No. of Pages | : | xii + 112 = 124 |
| Price | : | 30/- |
| Printed at | : | United Bind Graphics<br>101-D, Royapettah High Road<br>Luz, Mylapore, Chennai - 600 004.<br>✆ : 4684693, 4661807. |

**முனைவர் ச.சு. இராமர் இளங்கோ**
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை - 600 113.

இருபத்தோராம் நூற்றாண்டில் தமிழியலின் வளர்ச்சி நிலைகளைப் பல்வேறு தளங்களுக்கும் விரிவுபடுத்த வேண்டிய கட்டாயம் தமிழறிஞர் முன்னே உள்ளது. இந்த விரிவாக்கத் தளங்களை நோக்கிய பயணத்தில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் தோழமை நிறுவனங்களோடு கூட்டுச் சேர்ந்து பல ஆக்கப்பணிகளை நிறைவேற்றி வருகின்றது.

இதன் விளைவே கடந்த ஓராண்டாக இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றத்தின் தொடர் வெளியீடுகள். இவ்வெளியீடுகள் அனைத்தையும் உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனமே வெளியிட்டுள்ளது. தமிழ் இலக்கிய வரலாற்றில் மறைந்து போக இருந்த இ.ப.த. மன்ற முதல் கருத்தரங்கக் கட்டுரை களையும் (1969) இரண்டாம் கருத்தரங்கக் கட்டுரைகளையும் (1970) ஐந்து தொகுதிகளாக உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் வெளியிட்டது.

1999 மேத்திங்களில் மன்றத்தின் அறக்கட்டளைப் பொழிவுகள் அடங்கிய ''ஆளும் தமிழ்'' என்ற நூலையும் முப்பதாண்டு ஆய்வுக் கோவைகளிலிருந்து தெரிவு செய்யப்பெற்ற ''பொருள் புதிது'' எனும் கட்டுரைத் தொகுப்பையும் நிறுவனம் வெளியிட்டது.

இதன் தொடர்ச்சியாகவே ''தொல்காப்பிய ஆய்வுகள்'' என்ற நூலையும் ''சங்க இலக்கிய ஆய்வுகள்'' என்ற நூலையும் நிறுவனம் வெளியிடுகிறது.

முதுபெரும் அறிஞர் வ.சுப. மாணிக்கனார் பெயரில் பேராசிரியர் தமிழண்ணல் அவர்கள் இ.ப.த. மன்றத்தில் அமைத்த

அறக்கட்டளையே இந்நூல் வெளிவருவதற்குக் காரணம். இந்த அறக்கட்டளை சார்பாக நிகழ்த்தபெற்ற தொல்காப்பிய ஆய்வுப் போட்டியிலும் சங்க இலக்கிய ஆய்வுப் போட்டியிலும் வெற்றி பெற்ற கட்டுரைகள் இந்நூலுள் இடம் பெற்றுள்ளன.

இந்தக் கட்டுரைகளை அச்சிடுவதற்கு வாய்ப்பளித்த இ.ப.த. மன்றச் செயற்குழுவினர்க்கும் மன்றத் தலைவர் பேராசிரியர் முனைவர் தமிழண்ணல் அவர்களுக்கும், மன்றச் செயலர், பொருளர், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் க.ப. அறவாணன் அவர்களுக்கும் நன்றி.

நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் தருகின்ற நிறுவனத் தலைவர் மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்களுக்கும், தமிழ் வளர்ச்சி, பண்பாடு மற்றும் அறநிலையத் துறைச் செயலர் திருமிகு. சு. இராமகிருட்டிணன், இ.ஆ.ப. அவர்களுக்கும் நன்றி.

இந்நூல் வெளிவர உறுதுணையாக இருந்த முனைவர் அரங்க மு. முருகையன், முனைவர் இரா. அறவேந்தன், திரு. சு. தமிழ்வேலு ஆகியோர்க்கும் கவினுற அச்சிட்டுத் தந்த சென்னை யுனைடட் பைண்ட் கிராபிக்ஸ் அச்சகத்தார்க்கும் நன்றி.

**ச.சு. இராமர் இளங்கோ**
இயக்குநர்

**தமிழண்ணல்**
தலைவர்
இ.ப.த. மன்றம்

துணைத்தலைவர்
தமிழிலக்கியச் சங்கப்
பலகைக் குறள்பீடம்
ஒருங்கிணைப்பாளர்
தமிழ்ச் சான்றோர் பேரவை

*முதறிஞர் வ.சுப. மாணிக்கனார் அறக்கட்டளை ஒன்று நிறுவப்பட்டமை குறிப்பிடத்தக்க ஒரு வரலாற்றை யுடையது.*

*மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் யான் துறைத் தலைவராக இருந்தபொழுது, அன்றைய துணைவேந்தர் ஜே. இராமச்சந்திரன், முன்னைத் துணைவேந்தர் வ.சுப. மாணிக்கம் அவர்கள் படத்தைப் பல்கலைக்கழகத்தில் திறக்க ஆவன செய்யுமாறு பணித்தார். நிதி சேர்க்க வேண்டிய சூழல் ஏற்பட்டது. ஒரு சிறு குழு அமைத்துக்கொண்டு, பலருக்கு மடல் எழுதினேன். கலையன்னை இராதா தியாகராசன், அறநெறியண்ணல் லெ. நாராயணன் செட்டியார், தேவகோட்டை சேவுகன் அண்ணாமலைக் கல்லூரி நிறுவனர் சேவு. அ. அண்ணாமலை செட்டியார் ஒவ்வொருவரும் ரூபாய் ஆயிரம் வீதம் அனுப்பினர்.*

*சென்னையில் குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பாவும் பேராசிரியர் வெ.தை. மாணிக்கமும் ஒத்துழைத்து ஏவிஎம் அறக்கட்டளையில் ரூபாய் ஆயிரமும் வானதி திருநாவுக்கரசு ரூபாய் ஐநூறும் காசோலைகள் தந்தனர். யான் ரூபாய் ஆயிரம் சேர்த்து ரூபாய் ஐயாயிரத்து ஐந்நூறு, மதுரை வங்கி நடப்புக் கணக்கில் போட்டேன்.*

*அடுத்து வந்த துணைவேந்தர் பல்கலைக்கழகச் செலவிலேயே படம் திறப்பதுதான் முறையென்று கூறி அவ்வாறே செய்துவிட்டதால் நிதி சேர்ப்பதை நிறுத்தும்படியானது.*

*பிறகு நடப்புக் கணக்கைச் சேமிப்புக் கணக்கில் போட்டு விட்டு மறந்து போனேன். வங்கியில் வேலை பார்த்த என் மகன்*

பெரி. சோலையப்பன் நினைவூட்டிய போது, பல ஆண்டுகள் ஆயினபடியால் பதின் மூவாயிரத்துச் சில்லரையாகக் கூடியிருந்தது. மீண்டும் என் சொந்தவூர் நெற்குப்பையில் ரூபாய் இருபத்தையாயிரமாக இன்று அது வைப்பு நிதியாகவுளது.

வ.சுப.மா. அவர்களும் தம் வாழ்நாளின் இறுதியில் தலைமை தாங்கியது என்ற முறையில் இது கடந்த பல ஆண்டுகளாக இ.ப.த. மன்றத்தில் பரிசளிக்கப் பயன்பட்டு வருகிறது.

முதறிஞர் போற்றிய தொல்காப்பியம், சங்க இலக்கியம், படைப்பிலக்கியம் போன்றவற்றில் மன்றப் பேராளர்களிடையே போட்டி வைத்துப் பரிசளிப்பது அப்பெரும் பேராசிரியரை முறையாக நினைவுகூரும் நிகழ்ச்சியாக அமைந்துவிட்டது.

இப்போட்டியில் பரிசுபெற்ற கட்டுரைகளே நூலாக வெளிவந்துள்ளன. இச்சமயத்தில் நிதியுதவியவர்களை நினைந்து நன்றி கூறுவதுடன் நூல்களை வெளியிட வகைசெய்த மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத் துணைவேந்தர் க.ப. அறவாணன் அவர்களையும் நூல்களைத் தம் நிறுவனத்தின் வழி வெளியிடும் உலகத்தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர் முனைவர் ச.சு. இராமர் இளங்கோ அவர்களையும் பாராட்டுகிறேன்.

**தமிழண்ணல்**

**க.ப. அறவாணன்**
செயலர் & பொருளர்
இ.ப.த. மன்றம்

துணைவேந்தர்
மனோன்மணியம்
சுந்தரனார் பல்கலைக்கழகம்
திருநெல்வேலி - 627 012

1969 இல் முதல் கூடலை மதுரையில் நிகழ்த்திய இம்மன்றம் 1991க்குப் பிறகு ஒரு புதிய திருப்பத்தைச் சந்தித்தது. இதன் ஓர் அடையாளம் அறக்கட்டளைச் சொற்பொழிவுகளை அமைத்தல். இதனை மன்றத்தில் முதலாவது தொடங்கி வைத்தவர் அன்று கோவை பாரதியார் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவராக இருந்த சிற்பி பாலசுப்பிரமணியன் அவர்கள் ஆவார். அவரைத் தொடர்ந்து பொறியியல் அறிஞர் கொடுமுடி சண்முகன், அறிஞர் தமிழண்ணல், அறிஞர் ச. மெய்யப்பன், புதுவைப் பல்கலைக்கழக அறிவியல் தமிழ் அறம், பெரியார் பல்கலைக்கழகப் பதிவாளர் ந. வேலுச்சாமி, காந்திகிராமம் டாக்டர் மு. குருவம்மாள் என வளர்ந்து, இவ்வாண்டு நம் அன்பிற்கும், மதிப்பிற்கும் உரிய தமிழ் வளர்ச்சி, பண்பாட்டுத் துறை அமைச்சர் மாண்புமிகு தமிழ்க்குடிமகன் என நீண்டுள்ளது. இது ஒரு திருப்பம், பெரும் திருப்பம், நிகழ வேண்டிய திருப்பம். இத்திருப்பத்தில் நிகழ்ந்த இன்னொரு திருப்பம் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் பங்களிப்பு. அதுவும் அமைச்சர் தமிழ்க்குடிமகன் தமிழ் வளர்ச்சித் துறை அமைச்சராக இருந்ததினால் ஏற்பட்ட நல்ல விளைவுகளுள் ஒன்று. அமைச்சரின் கருத்தை உடனே செயல்படுத்தும் ஆற்றல் வாய்ந்த உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர் ச.சு. இராமர் இளங்கோ இன்னொரு துணைவர்.

இ.ப.த. மன்றத்தின் வழியாக வெளிவர வேண்டிய முதல், இரண்டாம் கருத்தரங்கக் கோவைகளைக் கொண்டு வந்த இளவல் இளங்கோவின் துணையோடும், அமைச்சரின் வாழ்த்துதலோடும் மன்றத்தில் தமிழண்ணல் அறக்கட்டளை வழிச் சிறந்த கட்டுரைகள் என அறிஞர்களால் தெரிவு செய்யப் பெற்ற தொல்காப்பிய ஆராய்ச்சி மற்றும் சங்க இலக்கிய ஆராய்ச்சிக் கட்டுரைகள் தற்போது உங்கள் கைகளில் அழகிய அச்சு நூலாகத் தவழுகின்றன.

தொல் இலக்கியங்களைப் பற்றியும், தொல் இலக்கணங் களைப் பற்றியும் ஆழ்கல்வி அருகியே வருகின்றது. இத்துறைசார் ஆழங்காற்பட்ட ஆய்விற்கும் இதே நிலைதான். தொல்காப்பிய, சங்க இலக்கியங்கள் முதலியவற்றைப் பயிற்றுவாரும் பயில்வாரும் தேய்ந்து வருவது 21ஆம் நூற்றாண்டுத் தமிழியல் ஆய்வைக் கட்டமைப்போருக்குப் பெரும் சவாலாக விளங்கும்.

இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றத்தின் ஆய்வுப் போக்குகள் இத்தேய்மானத்தைப் புள்ளிவிவரங்களோடு நமக்கு விளக்குகின்றன. 1969ஆம் ஆண்டில் மன்றம் நிகழ்த்திய முதல் கருத்தரங்கில் 21.9 சதவீதம் சங்க இலக்கிய ஆய்வுகள் நிகழ்த்தப் பெற்றுள்ளன. 1970 ஆம் ஆண்டில் இச்சதவீதம் 24.2 சதவீதமாக உயர்ந்துள்ளது. ஏறத்தாழ நிகழ்த்தப் பெற்ற ஆய்வில் கால் பகுதி சங்க இலக்கியமே. இந்த ஆய்வுப் போக்கு 17.4 (1971), 13.28 (1972), 13.5 (1973), 12.9 (1974), 12 (1975), 10.49 (1976) என்ற விகிதாசாரத்தில் ஆண்டுதோறும் இளைத்து 1999இல் 6.5 சதவீதமாகத் தேய்ந்துள்ளது.

தமிழர்க்குப் பெருமை தந்து கொண்டிருக்கும் தொல்காப்பிய ஆய்வுகள் தொடக்கம் முதலே மெலிந்துள்ளன. 1970 தொடங்கி 1991 வரையிலான ஆண்டுகளில் எடுக்கப் பெற்ற புள்ளி விவரப்படி 1976 ஆம் ஆண்டில்தான் 10.49 சதவீத தொல்காப்பிய ஆய்வுகள் நிகழ்த்தப் பெற்றுள்ளன. ஏனைய ஆண்டுகளில் 17 ஆண்டுகள் 5 சதவீதத்திற்கும் குறைவாகவே தொல்காப்பிய ஆய்வுகள் நிகழ்த்தப் பெற்றுள்ளன.

இந்தக் கணக்கெடுப்பைக் கருத்தில் கொண்டுதான் இ.ப.த. மன்றம், சங்க இலக்கிய ஆராய்ச்சிக்கும், தொல்காப்பிய ஆராய்ச்சிக்கும் முதன்மை கொடுக்கத் திட்டமிட்டது.

இ.ப.த. மன்றத்தின் தலைவராகப் பொறுப்பு வகித்துவரும் பேராசிரியர் தமிழண்ணல் அவர்கள் முதுபெரும் பேராசிரியர்

வ.சுப. மாணிக்கனார் பெயரில் ஓர் அறக்கட்டளையை மன்றத்தில் அமைத்தார். சங்க இலக்கிய ஆராய்ச்சியிலும், தொல்காப்பிய ஆராய்ச்சியிலும் தலைசிறந்து விளங்கிய பேராசிரியர் வ.சுப. மாணிக்கனார் பெயரில் அமைந்த அறக்கட்டளை சார்பாகச் சங்க இலக்கியக் கட்டுரைப் போட்டிக்கும், தொல்காப்பியக் கட்டுரைப் போட்டிக்கும் ஏற்பாடு செய்யப்பட்டது.

1996 ஆம் ஆண்டு மேத்திங்கள் 25,26,27 ஆகிய நாள்களில் காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தின் சார்பில் 27ஆம் கருத்தரங்கம் நடைபெற்றபோது "சங்க இலக்கியம் புதிய ஆய்வு முடிவுகள்" எனும் பொதுத் தலைப்பில் போட்டிக்கு வந்த கட்டுரைகளுள் மூன்று தெரிவு செய்யப் பெற்றுப் பரிசுகள் வழங்கப்பெற்றன. இதே போல் "புதிய நோக்கில் தொல்காப்பிய ஆராய்ச்சி" எனும் பொதுத் தலைப்பில் போட்டிக்கு வந்த கட்டுரைகளுள் மூன்று தெரிவு செய்யப் பெற்று 1977 ஆம் ஆண்டு மேத் திங்கள் 24, 25 ஆகிய நாள்களில் திருச்சிராப்பள்ளி பிசப் ஹீபர் கல்லூரியில் நடைபெற்ற மன்றத்தின் 28ஆம் கருத்தரங்கின் போது பரிசுகள் வழங்கப்பெற்றன.

பரிசு பெற்ற கட்டுரைகளே இப்போது நூல்களாக உங்கள் முன்னே காட்சியளிக்கின்றன. தொடர்ந்து இ.ப.த. மன்ற நூல்களை வெளியிட இசைவுதந்து எண்ணியது முடிக்கும் திண்ணியர் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத் தலைவர் மாண்புமிகு அமைச்சர் முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்கள் நன்றிக்கு உரியவராகின்றார்.

ஓர் இனம் காலம்தோறும் தொடரலாம், தொடரும். ஆனால், நாளுக்கு நாள், மேலுக்கு மேல் வளர்ச்சி நிகழ்ந்து கொண்டே இருத்தல் வேண்டும். அவ்வாறு நிகழ வேண்டுமெனில் ஒவ்வொரு துறையிலும் முன்னணியில் இருக்கும் வல்லோர் தம் காலத்திலேயே தமக்கு முன்பே அடுத்த அடுத்த தலைமுறைகளைத் தம் பிள்ளைகளைப் பேணி வளர்ப்பது போல வளர்க்க வேண்டும்.

அப்போதுதான் தலைமுறைதோறும் அறிவு தொடரும், வளர்ச்சி தொடரும். சாக்கரிட்டீசு அவருடைய மாணவர் பிரிட்டோ, அவருடைய மாணவர் அரிஸ்டாட்டில், அவருடைய மாணவர் அலெக்சாண்டர் என்று தொடருதல் போல. இந்நிகழ்ச்சி இடையறப்படாமல் சங்கிலிப் பின்னல் போலத் தொடர வேண்டும். நம் தலைமுறையில் அடுத்த தலைமுறையினர் உருவாகி வருகின்றனர் என்பதற்குச் சாட்சியாகக் கடந்த பத்தாண்டுகளாகத் தொடர்ந்து மன்றப் பணிகளில் தம்மை ஈடுபடுத்திவரும் தம்பியர் அரங்க. மு. முருகையன், இரா. அறவேந்தன், சு. தமிழ்வேலு ஆகியோர் இந்நூல்களுக்குப் பதிப்பாசிரியராகப் பொறுப்பேற்றுப் பதிப்புப் பணியைச் செம்மையாக நிறைவேற்றி உள்ளனர். இவர்களை மன்றம் பாராட்டுகிறது.

இந்நூல்கள் வெளிவர உழைத்த அனைவர்க்கும் நன்றிகள்.

**க.ப. அறவாணன்**

# உள்ளே... உள்ளே... உள்ளே...

*ச. மகாவிச்னு*

*சங்க இலக்கிய வாசிப்பு* 1

*செ. இராசு*

*தொல்லியலும் சங்க இலக்கியமும்* 55

*ச. சிவகாமி*

*சங்கச் சமூகத்தில் பெண்டிர் நிலை* 77

# சங்க இலக்கிய வாசிப்பு

**ச. மகாவிஷ்ணு**
தமிழியல் துறை, புதுவைப் பல்கலைக் கழகம்
புதுச்சேரி - 605 014

*முன்னுரை*

காலங்காலமாக இலக்கியங்கள் தோன்றுவதும் அவற்றை வாசித்துத் தமது கருத்துக்களைக் குறிப்புகளாகவோ உரைகளா கவோ திறனாய்வுரையாகவோ வெளியிடுவதும் நிகழ்ந்து வருகின்றன. அவ்வகையில் அண்மைக்காலத்தில் வாசிப்பு அடிப்படையிலான ஆய்வு முறையும் தோன்றியுள்ளது. ஆயினும் தமிழ் மொழியின் தொன்மை வாய்ந்த இலக்கியமான சங்க இலக்கியம், வாசிப்பு அடிப்படையில் இதுவரை ஆய்வு செய்யப் பெறவில்லை. அதை நிறைவு செய்யும் பொருட்டு இவ்வாய்வு சங்க இலக்கிய வாசிப்பு என்ற தலைப்பில் அமைகின்றது.

சங்க இலக்கியம் என்பது தமிழ்ப் பண்பாட்டின் களஞ்சிய மாகும். அவ்விலக்கியம் புதிய திறனாய்வு முறைகளில் ஆய்வு செய்யப்படவேண்டும்; அதற்காகச் சமூகவியல் நோக்கிலும் அமைப்பியல் நோக்கிலும் - வாசிப்பை அடிப்படையாகக் கொண்டு சங்க இலக்கியம் ஆய்வு செய்யப்பெறவேண்டும்; அதன்வழிச் சங்க இலக்கியம் தொடர்பான புதிய முடிவுகளைத் தமிழிலக்கிய உலகம் அறிந்துகொள்ள முடியும் - என்ற நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டது இவ்வாய்வு. சங்க இலக்கியம் பற்றி அறிஞர் பலர் ஆய்வு செய்துள்ளனர். ஆயினும் வாசிப்பை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு இதுவரை செய்யப்பெறவில்லை. எனவே இதுவே முதல் ஆய்வு ஆகும். சங்க இலக்கிய வாசிப்பு என்ற பொருளில் அமையும் இவ் வாய்வின் முதன்மை மூலங்கள் சங்க இலக்கியமான பத்துப் பாட்டு, எட்டுத்தொகை மற்றும் தொல்காப்பியம் ஆகும். துணைமை மூலங்களாகச் சமூகவியல், அமைப்பியல், வாசிப்பு தொடர்பான சில நூல்களும், சங்க இலக்கியத் திறனாய்வு நூல் களும் கட்டுரைகளும் இவ்வாய்வில் கொள்ளப் பெறுகின்றன. களஆய்வு ' முறையும் இருக்கை ஆய்வு முறையும் (ஆகிய

இரண்டு ஆய்வு முறைகளும்) இவ்வாய்வில் மேற்கொள்ளப் பெறுகின்றன.

இருக்கை ஆய்வு முறையில் சங்க இலக்கியம் பொதுநிலையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அதைத்தொடர்ந்து சங்க இலக்கிய வாசிப்புப் பற்றிய விளக்க முறைத் திறனாய்வும் சமூகவியல், அமைப்பியல் அடிப்படையிலான வாசிப்புத் திறனாய்வும் செய்யப்பெற்றுள்ளன. ஓதல் என்பதன் தோற்றம், ஓலை என்பதன் தோற்றம் முதலியன சங்க இலக்கியத்தை அடிப்படையாகக் கொண்டு ஆய்வு செய்யப்பெற்றுள்ளன. அடுத்து வாய்மொழி/செவிவழி சங்க இலக்கிய வாசிப்புப் பற்றியும் ஓலைச் சுவடிகளில் சங்க இலக்கிய வாசிப்புப் பற்றியும் விரிவாக ஆய்வு செய்யப்பெற்றுள்ளது. அதனையடுத்து அச்சு எந்திரத்தின் வருகைக்குப்பின் சங்க இலக்கிய வாசிப்புப் பற்றி ஆய்வு செய்யப்பெற்றுள்ளது. ஈற்றுப்பகுதியில் கள ஆய்வுத் தரவுகள் ஆய்வு செய்யப்பெற்றுள்ளன. கள ஆய்வின் பொருட்டுச் சென்னை மாநகரிலுள்ள கல்லூரித் தமிழாசிரியர்கள் நூற்றுவரிடம் வினா நிரல் வழிக் கருத்துத் திரட்டப்பெற்றது. அக்கருத்துக்களை நிரல்படுத்திச் சங்க இலக்கிய வாசிப்பின் தற்கால நிலை விளக்கப்பெற்றுள்ளது.

**சங்க இலக்கியம் - ஓர் அறிமுகம்**

சங்க இலக்கியம் என்பது கி.மு. ஐந்தாம் நூற்றாண்டுக்கும் கி.பி. இரண்டாம் நூற்றாண்டுக்கும் இடையில் தமிழகத்தில் தோன்றிய பாடல்கள் ஆகும். இவையே தமிழின் மிகத் தொன்மை யானவையாகும். இவ்விலக்கியம் பத்துப்பாட்டு எட்டுத்தொகை என்னும் நூல்களாகத் தொகுக்கப்பெற்றுள்ளன.* அவ்வாறு தொகுப்பதற்கான பின்னணிகளை ஆராய்ந்தவர்கள், 1. சங்ககாலச் சமுதாய வாழ்வினைப் பிற்காலத்தவர்க்கு உணர்த்துதல், 2. பாடல்கள் வழிப் பிற்கால மக்களும் தெளிந்து நடத்தல், 3. புலவர்கள் தமிழின் மீது உள்ள ஆர்வத்தின் பொருட்டு, 4. முன்னோர்களின் பெருமையை அறிதலின் பொருட்டு முதலிய காரணங்களால் சங்கப்பாடல்களின் தொகுப்பு நிகழ்ந்தது என்பர்.[1] இத்தொகுப்பு நூல்களிலுள்ள பாடல்களை அகம், புறம் என்ற இருவேறு பாகுபாடுகளில் வகுத்து இலக்கணம் செய்தார் தொல்காப்பியர். இத்தகையதொரு இலக்கியப் பாகுபாடு உலகில் எந்த ஓர் இலக்கியத்திலும் இல்லை[2]. இத்தகைய சிறப்பு வாய்ந்த சங்க இலக்கியத்தின் உள்ளடக்கத்தை ஆய்ந்து, இலக்கியக் கொள்கை வகுத்த திறனாய்வாளர், ''சங்க இலக்கியம் உயர்வு நவிற்சி மிகைப் படாமல் இயல்பாக, வாழ்வையொட்டி (Realistic) அமைந்

துள்ளதைக் காணலாம். மேலும் சங்க இலக்கியம் மக்களையும், மக்கள் தலைவர்களான மன்னர்களையும் மக்கள் வாழ்வு முறை களையும் கொடை வீரம் காதல் போன்ற விழுமிய உணர்வுகளை யுமே தன்னுள் அடக்கியுள்ளது. 'இலக்கியம் படைக்கப்படுவது மக்களுக்காகவே' என்பதே புலவர்தம் எண்ணமாய் இருந்தது''[3] என்பர். சங்ககாலப் புலவர்கள் இயற்கை விருப்பம் கொண்டவர் களாகத் திகழ்ந்துள்ளனர். தமது அனுபவங்களை நுட்பமாக, சிறப்பான முறையில் பாடல்களாக வடித்துள்ளார்கள். ''.... அறிவு பெருகப் பெருக இன்பமும் உடன் பெருகுதல் இயல் பாதலால் உயிர்ப்பொருள் உயிரில் பொருள்களில் தாம் நுண்ணியதாக நுழைந்தாராய்ந்த அழகிய கூறுகளைப் பாக்களில் சுவை பெருகவமைத்துப் பயில்வார்க்கு அறிவோடு இன்பத்தை யும் பயக்கவல்லவர்களே நல்லிசைப் புலவர்கள்''[4] என்று மறைமலையடிகள் குறிப்பிடும் வரையறைக்கு முன்னோடி களாய் இருந்தவர்கள் சங்கப்புலவர்கள். இப்புலவர்கள் தோன்று வதற்கு முன் பாணர்கள் என்ற வாய்மொழிப் பாடகர்கள் செல்வாக்குப் பெற்றிருந்தனர். அவர்கள் இசைக்கருவிகளுடனோ இசைக்கருவி இல்லாமலோ தமிழ்ப்பாடல்களைப் பாடி வந்தனர். அப்போது வரிவடிவம் பயன்பாட்டில் இல்லை. எனவே பாட்டை அனுபவிப்பது செவிவழியாகவே நிகழ்ந்தது. வாசிப்பின் முதல்நிலை இது. தமிழகத்தில் (மட்டுமின்றி உலகமெங்கும்) வாசிப்பு என்பது செவியால் பாடல்களை அனுபவித்து அறிதலாகவே தொடக்கத்தில் இருந்துள்ளது. அதன் தொடர்ச்சியே இன்று நாட்டுப்பாடல்களைப் பாடுவதும் கேட்பதுமான நிலையை ஏற்படுத்தியுள்ளது. சங்கப் பாடல் களைச் செய்யுள் என்று வழங்குவதும் உண்டு. பாட்டுக்கும் செய்யுளுக்கும் சிறிய வேறுபாடு உண்டு. ''பாட்டு, செய்யுளுக்கு மாறானது அன்று. உணர்ச்சியும் கற்பனையும் பொருந்திய செய்யுள் (Verse) எல்லாம் பாட்டு (poetry) எனத்தகும். உணர்ச்சி யும் கற்பனையும் இல்லாமல் சோதிடம் மருத்துவம் நீதி முதலியவற்றை எடுத்துரைக்கும் செய்யுள் எல்லாம் பாட்டு அல்ல''[5]. எனவே சங்க காலத்தில் பாடல்கள் மட்டுமன்றி, சோதிடம் மருத்துவம் நீதி பற்றிய செய்யுள்களும் வாய்மொழி/ செவிவழி வாசிப்பில் இடம்பெற்றிருந்தன எனக் கருதத்தகும். சங்க காலத்தில் செவிவழி வாசிக்கப்பெற்ற வாய்மொழி இலக்கிய வடிவங்கள் எழுத்து மொழி இலக்கியங்களைவிடவும் சிறந்ததாகக் கருதப்படும். இதனை, ''பேச்சு, எழுத்தை விடச் சுத்த மானதாகக் கருதப்படுகிறது. எழுத்து, தன் சொந்த ஒழுங்

கமைவின் பௌதீகக் குறிகளால் அசுத்தப்படுத்துகிறது''[6] என்ற அமைப்பியலாரின் கருத்தால் அறியமுடியும்.

*சங்க இலக்கிய வாசிப்பு*

குறிப்பிட்ட வடிவத்தில் அமைந்துள்ள கருத்தை அறிவது வாசிப்பு ஆகும். அந்த வடிவமானது வரி, ஒலி, படம், (காட்சி) எனப் பலவகைகளில் அமையும். அவற்றுள் வரி வாசிப்பானது எழுதப்பெற்ற அல்லது அச்சடிக்கப்பெற்ற வாசகங்களைக் கண்ணால் பார்த்து வாயாலோ மனத்தாலோ உச்சரித்து அறிவால் பொருளுணரும் செயலாகும். கண்ணால் பார்த்து வாயால் சொல்லப்படுபவை எல்லாம் வாசிப்பாகிவிடா. பொருளறிதல் என்ற 'கூறு'ம் இருந்தால்தான் அது வாசிப்பாகும். மேலும் ஓர் இலக்கிய வடிவத்தைப் பார்த்தோ பாராமலோ ஒருவர் வாசிக்க அதைச் செவியாற் கேட்டுப் பொருளறிதலை ஒலிவடிவ வாசிப் பாகக் கருதத்தகும் (செவிவழி வாசிப்பு). அவ்வாறே ஒரு காட்சியைப் பார்த்து அதிலிருந்து ஒரு கருத்தைத் தெரிந்து கொள்வதும் வாசிப்பாகும். ''பிரதியை (படைப்பு) உண்டாக்குபவன் ஆசிரியன் (Author/Encoder). அப்பிரதியிலிருந்து செய்தி பெறுபவன்/ வாசிப்பவன் - வாசகன் (Reader / Decoder). ஓர் ஓவியத்தைப் பார்ப்பவரும், திரைப்படத்தைப் பார்ப்பவரும் வாசகர்களே''[7] என்ற கருத்து இவண் ஒப்புநோக்கத்தக்கது.

*புரிதலும் பயிற்சியும்*

பொதுவாக வரிவடிவ இலக்கிய வாசிப்புக்கு எழுத்தறிவு மட்டுமே போதும். ஆனால் சங்கப்பாடல்களை முழுமையாகப் புரிந்து கொள்வதுற்கு வெறும் எழுத்தறிவு மட்டும் போதாது. மரபிலக்கணமும் தெரிந்திருத்தல் வேண்டும். அப்போதுதான் சங்கப்பாடல்களை முழுமையாகவும் எளிமையாகவும் புரிந்து கொள்ள முடியும். இங்கு மரபிலக்கணம் என்பது அகம், புறம் பற்றிய இலக்கிய மரபு, பொருள்கோள் முறை, இடைச் சொற்களின் தன்மை / செயல், சொல் பிரிப்பு முறை முதலிய வற்றையாம். இவற்றில் அறிதல் இல்லையெனில் சங்கப்பாடல் களின் புரிதல் அரிதாகும். சங்கப்பாடல்களைப் புரிந்து கொள் வதற்குப் பயிற்சியும் இன்றியமையாததாக உள்ளது. தற்கால இலக்கியங்களை மட்டுமே வாசித்து வந்த ஒருவர், சங்கப் பாடலை வாசிப்பாராயின் அவருடைய புரிதல் முழுமை யானதாக இருக்குமா என்பது ஐயத்திற்குரியது. எனவேதான் அமைப்பியலாரும், ''வாசகத்தன்மை, பயிற்சி வழியாகவே வருகிறது. பயிற்சி வழியாகவே மக்கள் எவ்விதத் தொடர்புச் சாதனத்தையும் (சங்கேதங்களையும்) படிக்கக் கற்கிறார்கள்''[8]

என்று குறிக்கின்றனர். இக்குறிப்பு, சங்கப்பாடல் வாசிப்புக்கும் பொருந்துவது அறியத்தக்கது. சங்கப்பாடல்களை வாசிப்பதால் ஏற்படும் நன்மைகள் பல. அவற்றுள் பழைய பண்பாட்டுக் கூறுகளை அறிந்து கொள்ள முடியும். மேலும் அவற்றை வாசிக்கும்போது வாசகச் சிந்தனையில் வளர்ச்சியும் தேர்ச்சியும் ஏற்படும். இவண், ''நமது அன்றாட வாழ்வில் அறிவு பூர்வமாகப் பொருள் நிறைந்த சிந்தனை அமைவது ஊமையின் கனவே''[9] என்ற கருத்து கருதத்தக்கது. ஆயின், ''இலக்கியக் கலை முதலில் கலைஞர் ஒருவர் உள்ளத்தில் அவர்தம் அனுபவமாக எழுந்து வேட்கையோடு படைக்கப்பெற்று, பலருடைய உள்ளத்திலும் ஏறக்குறைய அதே அனுபவத்தை உண்டாக்கி வாழ்கிறது''[10] என்பதை ஒப்புக்கொள்ள வேண்டும். ஆங்கில நூலாசிரியரும் ''நூலாசிரியரின் சிந்தனை வாசகரின் மனத்தில் மீண்டும் சிந்திக்கப்பெறும்''[11] என்பர். எனவே சிந்தனை என்பது தானாக மனத்துள்/மூளையில் எழுவது மட்டுமின்றி, வாசிப்பதாலும் எழும் என்பது விளங்கும். வாசிப்பின் வழிச் சிந்தனை எழுவதும், சிந்திப்பின் வழி வாசிப்பில் புரிதலையடைவதும் அவரவருடைய சொந்த அனுபவங்களைப் பொறுத்து அமையும். வாசிக்கப் பெறும் சங்கப்பாடல் (கருத்து) பற்றிய ஒரு சிறிய அளவேனும் முன்னறிவு இருந்தாலேயே அதை முழுமையாகப் புரிந்து கொள்ளவியலும். இதனை, ''வாசிக்கத் தொடங்கும் முன்பு மனசுக்குள் ஓர் உலகம் இருக்கிறது. உயிரோடும் சுறுசுறுப் போடும் இயங்கும் புறவுலகம் போல இதுவும் இன்னொரு உலகம். மரபு, நம்பிக்கை, லட்சியங்களால் உருவாகும் உலகம். வாசிக்க, வாசிக்க வாசிக்கப்படுகிற விஷயம் மன உலகத்துக்கும் வாசிப்புக்குமான உறவு இது. இந்த உறவுதான் வாசக அனுபவத்தை உன்னதமாக்கவோ அருவருப்பாக்கவோ செய்கிறது''[12] என்ற கருத்தின்வழி உறுதிப்படுத்த இயலும். இலக்கிய நுகர்ச்சி அல்லது வாசிப்பு ஆறு படிநிலைகளில் அமையும் என்று விளக்கிய ஐ.ஏ. ரிச்சர்ட்சும் வாசகனின் புரிதலுக்கு அவனது முந்தைய அனுபவம் இன்றியமையாதது என்பர்[13]. எனவே சங்க இலக்கியம் வாசிப்பதற்கு - சங்கப் பாடல் களை முழுமையாகப் புரிந்து கொள்வதற்கு, சங்கப்பாடல்கள் பற்றிய இலக்கிய மரபுகளைத் தெரிந்துகொள்ள வேண்டியது தேவையாகும். அவற்றைத் தெரிந்துகொண்டு வாசித்தால் சங்கப் புலவர்களுடன் உறவாடுதல் போன்ற, சங்ககால மக்களுடன் வாழ்வது போன்ற ஓர் நிலையை அடைய முடியும். அதன்வழிச் சங்க இலக்கிய இன்பத்தை நுகரவும் சங்க காலப் பண்பாட்டுக் கூறுகளை அறியவும் பின்பற்றவும் முடியும்.

*வாசிப்பும் சமூகவியலும்*

பொதுவாகவே இலக்கிய ஆய்வில் சமூகவியல் அணுகு முறை தழைக்க நான்கு வழிமுறைகளைக் குறிப்பிடுவர். 1. சமுதாயத்தில் இலக்கியத்தின் பங்களிப்பை ஆய்வது. 2. சமுதாயத்தில் இலக்கியம் ஏற்படுத்தியுள்ள விளைபயனை அல்லது தாக்கத்தை ஆய்வது. 3. இலக்கியத்தில் சமுதாயத்தின் பங்கினை ஆய்வது. 4 இலக்கியத்தில் சமுதாயம் உண்டாக்கி யுள்ள விளைபயனை அல்லது தாக்கத்தை ஆய்வது''[14] இந் நான்கையும் இருபிரிவாக்கி நோக்கவியலும். 1. சமுதாயத்தில் இலக்கியத்தின் பங்களிப்பு / தாக்கம். 2. இலக்கியத்தில் சமுதாயத்தின் பங்களிப்பு / தாக்கம். இவற்றில் முதல் பிரிவை அடிப்படையாகக் கொண்டது வாசிப்புப் பற்றிய ஆய்வு. அவ் வகையில் சங்கப்பாடல்கள் சமுதாயத்தில் எத்தகைய பங்களிப்பை அல்லது தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதை வாசிப்பு ஆய்வின்வழி விளக்கமுடியும். ''ஒரு சமூகம் தொடர்ந்து அமைவுறுவதை அதனுடைய மரபுரிமை (Heritage) இளைய தலைமுறையினருக்குச் செல்வதைப் பொறுத்திருக்கிறது''[15] என்று சமூகவியல் சுட்டும்.

இதிலிருந்து தமிழ்ச் சமூகம் தொடர்ந்து அமைவுறுவதற்குக் காரணம் இளைய தலைமுறையினர் மரபுவழிப்பட்ட பண்பாட்டுக் கூறுகளைப் பின்பற்றி வாழ்வதே என்பது புலப்படும். அந்த வகையில் கல்வி நிறுவனத்தின் வழித் தமிழ் மரபுக்குரிய பண்பாடு களை எடுத்தியம்பும் இலக்கியங்கள் இளந்தலைமுறை மாணவர் கட்கு வழங்கப்பட்டு வருகின்றன. அவ்விலக்கிய வாசிப்பின் வழி இளைய தலைமுறையினர் சமூகவயமாகின்றனர் என்பது தெளிவு.

தமிழ்ச்சமுதாயத்தின் பண்டைய பண்பாட்டுக் கூறுகள் சங்க இலக்கியங்களில் பதிவுசெய்யப் பெற்றுள்ளன. அவ்விலக்கியங் களை வாசிப்பதன் வழித் தமிழ்ச் சமுதாயத்தின் பண்பாட்டுக் கூறு களை அறிந்து சமூகவயமாதல் இயல்பு. எனவே சங்க இலக்கிய வாசிப்பும் சமூகவயமாதலுக்கான காரணியாகத் திகழ்கின்றது. எனவேதான் இலக்கியங்கள் தோன்றுவதும் இலக்கியங்கள் பற்றிய நூல்கள் தோன்றுவதும் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன.

**இலக்கியம் - வாசிப்பு**

இலக்கியம் என்பது யாது எனில் ''எந்தக் கருத்தையும் அழகான சொற்களைக் கொண்டு, அழகான முறையில்

அமைத்துக் கேட்போர் (வாசிப்போர்) மனம் உணர்ச்சியோடு எதிர்கொள்ளும் வகையில் கூறுவதே இலக்கியமாகும்''[16] என்பர். மேலும் ''வாழ்வாங்கு வாழ விரும்புவர்க்கெல்லாம் இலக்கியக் கல்வி இன்றியமையாதது. ஏன்? இலக்கியம் என்பது மனித வாழ்க்கையை ஆராய்ந்து கூறும் அறிவியல் ஆகும்''[17] என்றும் இலக்கியக் கல்வியின் முதன்மையை எடுத்துரைப்பர். எனவே இலக்கியக் கல்வி-இலக்கிய வாசிப்பென்பது ஒவ்வொரு மனிதராலும் மேற்கொள்ளத்தக்கதாகும். தனி வாழ்விலும் சமுதாய வாழ்விலும் முரண்பாடுகளுக்கிடையில் வாழும் மக்களுக்கு இலக்கிய வாசிப்பு தேவையாகவே உள்ளது. எனவே தான், ''மனிதன் அறிவால் அறிந்து வாழும் பகுதியைவிட விரும்பியும் வெறுத்தும் நம்பியும் சோர்ந்தும் போற்றியும் தூற்றியும் வாழும் பகுதியே மிகுதியாகும். ஒரு சமுதாயத்தின் விருப்பு வெறுப்பு நம்பிக்கை முதலியவற்றை வளர்த்துப் பண்படுத்துவது அந்தச் சமுதாயத்தின் இலக்கியமே''[18] என்று மு.வ. குறிப்பிடுவர். அத்தகைய இலக்கிய வாசிப்பானது ஒவ்வொருவருக்கும் ஒவ்வொருவிதமாய்ப் பாதிப்பை / தாக்கத்தை ஏற்படுத்துகிறது. இலக்கிய வாசிப்பு வாழ்க்கையின் ஏதாவது ஒரு நிகழ்வில் நேரடியாகவோ மறைமுகமாகவோ அதன் தாக்கத்தை மனத்துள் ஏற்படுத்தி மனிதரை ஒழுங்குபடுத்துகிறது. வெறும் பொழுதுபோக்கிற்கு மட்டுமானதல்ல இலக்கிய வாசிப்பு. இவண், ''இலக்கியம் படிப்பதற்குப் பேரின்பம் அளிக்கிறது; வாழ்க்கைக்கு நேரடியாகத் துணைபுரியும் வழிகாட்டியாகவும் கருத்துக் கருவூலமாகவும் அமைந்துள்ளது''[19] என்ற கருத்து கருதத்தக்கது. இன்று இலக்கியம் தரும் அனைத்து விழுமியங் களையும் சங்க இலக்கியங்களின் தாக்கத்தால் வெளிவந்தவை என்று குறிப்பிடவியலும். காரணம் ஒவ்வொரு இலக்கியமும் தனக்கு முன்னேயுள்ள இலக்கியத்தின் ஏதேனும் சில அல்லது பல கூறுகளைத் தன்னுள் கொண்டுள்ளன. இதனை, ''ஓர் எழுத்தாளரின் படைப்பில் தாக்கம் இருக்கிறதெனின் அத்தாக்கம் அந்த எழுத்தாளர் தமக்கு முந்தைய எழுத்தாளரின் படைப்பைப் படிக்காமல் வருவதில்லை''[20] என்ற கருத்தும் ''இலக்கிய உலகில் இருக்கும் ஒவ்வொருவரும் தமது இலக்கிய மரபினை அறியாமல் இருக்கமுடியாது. தமக்கு முந்தைய காலகட்டங் களில் இருக்கும் (இருந்த) இலக்கிய மரபை எந்த ஒரு படைப்பாளனும் தவிர்த்துவிட முடியாது. அவ்வகையில் மரபு, இலக்கியத்தாக்கத்தில் பெரும்பங்கு வகிக்கிறது''[21] என்ற கருத்தும் அரண் செய்யும். எனவே அத்தகைய தாக்கத்தை ஏற்படுத்த வல்ல, சிறப்பு மிக்க இலக்கியம் தமிழின் தொன்மையான

இலக்கியமான சங்க இலக்கியமே எனல் பொருந்தும். இரஸ்கின் என்ற பேராசிரியர் இலக்கிய நூல்களை அந்த மணிநேரத்துக் குரிய நூல்கள் எந்தக் காலத்துக்கும் உரிய நூல்கள் என்று பாகுபடுத்துவர். அந்த வகையில் எந்தக் காலத்துக்கும் உரிய நூலாகச் சங்க இலக்கியங்கள் போற்றப்பட்டு வந்துள்ளன. எனவேதான் ''நூல்களின் வாழ்வும் அழிவும் நாட்கணக்கில் அல்ல; ஆண்டுக் கணக்கின. எல்லா நூல்களும் அழிவனவல்ல, அவற்றுள் அழியாதன சில உள. அந்தச் சிலவே கலையுலகில் இலக்கியங்களாகப் போற்றத்தக்கன''[22] என்று குறிப்பிடுகின்றனர். எனவே சங்க இலக்கியங்கள் காலத்தின் அழிவைக் கடந்து நிலைபேறு பெற்றுள்ளவையாம். அத்தகைய சங்க இலக்கிய வாசிப்பும் காலந்தோறும் போற்றப்பெறவேண்டும்; போற்றப் பெறும். சங்க இலக்கியங்களை வாசித்தவர்கள் தமது வாசிப்பு அனுபவக் கருத்துகளையும் காலந்தோறும் வெளியிட்டு வருகின்றனர். அவ்வகையில் வ.சுப. மாணிக்கம், தமிழ் மொழிக்கு உயிரும் உடம்பும் என்று மதிக்கத்தக்க சங்க இலக்கியம் என்பது... இல்லற வாழ்வுக்குத் தொடர்பான உலகச் செய்திகளும், இயற்கைச் சூழல்களும், அரசியல், போரியல் நெறிகளும், உயர்ந்த எண்ணங்களும், நல்ல வழக்கவொழுக்கங் களும் நிரம்பவும் தெளிவாகவும் தன்னகத்தே அடக்கி வைத்துள்ளது என்பர்[23]. அவற்றையெல்லாம் சங்க இலக்கிய வாசிப்பின் வழி அறிய இயலும். ஆயினும் அது அனைவராலும் இயலக்கூடியதாக இல்லை.

### தொல்காப்பியமும் சங்க இலக்கிய வாசிப்பும்

சங்க இலக்கிய வாசிப்பில் பொருளறிதல் என்பது எல்லோருக்கும் எளிதாகக் கிட்டுவதன்று. எனவேதான், .... சங்கப்பாட்டிற்குப் பொருள் கண்டு தெளிவது எவ்வளவு அருமை என்பது பற்றியே தொல்காப்பியர் முதலிய ஆசிரியர்களெல்லாம் அந்த அருமைப்பாட்டைக் குறைப்பதற்கு ... முயன்றார்கள் என்பர்[24] தெ.பொ.மீ. அதாவது சங்கப் பாடல்களைப் புரிந்து கொள்வதற்குத் தொல்காப்பியமும் உரைகளும் உதவுகின்றன என்பது கருத்து.

தொல்காப்பியம் சங்க இலக்கியத்தின் வாசிப்பின் வழி அமைந்த இலக்கணம் ஆகும். எனவே வாசிப்புப் பற்றிய கருத்தாக்கம் தொல்காப்பியர் காலத்திலேயே தோன்றிவிட்டது என்பது கருதத்தக்கது. தொல்காப்பியர், சங்கப்பாடல்களை வாசித்து அறிந்ததன் அடிப்படையிலும் அவர்கால மொழி, மரபு, பண்பாடு மற்றும் முந்தைய இலக்கணங்கள் முதலியவற்றின்

அடிப்படையிலும் தனது இலக்கண நூலை அமைத்துள்ளார். தொல்காப்பியத்தில் கூறப்படும் இலக்கணம் ஏதேனும் ஒரு நூற்பா சங்கப்பால்களில் ஒன்றிற்குக்கூடப் பொருந்திவரவில்லை யெனில் அதைத் தொல்காப்பியரின் குறையாகக் கொள்ளக்கூடாது. ஏனெனில் தொல்காப்பியர் காலத்தில் வாசிப்பிலிருந்த அனைத்துப் பாடல்கட்கும் சேர்த்தே அவர் இலக்கணம் செய்துள்ளார். ஆனால் கிடைத்திருப்பவை ஓரளவே (பத்துப்பாட்டும் எட்டுத் தொகையும்).

தொல்காப்பியர் உவமை, உள்ளுறை, இறைச்சி முதலிய வற்றையும் பொருள்கோள் முறைகளையும் விளக்கமாக இலக்கணம் செய்துள்ளார். எனவே சங்கப்பாடல்களில் அவை உண்டென்பது தெளிவு. அவற்றை வாசகன் அறியவும் இன்புறவும் தொல்காப்பியம் பேருதவியாக உள்ளது. சங்கப் பாடல்களின் எதுகை, மோனை மற்றும் அணிகள் முதலிய கூறு களின் அமைவு செவிவழி வாசிப்பின் பொருட்டு மட்டுமன்று; வாசகன் மகிழ்வுறவும்தான். ஆயினும் ஆற்றுநீர்ப் பொருள்கோள் தவிர்த்த ஏனைய பொருள்கோள் அமைவுகள் (அவை செவிவழி வாசிப்பின் பொருட்டேயாம்) வாசகரை வாசிப்பினின்றும் தடைப்படுத்துவதாக உள்ளன. எனினும் சங்கப்பாடல்களின் வாசகர்கட்கு அப்பொருள்கோள் முறைகளைத் தொல்காப்பியர் சுட்டியிருப்பதால் மிகுந்த பயன் விளையும். தற்கால வாசகர்க்குப் பொருள்கோள் முறை மட்டுமன்றிச் சொற்பொருளறிதலிலும் சிக்கல்கள் உள்ளன. ஆயின், ‘பொருள் (Meaning)என்பது சொற்களில் இல்லை, வாசகனிடத்தில்தான் உள்ளது’ என்ற அமைப்பியலாரின் கருத்தின் வழி வாசகன் அந்தச் சொல்லுக் குரிய பொருளைத் தன்னனுபவ வழியிலேயே கண்டிருக்க வேண்டும் அல்லது கண்டுகொள்ளவேண்டும் எனக் கருதவேண்டி யுள்ளது. அமைப்பியலார் குறிப்பிடும் கருத்து, ‘‘எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே’’ என்ற தொல்காப்பிய நூற்பாவுடன் முரண்படுவதாகத் தோன்றும். ஆனால் உண்மை அதுவல்ல; இரண்டும் ஒரு கருத்தினவேயாம். ஒரு செய்தியையே இருவேறு கால, மரபுப் பின்னணியில் குறிப்பன. அதாவது ஒரு சொல் வாசகனால் எவ்வாறு புரிந்து கொள்ளப்பெறுகிறதோ/பொருளறியப் படுகிறதோ அதுவே அச்சொல்லின் பொருளாக அப்போது அமைகிறது. வேறோர் வாசகர் அச்சொல்லுக்கு வேறொரு பொருளை உணரவும் கூடும் என்பது அமைப்பியல். தொல்காப்பிய நூற்பா குறிப்பிடுவது, எல்லாச் சொல்லும் பொருட்களின்(Object)குறியீடுகளாக அமையும் என்பதாகும்.

எனவே அமைப்பியலுக்கும் தொல்காப்பியக் கருத்துக்கும் முரண் பாடில்லை என்பது தெளிவு. தொல்காப்பியர் சங்க அத்திணைப் பாடல்களில் சுட்டி ஒருவர்ப் பெயர் கொளப் பெறாஅர் என்பர்[26]. சங்க அகப்பாடல்களில் பெயர் சுட்டாமைக்கான காரணம் அப்பாடல்கள் வாசகரின் விருப்பத்திற்கேற்பப் பொருளுணருதலைத் தரவேண்டும் என்பதற்காகவும் இருக்கமுடியும். எனவே வாசகரை முதன்மைப்படுத்தும் இலக்கியப்போக்குச் சங்க இலக்கிய காலத்தில் இருந்துள்ளது என்பது அறியத்தக்கது.

மேலும், மேற்குறித்த நூற்பாவின் வழி அகப்பாடல்களில் எந்தப்யெரும் குறிப்பிடலாகாது என்பது மட்டுமன்றி அப்பாடல்களில் ஆசிரியர் பெயரும் சுட்டுதல் கூடாது என்பதும் விளங்குகிறது. ஆசிரியரின் பெயரே கூடப்பாடலின் பொருளை வாசகனிடம் கட்டுப்படுத்தும் என்பதைத் தொல்காப்பியர் அறிந் திருந்தார். மேலும் ஆசிரியர் பெயர் தெரியாத பாடல்கள் மிகுதி யும் (எல்லாம்) அகப்பாடல்களே என்பது இவண் கருதத்தக்கது. முட்டுவேன் கொல்? தாக்குவேன் கொல்?[27]... என்ற பாடலைப் பாடியவர் ஔவையார் என்ற குறிப்பு இருப்பதாலேயே தலைவி கூற்றாகக் குறிக்கப் பெற்றுத் துறை வகுக்கப்பட்டுள்ளது. மேலும் அந்தப்பாடல் முழுவதையும் எந்தக் குறிப்பும் இல்லாமல் வாசிக்கும் ஓர் ஆண் வாசகருக்கு அஃது ஆணின் கூற்றாகவும் விளங்கும் என்பதை மறுக்கமுடியாது. எனவேதான் சங்கப் பாடல்களில் இடம்பெறும் பாத்திரங்களின் பேச்சுக்கேற்ற சூழலை அமைத்துக்கொள்வதில் அப்பாடல்களை வாசிப்பவருக்கு உரிமை உண்டு என்பதை மறுக்கமுடியாது என்று தெ.பொ.மீ குறிப்பிடுவர்[28]. இவண் அமைப்பியலார் கருத்தும் ஒப்புமை யுடையதாக இருப்பது போற்றத்தக்கது. ‘‘எந்தப்பிரதியும் ஒரு குறித்த அர்த்தத்தைச் சொல்லும் தன்முனைப்புக்கு எதிராகத் தன்னையே அழித்துக்கொள்கிறது; மேலும் வாசகர்கள் சொந்த அர்த்தங்களை அதிலிருந்து சுதந்திரமான அர்த்தவியல் ஆட்டத்தின் வாயிலாக உருவாக்கிக்கொள்வதற்கு உரிமையளிக் கிறது’’[29] என்று அமைப்பியலார் குறித்துள்ளனர்.

எனவே தொல்காப்பியர் கூற்றுப்படி அகப்பாடல்களில் எந்தப் பெயரும் இல்லாமல் இருப்பது வாசிப்பில் சுதந்திரத்தை அளிக்கும் என்பது முடிவு. தொல்காப்பியத் தோற்றத்திற்குப் பிறகே திணை, துறைக்குறிப்புகள் பாடல்களில் இடம் பெறலாயின. அதுவும் ஒருவகையான வாசிப்பின் வெளிப் பாடென்றே கொள்ளவேண்டும். தாம் புரிந்துகொண்டதையே மற்றவரும் புரிந்துகொள்ளவேண்டும் என்ற கருத்தோடு அக்

குறிப்புகளை எழுதியுள்ளார். மேலும், அக்குறிப்புகளை எழுதியவர்கள் தொல்காப்பியத்தை மட்டுமன்றிப் பிற பிற்கால இலக்கண நூல்களையும் அடிப்படையாகக் கொண்டு எழுதி யுள்ளார்கள் என்று கருதவும் இடம் உள்ளது. சங்க இலக்கியத்தின் அகப்பாடல்களும் திருக்குறளின் காமத்துப்பாலும் அகத்திணையைச் சார்ந்தவையே. எனினும் சங்கப்பாடல்கட்குத் திணை, துறை வகுத்திருப்பதும் காமத்துப் பாலுக்குத் திணை, துறை வகுக்காமையும் ஒப்ப நோக்கத்தக்கன. திருக்குறள் காமத்துப் பால் பாடல்கள் வாசிப்பவருக்கு விரிவான- சுதந்திரமான பொருளறிதலைத் தருகின்றன. சங்க அகப்பாடல்கட்கும் திணை துறை இல்லாமலிருந்தால் சுதந்திரமான வாசிப்பு, கிட்டும் என்று தோன்றும். ஆயினும் திணை துறை இருந்ததாலேயே பாடல் களைப் புரிந்து வாசித்த காலமும் தமிழகத்தில் உண்டு. அதன் தொடர்ச்சி தற்காலத்து வாசிப்பிலும் மிகுதி.

### உரைகளும் சங்க இலக்கிய வாசிப்பும்

திணை, துறைகளை அடிப்படையாகக் கொண்டே உரை நூல்களும் எழுந்தன. சங்கப் பாடல்களுக்கான உரைகளை மட்டுமே வாசித்து விட்டு அவற்றையே தமது சொந்த வாசிப்பாகக் கருதுதல் சரியன்று. உரை என்பது உரையாசிரியர்களின் வாசிப்பின் பதிவு. அவர்தம் முன்னறிவு, இலக்கிய அனுபவத்திற்கேற்ப அவர்கள் உரையெழுதியுள்ளனர். அதை மட்டுமே வாசித்தல் என்பது சங்கப்பாடல்களைச் சொந்தமாக வாசித்தலுக்கு இணை யாகாது. எந்த ஓர் உரையின் துணையும் இல்லாமல் ஒரு படைப்பை வாசித்தறிதலே சிறந்த வாசிப்பாகும். அதன்வழி உரையாசிரியர்க்குக் கிட்டாத புதிய பொருளும் கிடைக்கும். எனினும் தற்காலத்து வாழும் வாசகர்க்குச் சங்காலப் பின்னணி யோடு பாடல்களுக்குரிய பொருளறிதல் என்பது எளிதன்று. வாசகரின் இக்குறைபாட்டைப் (கடினத்தை) போக்குவதற் காகவே உரைநூல்கள் தோன்றியுள்ளன. ''இலக்கிய ஆசிரியரே தம் அனுபவத்தை ஓரளவுதான் சொற்களால் வடித்திருக்கிறார்; அதைக்கற்கும் அறிஞர் (வாசகர்) அந்தச் சொற்களைக் கடந்து ஆராயும் (வாசிக்கும்) போது அவர்தம் சொந்த அனுபவத்தையே வழிகாட்டியாக அழைத்துச் செல்கிறார்''[30]. எனவே உரை யாசிரியர்களின் உரையின் வழியும் சங்கப்பாடல்களை வாசிப்பது தேவையானதாக உள்ளது. சொற்கள், அவற்றின் பொருள்கள் (Meaning) காலந்தோறும் மாறும் இயல்பின என்று மொழியியல் சுட்டும். (எனினும் எல்லாச் சொல்லும் மாறிவிடுதலும் அன்று) அவ்வகையில் சங்ககாலச் சொற்கள் - தற்காலத்தில் வடிவ

மாற்றமும் பொருள் மாற்றமும் பெற்றிருக்கின்றன[31]. எனவே தற்கால வாசகன் சங்ககாலப் பொருளிலேயே அச்சொல்லை உரைகளின் உதவியோடு அறியவும் தற்காலப் பொருளிலேயே வாசகனுக்கு முதன்மை இருப்பதால் அவனது வாசிப்பு எத்தகைய பொருளறிதலைத்தரினும் அது வாசிப்பு ஆகும். ''ஒரு மொழி இலக்கியப் பழம்பெருமை உடையதாக வளரும்போது பழைய சொல் மறையும் புதிய சொல் நுழையும்''[32] என்பர். அத்தகையதொரு காலகட்டத்தில்தான் உரைநூல்கள் தோன்றி யுள்ளன; ஒரு தனித்துறையாகவும் வளர்ந்துள்ளன. பல்வேறு இலக்கியப் பாடல்களுக்கு நுட்பமான முறையில் வாசித்து, விளக்கமான முறையில் உரையெழுதியமையால் தமிழிலக்கிய வரலாற்றில் நூலாசிரியர்களுக்கு இணையாக உரையாசிரியர் களும் மதிக்கப்பெறுகின்றனர். அதுமட்டுமன்றி, ''மூல நூல்களுக்குள்ள பெருமை உரை நூல்களுக்கும் உண்டு. சில மூல நூல்கள் உரை நூல்களாலேயே பெருமையடைந்துள்ளன''[33] என்ற கருத்தும் மறுக்க இயலாததாகவே உள்ளது. எனவே, சங்கப்பாடல் களை அக்கால மரபோடு புரிந்து கொள்வதற்கு உரையோடு வாசிப்பதும் வேண்டற்பாலது. மூல நூலை-சங்கப்பாடல்களை மட்டும் முதலில் தமது சொந்த முன்னறிவிற்கேற்ப வாசித்துப் பொருளறிந்துவிட்டுப் பின்னர் உரைகளையும் வாசித்துத் தெரிந்துகொண்டால் வாசிப்பு விரிந்த அறிதலைத் தரும். மிகச் சிறந்த வாசிப்பாக அமையும். மேலும் சங்கப்பாடல்களில் உள்ளுறை, இறைச்சி என்ற நுட்பமான வாசக இன்பங்கள் உண்டு. அவற்றை முழுமையாக உணர்வதற்கு உரைநூல் வாசிப்பு மிகவும் பயன்படுகின்றது. இவ்வாறு சங்கப்பாடல்கள் மூலம் மட்டும் இருந்த நிலை மாறி உரைகளும் தோன்றிய பிறகு சங்க இலக்கிய 'வாசிப்பு வேகம்' மிகுந்திருக்கும் என்பதில் ஐயமில்லை, சங்கப் பாடல்களைப் புரிந்து கொள்வதற்குத் தொல்காப்பியம், திணை, துறைக்குறிப்புகள், உரைகள் முதலியவை உதவுகின்றன. எனினும் எல்லா வாசகர்க்கும் சங்கப் பாடல்கள் ஒரே பொருளைத் தருவதில்லை. ஒவ்வொரு வாசகர்க்கும் ஒவ்வொரு விதமான புரிதலைத் தருதலும் உண்டு. இது வாசகரைப் பொறுத்து அமையும் தன்மையது.

**இலக்கியம் ஒன்று பொருள் வேறுவேறு**

''இலக்கிய அனுபவம் (வாசிப்பு) பலர்க்குப் பல வகையாகவும் ஒருவர்க்கே காலத்திற்கேற்பச் சிலவகையாகவும் வேறுபடுகிறது. இவ் வேறுபாடு இலக்கியத்தின் நெடுங்காலக் கவர்ச்சிக்கு ஒரு காரணமாக அமைகிறது''[34] என்பர் மு.வ.

இக்கருத்து சங்க இலக்கிய வாசிப்புக்கும் பொருந்தியுள்ளது. சங்க இலக்கியத்தை வாசித்தவர்கள் ஒவ்வொரு விதமாகப் புரிந்து கொண்டுள்ளனர். சங்கப் பாடல்களின் பொருளை அறிவதற்கு உதவியாகத் திணையும் துறையும் அமைக்கப் பெற்றுள்ளன. அதனால் பொருள் ஒரு குறிப்பிட்ட அளவில் நின்றுவிடுகிறது. எனவே ஒரே பாட்டு ஒவ்வொரு வாசகர்க்கு ஒவ்வொருவிதமான புரிதலைத்தரும் என்ற அமைப்பியல் கருத்துக்குச் சங்கப்பாடல்களில் பேரளவு இடமில்லை. எனினும் காலந்தோறும் அவ்வப்போது சங்க இலக்கிய வாசிப்பால் பொருள் பற்றிய மாற்றுக்கருத்துகள் தோன்றிவந்துள்ளன.

***சான்று : 1***

சங்கத் தமிழ்ப்பாடல்களைப் பிற நாட்டு வீரயுகப்பாடல் களுடன் ஒப்பிட்டு ஆய்ந்தவர் கைலாசபதி. அவர் தமது ஆய்வு முடிவாகப் பழந்தமிழ்ப்பாடல்கள் - சங்கப்பாடல்கள்- பௌரா கூறியுள்ள வீரயுகப்பாடல்களின் எட்டு வகையான இலக்கணங் களுடன் பொருந்தியுள்ளது என்பர்[35]. அதன்வழிச் சங்கப் பாடல்கள் தமிழ்நாட்டு வீரயுகப்பாடல்கள் என்று முடிவுரைப்பர். ஆனால் தெ.பொ.மீ, பாணர்கள் வாய்மொழியாகப் பாடி வந்ததைப் பின்பற்றிக் கற்றுவல்ல சங்கப் புலவர்கள் பாடியமையால்-பாணர் களின் பாட்டுக் கூறுகள் புலவர் பாடல்களிலும் அமைதல் இயல்பே. இதனை மறந்து-இந்தக்கூறுகள் இருந்தாலேயே சங்கப் பாடல்கள் எல்லாம் வீரயுகப்பாடல்கள் என்று கூறுவதற் கில்லை[36] என்று மறுத்துரைப்பார். இவ்வேறுபாடு சங்கஇலக்கிய வாசிப்பின்-இருவேறு வாசிப்பின் வெளிப்பாடாகத் தோன்றுகிறது.

***சான்று : 2***

*''பாட்டுரை நூலே வாய்மொழி பிசியே*
*அங்கதம் முதுசொல்லொ டவ்வேழ் நிலத்தும்*
*...........................................*
*யாப்பின் வழியது என்மனார் புலவர்''*

**(தொல் : பொருள் : செய் : 75)**

என்ற நூற்பாவில் வரும் 'யாப்பின் வழியது' என்ற தொடருக்கு இளம்பூரணர் யாப்பின் பகுதி என்று பொருளுரைக்கின்றார். ஆனால், சி. பா. அதற்கு மாறாக, பாட்டு முதல் முதுசொல் வரையான ஏழு பிரிவுகளும் தொல்காப்பியர் காலத்து வழங்கிய இலக்கிய வகைகளாகும் என்பர் [37]. இவ்வேறுபாட்டின் அளவு சிறியதாயிருப்பினும் அது வேறுபாடே. அவ்வகையில் இவ்விருசாரார் வாசிப்பு இருவேறு நிலையில் பொருளறிதலைத் தந்தது என்பது வெளிப்பாடு.

*சான்று : 3*

''தொகை நூல்களில் பிறவற்றின் அமைப்பையும் பரி பாடலின் அமைப்பையும் நோக்கினால் ஓர் உண்மை தெளிவாகப் புலப்படுகின்றது. புறத்தொடு அகமும், அகத்துள் புறமும் இடைமிடைதற்குப் பிற நூல்களில் இடமில்லை''[38] என்பர் ம. ரா. போ. குருசாமி. ஆனால் ச. கணபதிராமன், புறநானூற்றின் 83, 84, 85 (நக்கண்ணையார்), 273 (எருமை வெளியனார்) ஆகிய நான்கு பாடல்களும் புறத்திற்கு அப்பாற்பட்டவை என்றும் அவை அகப்பாடல்களே என்றும் குறிப்பிடுவர்[39]. இவ்விருவருடைய சங்க இலக்கிய வாசிப்பும் வேறுபட்டதாக உள்ளது.

*சான்று : 4*

மண்திணிந்த நிலனும் .... என்ற புறநானூற்றுப் பாடலின் 12, 13, 14, 15 ஆகிய அடிகள்,

'அலங்குளைப் புரவி யைவரொடு சினைஇ
நிலந்தலைக் கொண்ட பொலம்பூந் தும்பை
ஈரைம் பதின்மரும் பொருதுகளத் தொழியப்
பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தோய்'

என்று வரும். இவ்வடிகளுக்கு வரலாற்றாசிரியர் ஆ. இராமகிருட்டிணன், பாண்டவர் கௌரவர் ஆகிய இருபடை யினருக்கும் தமிழ் மன்னன் உணவளித்தான் என்று பொருள் கொள்வர்[40]. ஆனால் வ. சுப. மாணிக்கம் அதற்கு மாறுபட்ட பொருளை-சேரன் பாண்டவர்க்குத் துணைப்படை அனுப்பினான்; நூற்றுவர் ஒழியத் தன்படைக்குப் பெருஞ்சோறளித்தான் என்று-விரிவாக விளக்கியுரைப்பார்[41].

*சான்று : 5*

அதேபோல் நச்சினார்க்கினியரின் உரையை, சங்க இலக்கியத்தில் இனக்குழு வாழ்க்கை பற்றி ஆய்வு செய்து எழுதிய கா. சுப்பிரமணியன், ''இனக்குழுவாழ்க்கையின் அமைப்பைக் கவனியாது நச்சினார்க்கினியர் வெறியாடலில் சிறுபான்மை குறவன் மகளும் பங்கு பெறுவாள் எனக்குறித்தார். நாகரிகம் வளர்ச்சியடைந்த சமுதாயத்தில் வாழ்ந்த அவர் தமக்குப் பல நூற்றாண்டுகட்கு முன்னிருந்த சமுதாயத்தின் தன்மையை அறியாமல் அவ்வாறு கூறியுள்ளார் எனக் கொள்ளவேண்டும்''[42] என்று மறுப்பார். நச்சினார்க்கினியரின் வாசிப்பும் சுப்பிரமணியத் தின் வாசிப்பும் வேறுபடுவது விளங்கும். இவற்றிலிருந்து சங்க இலக்கியங்கள் சிலருக்கு ஒரே பொருளைத்தராமல் வெவ்வேறு பொருள்களைத் தருகின்றன என்பது புலப்படும். அஃது ஏன்

எனில் ''குறிப்பிட்ட வேறுபாடுகள், கலாச்சாரம் தாண்டிய பிரதி களை அர்த்தம் கொள்ளும்போது வாசகரைப் பதிக்கின்றன''[43] என்பதாலேயாம்.

சங்க இலக்கிய வாசிப்பு வளர்ந்து செழித்த நிலையில் அத்தகைய பொருள்வேறுபாடுகள் தோன்றுவதும் இயல்பு. வாசிப்பைத் தொல்காப்பியம் ஓதல் என்று குறிக்கும். வாசிப்பு முதன்முதலில் ஒலி வடிவிலேயே இருந்துள்ளது. ஆயின் வாய்மொழியாகவே சங்க இலக்கியம் இருந்துள்ளது. எழுத்தின் தோற்றத்திற்குப்பின் ஓலையில் சங்க இலக்கியத்தை எழுதி, எழுதியதை வாசித்துள்ளனர். அதனைத்தொடர்ந்து தாள், மை முதலியனவற்றின் தோற்றத்தாலும் அச்சு எந்திரத்தின் வருகை யாலும்-வாசிப்பு, படிப்படியாக மாற்றம் பெற்று வந்துள்ளது. அதனை இப்பகுதியில் சங்க இலக்கியம் வழி விளக்கி ஆய்வு செய்யப்படும்.

**ஒலி:ஓலை:ஓதல்**

எழுத்து தோன்றுவதற்கு முன் ஒலி தோன்றிவிட்டது. ஒலி இயற்கையானது. எழுத்து செயற்கையானது. ஒலியின் அடையாள மாகவே-குறியீடாகவே எழுத்து அமைந்துள்ளது. அத்தகைய ஒலியின் அடிப்படையிலேயே வாசிப்பு தோன்றியுள்ளது. இதனைக் கீழ்வரும் படிநிலை வளர்ச்சி விளக்கும்.

ஒலி → ஒலிக்கும் → ஒலித்தல்
ஒல் → ஒல் → ஓலை
ஓசை → ஓதை → ஓதல்.

'ஒல்' என்ற சொல் 'ஒலி' என்பதன் அடிச்சொல்லாக உள்ளது. ஒல் என்பது ஒலி என்பதன் வினையடியாகவும் இருக்கமுடியும் (தெள்-தெளி-தெளிவு). ஒல் என்ற சொல் சங்க இலக்கியத்தில் ஒலிக்குறிப்பாக வந்துள்ளது. 'ஒல்'லென ஒலிக்கும் (அகம்: 160). இந்நிலையைத் தொடர்ந்து ஒலி, ஒலித்தல் என்ற சொற்கள் வழக்கிற்கு-நடைமுறைக்கு வந்துள்ளன[44]. ஒல் + இ > ஒலி = வல் + இ > வலி > வலிமை. மிகப் பழங்காலத்தில் சங்க காலத்திற்கு முன்பே 'ஒலித்தல்' என்பது தோன்றிவிட்டது. இதனைப் பண்டைத் தமிழரின் ஒலி உணர்வு பற்றி ஆய்வு செய்தவரின், ''இயற்கைச் சார்பு வாழ்க்கையின் ஒரு கூறாகவே பண்டைத்தமிழரின் ஒலியுணர்வும் இசையுணர்வும் அமைந்தள்ளது''[45] என்ற கருத்தின் வழி உறுதி செய்துகொள்ளவியலும். 'ஒல்' என்ற சொல் 'ஒலி' என்று மாறிய பின்னர் அதற்கு இணையாக 'ஓசை' எனும் சொல் பயிலப்பட்டு வந்துள்ளது. ஓசை என்ற சொல் சங்க

இலக்கியத்தில் பல்வேறு இடங்களில் பயின்று வந்துள்ளது[46]. பின்னர் ஓசை என்பது 'ஓதை' என்று மாறி வந்துள்ளது. மொழி யியலின் கருத்துப்படி, 'ச்'-க்கும் 'த்'-க்கும் தொடர்பு உண்டு[47]. ஓசை என்ற பொருள்பட ஓதை என்ற சொல் மலைபடுகடாஅத்தில் இரண்டு இடங்களில் வந்துள்ளது[48]. 'ஓதை' என்ற சொல் ஓசையைக் குறித்த பின்பு ஒலித்தல்/ஓசையைச் செய்தல் என்ற பொருளில் ஓதை, 'ஓதல்'-என்று மாற்றம் பெற்றிருக்க வேண்டும்[49]. தொல்காப்பியம் கல்வி பயிலுதலை 'ஓதல்' என்று குறிக்கிறது[50]. தொடக்க காலக்கல்வி வெறும் வாசிப்பாக - ஒலித்தலை/வாய்மொழிப் பாடல்களைச் செவிவழிக் கேட்டலாக இருந்துள்ளது; ஒப்பித்தலாகவும் இருந்துள்ளது என்பது இதன் வழி விளங்கும். மேலும்-இயல் எனும் பொருள்படும்படியான வரிவடிவ நூற்பாக்களின் தொகுப்பு, பிற்காலத்தில் (உரையாசிரியர் காலம்) 'ஓத்து' என வழங்கப்பட்டிருப்பதும் இவண் கவனிக்கத் தக்கது. ஓத்து > ஓதுகை (வாசித்தல்) ஓத்து > இயல்[51].

சங்க இலக்கியத்தில் கற்கை, கற்றல், கற்பின் போன்ற சொற்கள் இருந்தும் கல்வி பயிலுதலைக் குறிக்க 'ஓதல்' என்ற சொல்லைப் பயன்படுத்துகிறார் தொல்காப்பியர். எனவே தம் காலத்து மிகுதியாய் வழக்கிலிருந்த ஆசிரியரின் வாய்மொழிப் பாடங்களை, மாணவர்தம் செவிவழிக்கேட்டு அறிந்து மீண்டும் வாசித்துக் காட்டிய கல்வி முறையைக் 'கற்றல்' என்னாது 'ஓதல்' என்றார் என்று முடிவு செய்யவியலும். அதுமட்டுமன்றி, கற்றல், கற்கை முதலிய சொற்கள் தொழில் முறைகள், போர்முறைகள் முதலியவற்றைக் கற்றறிதலையும் குறிக்கும். ஆனால் 'ஓதல்' என்பது முழுக்க முழுக்க, பாடங் கேட்டலை/ ஒப்பித்தலை, மீண்டும் மீண்டும் வாசித்தலை மட்டும் குறிப்பிடுவதால் அவர் கல்வி பயிலுகையை ஓதல் என்று குறித்துள்ளார். மேலும் கல்வி பயிலுதலாவது இசையோடு கூடிய/ஒலிநயம் மிக்கதாக இருந்துள்ளது[52]. அதனைக் குறிக்கப் 'பாடுதல்' என்றும் பொருள் படும்படி[53] 'ஓதல்' என்று குறித்துள்ளார் தொல்காப்பியர். மேலும் 'கல்வி' என்ற சொல்லைத் தொல்காப்பியரே பயன்படுத்துகிறார். அச்சொல்லுக்கு வித்தை, பயிற்சி என்று பொருள்படும்[54]. மேலும் ஓதல் என்ற சொல் வாய் அசைத்துப்பாடுதலைக் குறித்ததால் அதுவே வாசித்தலானது. ஏடுகள் தோன்றியபின் வரிவடிவுக்கும், இசைக்கருவிகள் தோன்றிய பின் அவற்றை மீட்டுதற்கும் வாசிப்பு என்ற சொல் பயன்பாட்டில் வந்துள்ளது. அவ்வாறே 'பாட்டுப் படிச்சேன்' என்ற நாட்டுப்புற வழக்கின்படி வாசித்தல்-படித்தல் ஆக மாறிவிட்டது. மேலும் ஓலையில் படி எடுத்து

வாசித்ததைப் 'படித்தல்' என்று குறிப்பிட்டுள்ளனர் எனவும் கருத முடியும். அடுத்து 'ஒல்' என்பது 'ஓல்' என மாற்றம் பெறுதல். ஒல் > ஓல் = பெடை > பேடை[55] கொள் = கோள்

ஒலி, ஒலிக்குறிப்புப் பொருள்களில் ஒல், ஓல் ஆகிய இரண்டு சொற்களும் பயின்று வந்துள்ளன. கலித்தொகையில் 'அருவி ஒலியின்[56] என்ற தொடர் அமைந்துள்ளது. 'அருவி செய்யும் ஒலியின்' என்ற பொருள்படும்படி அத்தொடர் வருகின்றது. இந்த் 'ஒல்' என்ற சொல்லின் வழியாகவே 'ஓலை' என்ற சொல் தோன்றியிருக்கிறது. சலசலப்பு என்பது ஒலித்தலைக் குறிக்கும். 'பனங்காட்டு நரி சலசலப்புக்கு அஞ்சாது' என்ற பழமொழியின் வழி-சலசலப்பை ஏற்படுத்துவதால்/ஒலியை விளைவிப்பதால் பனையின் இலைக்கு - ஓலை என்ற பெயர் வந்திருக்கவேண்டும். அதைத்தொடர்ந்தே தென்னைக்கும் ஓலை எனப்பெயர் வந்திருக்க வேண்டும். மேலும், தமிழ்ப்பேரகராதி ஓல் = ஒலி, ஓலம் = சத்தம் என்று குறித்தல் இவண் அறியத்தக்கது[57]. பழந்தமிழர்கள் ஒலி வாசிப்பாகிய வாய்மொழி/செவிவழி வாசிப்பைத் தொடர்ந்து ஓலையில் வாசிக்கும் முறைக்கு மாறியுள்ளார்கள். இது இயற்கை யோடு சேர்ந்த வாழ்வுமுறையின் பரிணாமமாக மாறியுள்ளது. சங்க இலக்கியத்தில் 'ஓலை' என்ற சொல் பல்வேறு இடங்களில் அமைந்துள்ளது[58]. இந்தச் சொல்லின் தோற்றம் மொழியியலார் கருத்துப்படி வினையடியுடன் உயிர் நீளல், 'ஐ' சேரல் ஆகிய கோட்பாடுகளைக் கொண்டது.[59] நக்கு > நாக்கு, மின் மீன், வெல் > வேல் - இவை உயிர் நீண்டன. வில் > விலை (ஐ சேர்ந்தது). அதன்படி ஒல் > ஓல் > ஓலை வடிவத்திற்கு மாறியது. இவ் விரண்டிற்கும் இடையில் வரிவடிவம் தோன்றியுள்ளது. பழங் காலத்தில் திண்ணைப்பள்ளியில் பாடம் பயின்றோரை ஓலைக் கணக்கர் என்பர். அதேபோல் பாடங்கள் (பாடல்கள்) அடங்கிய ஓலையை ஓலைக்கதவு என்றும் குறித்துள்ளனர்[60]. மேலும் பழங் காலத் தமிழகத்தில் குடவோலை முறை இருந்தமையையும் உணவுமுறையில் பனங்கிழங்கு, பனைநுங்கு முதலியன இடம் பெற்றிருந்ததையும் வரலாறுகள் தெரிவிக்கின்றன[61]. இவற்றி லிருந்து பழங்காலத் தமிழர்தம் ஒலிப்பற்றையும் அதன்வழி ஏற்பட்ட ஓலைப்பற்றையும் அறியமுடியும். எனவே ஒல் > ஒலி > ஓசை > ஓலை > ஓதை > ஓதல் என்பது புலப்படும்.

### வாய்மொழிக்கல்வியும் செவிவழி வாசிப்பும்

ஓலைச்சுவடியில் வரிவடிவில் வாசிப்புத் தோன்றுவதற்கு முன் வாய்மொழி/செவிவழி வாசிப்பாகவே இருந்துள்ளது. திண்ணைக்கல்வி முறையிலும் அம்முறையே பெருவழக்கு. பழங்காலத்திண்ணைப் பள்ளிக்கூடங்களில், சங்க இலக்கியப்

பாடல்களை முதலில் ஆசிரியர் படித்துக்காட்டுவர்; மனப்பாடம் செய்துவரும்படியாக மாணவர்களுக்குச் சொல்வர். பாட்டை மனனம் செய்து மாணவர்கள் ஒப்புவித்த பின்பே ஆசிரியர் அந்தப்பாடலுக்கான பொருள், கருத்து, விளக்கம் எல்லாம் சொல்லிக் கொடுப்பர். அந்தக்காலத்தில் பார்த்து வாசிக்கும் கடமை இல்லை; கேட்டுத் தெரிந்து கொள்ளும் நிலையே இருந்தது. எந்த நூலையும் மனப்பாடம் செய்து கற்றலே பழங் காலக்கல்வி முறையாக விளங்கியுள்ளது ... மாணாக்கர் பயிலும் முறையில் 'பாடம் போற்றல்' என்பதும் ஒன்று. பாடம் போற்றலாவது மனப்பாடம் செய்தலேயாம். உரையாசிரியர்கள் காட்டும் சான்றுகள் பலவும் அவர்கள் மனப்பாடத்திலிருந்து தோன்றியவையாகும்[62] என்ற குறிப்பிலிருந்து சங்கப்பாடல்கள் வாய்மொழியாக இசைக்கப்பட்டு, செவிவழியாகக்கேட்டு வாசிக்கப் பெற்றன என்பது புலனாகும். மேலும், எட்டுத் தொகை, பத்துப்பாட்டு, பதினெண்கீழ்க்கணக்கு முதலிய தொகை நூல்கள் முதலில் எழுத்துவடிவில் உருவாகவில்லை. அப்பாடல்களைக் காதால் கேட்டவர்கள் நினைவில் வைத்திருந்து பிறகுதான் எழுதினார்கள்[63]. சங்கப்பாடல்களை ஆழ்ந்து வாசித்து ஆய்வுசெய்த அறிஞர் தரும் கருத்துகள் இவண் குறிப்பிடத்தக்கன. "இன்று கற்றறிந்த புலவர்கள் மட்டுமே அறிந்ததாய், இலக்கணமும் செறிவும் உடையதாகக் காணப்படும் வெண்பா, அகவல் முதலிய யாப்பு வகைகளின் தோற்றத்தை ஆராய்ந்தால் அவைகளும் ஒருகாலத்தில் இலக்கணம் அறியாமல் மக்கள் பாடிவந்த நாட்டுப் பாடல்களிலிருந்து தொடங்கின என்று உணரலாம்"[64]. மேலும் சங்க காலத்தை வீரயுகக்காலமென்றும் சங்கப்பாடல்கள் வீரயுகப் பாடல்கள் என்றும் அப்பாடல்கள் வாய்மொழிப்பாடல்களாகப் பாணர்களால் பாடப்பெற்றவை என்றும் விளக்குவார் கைலாசபதி[65]. அவரே சங்க காலப் பாடல்களான சான்றோர் செய்யுள்கள் மரபுவழிவந்த வாய்மொழிப் பாடல்களே என்றும் உறுதிபடக் குறிப்பிடுவர்[66]. இரண்டு தனிச்சொற்களைச் சேர்த்து எழுதும்போது இடையில் ஒற்று மிகுமாறு எழுதுவது வழக்கம் (மிக + பெரிது = மிகப்பெரிது). அவ்வாறு எழுதுவதன் காரணம் பழங்காலத்தில் காதால்கேட்ட ஒலியை ஒலித்ததை அப்படியே எழுதிவைத்த பழக்கம்தான்[67] என்று மு.வ. குறிப்பிடுவதிலிருந்து எழுத்து மொழி தோன்றுவதற்கு முன்பே இலக்கியம் வாய்மொழி யாகத் தோன்றிவிட்டது என்பது புலப்படும். வாய்மொழிப் பாடல்களைச் செவி வாசிப்பின் வழிப் பழங்காலத் தமிழர்கள் கேட்டறிந்தனர் என்பதற்கு, சங்கப்பாடல்களிலும் சான்றுகள் உண்டு.

'வள்ளியோர் செவி முதல் வயங்குமொழி வித்தி,[68]

'பொய்த்தலறியா உரவோன் செவிமுதல்
வித்திய பனுவல் விளைந்தன்று நன்று'[69]

'செதுமொழி சீத்த செவி செறுவாக
முதுமொழி நீராப் புல் நா உழவர்'[70]

'ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி'[71]

இப்பாடலடிகளின் கருத்துப்புடி, செவிவழி வாசிப்புச் சங்க காலத்தும் போற்றப்பட்டது என்பது தெளிவு. தொல்காப்பியர் இலக்கியத்தைப் பா, பாட்டு என்று பல இடங்களில் குறிப்பர். வாய்மொழியாகப் பாடுவது பாட்டு (சான்று-செய்யுளியல் நூற்பாக்கள் 75, 166, 173) அதுமட்டுமன்றி, சங்கப்பாடல்களின் யாப்பைக் குறிப்பிடும்போது,

''பாட்டுரை நூலே வாய்மொழி பிசியே
அங்கதம் முதுசொல் ...''[72]

என்று பிரிப்பர். இப்பிரிவுகளை நுட்பமாக நோக்கினால் ஏழில் ஆறு பிரிவுகள் வாய்மொழியோடு தொடர்புடையன என்பது புலப்படும். பாட்டு - வாயால் பாடுவது; உரை - வாயால் உரைப்பது; நூல் - வாயால் நுவல்வது (சொல்வது); வாய்மொழி - வாயால் மொழிவது; பிசி - வாயால் புதிர் போடுவது; முதுசொல் - வாயால் பழமொழி சொல்வது. எனவே சங்கப் பாடல்கள் வாய்மொழி இலக்கியமாக வாசிக்கப்பெற்று, பிறகே ஏட்டிலக்கியமாகப் பரிணமித்தன என்பது விளங்கும். மேலும் நூல் என்பது, நுவல் (சொல்) என்ற வினையினின்றும் தோன்றிய பெயராக இருப்பதும் வாய்மொழி இலக்கியமாக இருந்தே சங்கப் பாடல்கள் ஏட்டிலக்கியமாக மாறியுள்ளன என்பதற்குச் சான்று. அதேபோல் 'உரை' என்ற சொல்லும் வாய்மொழிக் கல்வியை உணர்த்துவதாக இராமசுந்தரம் குறிப்பிடுவது[73] இவண் ஒப்பு நோக்கத்தக்கது.

வாய்மொழி இலக்கியத்திற்குரிய வரையறைக்கும் சங்க அகப்பாடல்களுக்குரிய அடிப்படை இலக்கணத்திற்கும் பெரிய ஒற்றுமை உண்டு. ''வாய்மொழி இலக்கியம் தனி ஒருவர் பெயரைக் குறிப்பிடாது. அதை மறைமுகமாகக் கேலிப்பெயர் அல்லது பட்டப் பெயராக வெளியிடும்''[74] என்று வாய்மொழி இலக்கியத்தின் வரையறைகளுள் ஒன்றாகக் குறிப்பர். தொல்காப்பியம்,

''மக்கள் நுதலிய அகன் ஐந்திணையும்
சுட்டி ஒருவர்ப் பெயர் கொளப் பெறாஅர்''[75]

என்றவாறு அகப்பாடல்களில் பெயர்சுட்டி வருதலில்லை என்பதைக் குறிக்கும். எனவே சங்க அகப்பாடல்கள் வாய்மொழிப் பாடல்களாக வாசிக்கப்பட்டன என்பது முடிவு. அவ்வாறே புறப்பாடல்களும் வாய்மொழியாக இருந்து செவிவழி வாசிப்பாக நுகரப் பட்டுள்ளன. இதனைச் சங்கப்பாடல்களில் பல அந்தாதித் தொடையில் அமைந்திருப்பதைக் கொண்டு நிறுவமுடியும்.

''மண் டிணிந்த நிலனும்
நிலனேந்திய விசும்பும்
விசும்பு தைவருவளியும்
வளித்தலைஇய தீயும்
தீ முரணிய நீரும்
...........''

இந்தப் புறநானூற்றுப் பாடலின் அடிதொறும் அந்தாதித் தொடை அமைந்துள்ளது.[77] அவ்வாறே பதிற்றுப்பத்தில் நான்காம் பத்துப் பாடல்கள் ஒருபாடலின் முடிவு அடுத்த பாடலின் தொடக்கமாக அமைந்துள்ளது. அந்தாதித் தொடையின் இன்றியமையாமையானது செவிவழி வாசிப்பின் தேவையே. பாடல்களை மனனம் செய்து, தேவையானபோது வாசிக்க (ஒப்பிக்க/சொல்ல) வேண்டிய தேவை இருந்ததால் செவிவழி ஏற்புக்கும், வாசிப்புக்கும் எளிமை கிடைக்கும் பொருட்டு அந்தாதித் தொடையில் பாக்களை ஆக்கிச் சங்கப்புலவர்கள் போற்றியுள்ளனர். அவ்வாறே பொருள்கோள்முறைகளை வகுத்திருப்பதிலும் செவிவழி வாசிப்பின் பயன்பாடு போற்றப்பட்டுள்ளது.[78] அதனாலேயே ஆற்றுநீர்ப்பொருள்கோள் தவிர்த்த ஏனைய பொருள்கோள் முறைகளும் தொல்காப்பியத்தில் வகுக்கப்பட்டுள்ளன. இதிலிருந்தும் சங்கப்பாடல்கள் வாய்மொழியாக/செவிவழியாக வாசிக்கப்பட்டன என்பது வெளிப் படை. சங்கம்மருவியகால நூலான திருக்குறளிலும் 'கல்வி' பற்றிய குறட்பாக்கள் 'கேள்வி' தொடர்புடையனவாக உள்ளன. எனவே ஓலைச்சுவடி தோன்றிய பின்பும் செவிவழி வாசிப்பு இருந்தது என்பது புலப்படும். சங்ககாலக் கல்வி முறையின் பாதிப்பால் தொடர்ந்த நிகழ்வு இது. குறளுக்குப்பின் தோன்றிய இலக்கண நூலான நன்னூலிலும் மாணவர் நூல் கற்கும் முறையைக் குறிப்பிடுகையில்,

''.......... கேட்டவை நினைத்தல்
ஆசான் சார்ந்தது அவை அமைவரக் கேட்டல்''[79]

என்று செவிவழிப் பாடங்கேட்டல் விளக்கப்படுகிறது. மேலும் பாடங்கேட்கும் முறையை விளக்கும்போது

''செவி வாயாக நெஞ்சு களனாகக்
கேட்டவை கேட்டவை விடாது உள்ளத்து அமைத்து''[80]

என்று பவணந்தியார் சுட்டுவார். அது மட்டுமன்றி,

''ஒருகுறி கேட்போன் இருகால் கேட்பின்
பெருகு நூலில் பிழைபாடு இலனே''[81]

என்றும்

''முக்கால் கேட்பின் முறை அறிந்து உரைக்கும்''[82]

என்றும் கேட்டு வாசித்த நிலையைச் சுட்டுவர். எனவே மிகப் பழங்காலந் தொட்டு, செவிவழி வாசிப்பது தமிழ் மரபில் போற்றப்பட்டு வந்துள்ளது புலப்படும். ஆகவே சங்கப்பாடல் களும் மிகப் பழங்காலந்தொட்டு, செவிவழி வாசிக்கப்பட்டு வந்துள்ளன என்பது முடிவு.

**வாசிப்பும் இசையும்**

''சங்ககால இசை பழந்தமிழ் இசை - பண்பட்ட இசை வளர்ந்த செழித்த வளமான இசை'' (ச. மெய்யப்பன், இசையியல், ப. 5) என்ற கருத்தினின்று சங்ககாலத்தமிழர்கள் இசையீடுபாடு கொண்டிருந்தனர் என்பது விளங்கும். அவ்வீடு பாடு அவர்தம் வாய்மொழி இலக்கிய வாசிப்பிலும் அமைந் திருக்க வேண்டும். தமிழின் - இயல், இசை, நாடகம் என்ற மூன்று பெரும்பிரிவுகளில் இசையே தொன்மையானது. இயற்கை தோன்றிய போதே ஒலியும் அதன்வழி இசையும் தோன்றி யிருக்கவேண்டும். எனவே, இயற்கையோடு இயைந்து வாழ்ந்த தமிழர்களின் சங்க இலக்கிய வாசிப்பில் இசை இருந்துள்ளது என்பது தெளிவு. மேலும், வரி, வாசி ஆகிய சொற்கள் இசை யோடு தொடர்புடையனவாய் உள்ளன. இசைப்பாட்டின் பெயர் களுள் 'வரி' என்பது முதல்வகை என்றும் ஏழிசையோசைகளில் 'வாசி' என்பதும் ஒன்று என்றும் வெற்றிச்செல்வன் குறிப்பிடுவார் (இசையியல் ப. 18, 19). வாய்மொழியாக இருந்த இலக்கிய வாசிப்புக்கு இசையின் தேவையும் இருந்துள்ளது. மனப்பாடம் செய்வதற்கு இசை உறுதுணையாகும் என்பது தற்காலத்தும் உண்மை. இசையை மந்தம் சமம் வன்மம் என்று மூன்று வகைப்படுத்துவர். இவற்றில் வாசிப்புக்குரியது 'சமம்' என்ற வகையாகும். மூன்று வகைகளுமே உணர்ச்சி மிக்க வாசிப்புக்கு ஏற்றவைதாம். எனினும் 'சமம்' என்பதே பேரளவு பயன்பாட்டில் இருந்துள்ளது; இன்றும் தொடர்கிறது. இசை என்பது பாடல்களில் இருப்பதைக் காட்டிலும் வாசிப்பவர் மனத்தில் இருந்தாலேயே இசைத்து வாசிக்க இயலும். பாடல்

கட்குப் பண் வகுத்தவர்கள் பாடலாசிரிர்கள் அன்று; பிற்காலத்து வாசகரே. அவர்கட்குத் தெரிந்த பண்ணை அவர்கள் அப்பாடல் கட்குப் பொருத்தி வாசித்துள்ளனர். அந்தப் பண்களையே அப்பாடல்களிலும் குறித்துள்ளனர். பண் குறிக்கப்பெறாத சங்கப் பாடல்களிலும் இசை உண்டு. அத்தகைய இசைத்தன்மை கொண்டோரே அவ்விசையைப்புரிந்து இசைத்து வாசிக்க இயலும். அவ்வாறான ''இசையின் வளர்ச்சி, தம்மைப் பொறுத்த வரையில் ஒருவகை மொழியின் வளர்ச்சியாகவே கொள்ளப் பெற்றுப் பேணப்பட்டு வந்துள்ளது'' (வெற்றிச்செல்வன், இசையியல் ப. 17) எனவே வாய்மொழி/செவிவழி வாசிப்பில் இசை இடம் பெற்றிருந்தது என்பது தெளிவு.

**சங்க இலக்கிய வாசிப்பும் ஓலைச்சுவடிகளும்**

வாய்மொழி/செவிவழி வாசிப்பு முறையை அடுத்து எழுத்து தோன்றியது, எழுத்துமுறை-வரி வடிவம் நடைமுறைக்கு வந்தபின் பாடல்களை ஓலைகளில் எழுதி வைத்தனர். ஓலையில் எழுதி வாசிக்க வேண்டிய தேவை ஏற்பட்ட நிலையைச் சுவடியியல் ஆய்வாளரின் கருத்தால் தெளியவியலும். ''வாய்மொழி வழி யாகக் குறிப்பிட்ட ஒருசில நூல்களை மட்டும் கற்க முடிந்தது. மேலும் பல நூல்களையும் உரைகளையும் கற்க வேண்டிய நிலையில் ஏடுகளில் எழுதிப் படித்தனர்.''[83] இக்கருத்தில் ஓலை யில் எழுதவேண்டிய தேவை உரைகளைக் கற்கவேண்டிய நிலையிலும் ஏற்பட்டதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் முதலில் பாடல்களை அல்லது நூல்களை வாசிப்பதில் எளிமையை விரும்பியே ஓலையில் எழுதினர். ஆய்வாளர் குறிப்பிடுதல் போல் உரைகளைக் கற்பதற்காகச் சுவடியில் எழுதியதாகக் குறிப்பது மறு ஆய்வுக்குரியது. காரணம், நூல்கள் தோன்றி, அவை சுவடிகளில் இடம்பெற்றுப் பல ஆண்டுகள் கழிந்த பின்பே உரை எழுதவேண்டிய தேவை ஏற்பட்டிருக்கவேண்டும். அவ்வாறு உரை எழுத விரும்பியவர்கள் பாடத்தை/நூலை முதலில் ஓலையில் எழுதியிருக்கவேண்டும் (அல்லது) அதன்பின் எழுதப்பெற்ற நூலை உரை எழுதுவதற்காகத் தேர்ந்தெடுத்து ஓலையில் உரை எழுதியிருக்கவேண்டும். எனவே (நூல்) - சங்க இலக்கியம் முதலிலும் உரைகள் அடுத்ததாகவும் ஓலைச்சுவடி களில் எழுதிப் பதிவு செய்யப்பட்டன என்பது தெளிவு. அவ்வாறு பல்வேறு காலகட்டங்களில் எழுந்த வாய்மொழி இலக்கியங்களை ஓலையில் எழுதிவைக்கும் போக்குச் சங்க காலத்தில் இருந்துள்ளது. ஓலை என்ற சொல் சங்கப்பாடல்களில் பயின்று வந்துள்ளது (நற்:250, 369 / அகம்:77/புறம்:350/கலி:94).

காலப்போக்கில் அவ்வோலைச் சுவடிகள் அழிய முற்பட்டிருக்க வேண்டும். அக்காலத்தே வாழ்ந்த தமிழ் மன்னர்கள் சங்கப்பாடல் களின் மீது பற்றுக்கொண்டவர்களாக இருந்தனர். அவர்கள் அப்பாடல்களை அழியாமல் பாதுகாக்கும் பொருட்டுத் தகுந்த புலமை மிக்கவரைக் கொண்டு சுவடிகளைத் திரட்டி ஒழுங்குப் படுத்தியுள்ளனர். ''சுவடித்திரட்டுதலில் சங்க கால மன்னர் பணி; தமிழ் மன்னர் பலர் பலவிடத்தும் வாழ்ந்து வந்த புலவர்களை ஒன்று கூட்டினர். இடம் அமைத்து உதவினர். பல நூல்களைத் தொகுக்கச் செய்தனர். எழுதச் செய்து பாதுகாத்து வந்தனர். இதனை, 'இத்தொகை முடித்தான் பூரிக்கோ; இத்தொகை பாடிய கவிகள் இருநூற்றைவர். இத்தொகை நாலடிச் சிற்றெல்லை யாகவும் எட்டடிப் பேரெல்லையாகவும் தொகுக்கப்பட்டது' என்னும் தொன்மைச் சான்றே (குறுந்தொகைச் சுவடியின் இறுதி) நன்கு புலப்படுத்தும்''[85] என்பதிலிருந்தும் சங்ககாலத்திலேயே சுவடி எழுதித் தொகுக்கும் போக்கு இருந்ததை அறியமுடியும். எனவே தொகுப்பதற்காகவும் சங்கப்பாடல்கள் வாசிக்கப்பட்டிருக் கின்றன. தொகுத்தவர்கட்கு விருப்பமான பாடல்கள் மட்டும் தொகுக்கப்பட்டுள்ளன. அவர்தம் வாசக விருப்பமே இன்றுள்ள சங்க இலக்கியமாகும். சங்க காலத்தில் மேற்கொண்ட ஓலையில் எழுதித் தொகுக்கும்போக்கும் படியெடுக்கும் போக்கும் பின்னரும் தொடர்ந்து வந்துள்ளன. அதனாலேயே 2,000 ஆண்டுகட்கு முற்பட்ட சங்கப்பாடல்களை இன்றும் வாசிக்கமுடிகிறது. சங்கப் பாடல்கள் இன்றும் ஓலைச்சுவடியில் காணக்கிடைக்கின்றன. ஆராய்ச்சியின் பொருட்டும், செம்பதிப்பு வெளியீட்டின் பொருட்டும் பயிற்சியின் பொருட்டும் சங்கப்பாடல்களை ஓலைச் சுவடியில் வாசிக்கும் போக்கு இன்று காணப்படுகிறது. தமிழகத்தில் கல்வெட்டு முதலியவற்றில் எழுதிவைக்கும் போக்கும் இருந்துள்ளது. எனினும் அவற்றில் அரசாணை முதலிய வடிவங்கள் இருந்தனவேயன்றி, சங்கப்பாடல் வடிவங்கள் பேரளவு இடம் பெறவில்லை. காரணம், ஓலையைத் தேவையான இடத்திற்கு எடுத்துச்சென்று வாசிக்க இயலும். கல்வெட்டை அவ்வாறு எடுத்துச்செல்ல இயலாது. இசை பற்றிய கட்டுரை ஒன்று குடுமியான் மலையில் கல்வெட்டாகச் செதுக்கப்பட்டுள்ள செய்தி வரலாற்றில் பேசப்பெறுகிறது.[86] எனினும் அது பெரு வழக்கன்று. பழந்தமிழர்கள் இலக்கியம்/பாடல்களை ஓலை களில் எழுதி வந்தமையே மிகுதி. ஓலையில் இரும்பு ஆணி கொண்டு எழுதுவதால் புள்ளி வைக்க இயலாது. புள்ளி வைத்தால் ஓலையின் அடுத்த பக்க எழுத்திலும் அப்புள்ளி அமைந்துவிடும். அதுமட்டுமன்றி ஓலை கிழிந்துவிடவும் கூடும்.

எனவே ஓலைச் சுவடியின் வரிவடிவத்தில் புள்ளி எழுத்து எனப்படும் ஒற்றெழுத்துக்களும் முற்றுப்புள்ளி அரைப்புள்ளி முதலியனவும் இடம்பெறா.

சங்க இலக்கியங்கள், வாய்மொழி இலக்கியத்தைத் தொடர்ந்து ஓலையில் இலக்கியம் இடம் பெறத் தொடங்கியபோது வாசிப்பும் தனது பரிணாமத்தையடைந்தது. செவிவழியாக மட்டுமே நிகழ்ந்த சங்க இலக்கிய வாசிப்பு, பார்த்து வாசித்தல், படி எடுக்க வாசித்துச் சொல்லல் என்ற நிலைகளில் வளர்ந்தது. ஆயினும் செவிவழி வாசிப்பு முற்றும் மறைந்து விடவில்லை. சுவடிகள் தட்டுப்பாடாக இருந்த காலத்தும் இடத்தும் பழைய முறையான செவி வாசிப்பும் நடைமுறையில் இருந்தது. அவ்வாறு ஓலைச் சுவடி கிடைக்காத இடத்தில் ஒருவர் சங்க இலக்கியத்தில் ஒரு பாடலைச் சொல்ல, அதை மாணவர் செவியாற் கேட்டறிவர். இதுவே பாடங்கேட்டலாகும். இம்முறையில் பாடங்கேட்டவர்க்கு உடனடித் தெளிவு கிடைத்துவிட்டதாகக் கருதவியலாது. முதலில் ஆசிரியர் சங்கப்பாடலை வாசித்துச் சொல்வார். அதை மனப்பாடம் செய்துவரும்படி மாணவர்களுக்குச் சொல்வார். பாட்டை மனனம் செய்து ஒப்புவித்த பின்பே ஆசிரியர் அந்தப் பாடலுக்குப் பொருள், கருத்து, விளக்கம் முதலியவற்றைச் சொல்லிக்கொடுப்பார். இதில் இரண்டு வகை உண்டு. சங்கப் பாடலை விளக்கிக் கூறும் ஆசிரியர் சுவடியை வைத்துக் கொண்டு வாசித்து விளக்குவதும், சங்கப்பாடல்களடங்கிய சுவடி, பருப்பொருளாய் இல்லாமல் மனப்பதிவிலிருந்து சங்கப் பாடல்களை விளக்குவதும் நடைமுறையில் இருந்துள்ளன. எனவே பாடம் கூறுபவரின் வாசிப்பு, சுவடியைப் பார்த்து வாசித்துக்கூறல், மனப்பதிவிலிருந்து வாசித்துக்கூறல் என இரு நிலைகளில் அமைந்துள்ளது. இவற்றுள் மனப்பதிவு வாசிப்பே முன்னதாகும். ஆசிரியரின் வாசிப்பு நிலை எவ்வாறு இருப்பினும் பாடங்கேட்பவரின் வாசக நிலையில் மாற்றமில்லை. செவிவழிக் கேட்கப்பெறும் சங்கப்பாடல்களின் (சொற்களின்) பொருள் அறிந்து நூலை முழுமையாய் அறிதல் அவர்தம் வாசிப்பாய் இருந்துள்ளது. 'பாடங்கேட்டல்' எனும் வாசிப்பு முறையில் ஒலி வடிவமே சங்க இலக்கிய நூல் படியாக இருந்துள்ளது. வரி வடிவம் இல்லாத இவ்வாசிப்பைத் தற்காலத்தில் வானொலி மற்றும் நாடாப் பதிவில் கல்வி நிகழ்ச்சிகளைக் கேட்டறிதலோடு ஒப்பிடல் தகும். எனினும் பாடங்கேட்டலில் இருவழித் தொடர்புண்டு, வானொலி மற்றும் நாடாப்பதிவில் ஒருவழித்தொடர்பே உண்டு. இந்நிலையில் இவை வேறு

பட்டவை. தற்காலத்தில் வகுப்பறைகளில் ஆசிரியர் கூறும் சங்கப்பாடல்களின் விளக்கவுரையைக் கேட்கும் மாணவர்தம் வாசிப்போடு இஃது ஒக்கும். பாடங்கேட்ட வாசகர் தாம் கற்றதை வெளிப்படுத்திச் சரிபார்த்துக் கொள்வதும் உண்டு. அவ் வகையில் கேட்டறிந்த நூலை மனப்பாடமாய் ஒப்புவிப்பர். இஃது ஆசிரியரின் மனப்பதிவு வாசிப்புடன் ஒப்புநோக்கத் தக்கது. எனினும் காரண அடிப்படையில் சற்று வேறுபாடு உண்டு.

*பார்த்து வாசித்தல்*

பார்த்து வாசித்தல் எனும் வாசிப்பு முறையானது, சங்கப்பாடல்களை அறியும் பொருட்டு அந்நூலைப் பார்த்து வாசிப்பதாகும். நூல் (சுவடி) பருப்பொருளாய் இருக்க, அதிலுள்ள வரிவடிவங்களைக் கண்ணால் பார்த்து வாயால் உச்சரித்து அல்லது மனத்தால் உச்சரித்து அறிவால் பொருளுணரும் செயல் இவ்வாசிப்பின் பாற்படும். எனவே, இவ்வாசிப்பு நிலையில் ஒலிப்பு மற்றும் ஒலிப்பிலா வாசிப்புகள் இரண்டும் உண்டு. மனத்தால் உச்சரித்து வாசிப்பது பிற்கால வழக்கு, வாயால் உச்சரித்தலே தொடக்ககாலச் சங்க இலக்கியச் சுவடி வாசிப்பில் பெருவழக்கு. சங்கப்பாடல்களைச் சுவடிகளில் 'பார்த்து வாசித்த' நிலையோடு தற்கால அச்சுநூல் வாசிப்பை ஒப்பிடவியலும். எனினும் ஓலைச் சுவடியின் எழுத்துமுறை தற்கால எழுத்துமுறையினின்றும் வேறுபட்டது.

உயிர்மெய் புள்ளி எழுத்தும்......... க = க்
காலெழுத்தும் 'ர'வும் ............ ா = ர = ர் = ரா
ஒகர, ஓகாரக்கொம்புகள் = ெ = ே - போன்றவை.

எனவே எந்த எழுத்து எப்படி இருக்கும், எந்த எழுத்து குறிப்பிட்ட சொல்லில் எப்படி அமையும் போன்ற தெளிவுகள் தெரிந்திருந்தாலேயே சங்கப்பாடல்களைச் சரியாக வாசிக்க முடியும். தற்கால வாசிப்பு, நூலைப்பார்த்தல் என்ற நிலையில் சுவடிவாசிப்போடு ஒன்றுபட்டும் வரிவடிவ அமைப்பில் மாறுபட்டும் திகழ்கின்றது. மேலும் ஒலிப்பு வாசிப்பு ஒலிப்பிலா வாசிப்பு ஆகிய இருமுறைகளும் சங்க இலக்கிய ஓலைச் சுவடியைப் பார்த்து வாசித்தல் மற்றும் அச்சு நூலைப் பார்த்து வாசித்தல் ஆகிய இருநிலைகளிலும் அமைந்திருக்கின்றன. பார்த்து வாசித்தல் என்ற நிலைக்கு வரிவடிவம் இன்றியமை யாதது. அதுபோன்றே, சங்கப்பாடல்களை வாசிப்பவர் வரி வடிவத்தைப் புரிந்துகொள்வதற்கு எழுத்தறிவைப் பெற்றிருக்க வேண்டியதும் இன்றியமையாதது. அவ்வாறு எழுத்தறிவைப்

பெற்றிருந்த போதிலும் சங்கப்பாடலில் பொருள் தெரியாத சில சொற்களைக் கடக்குமிடத்துத் தகுந்தவரிடம் அச்சொல்லுக்கான பொருளைக் கேட்டறிவர். தற்காலத்தைப் போன்று அகராதி களின் பெருக்கம் சங்க காலத்தில் இல்லை. நிகண்டு என்பது ஒரோவழி வெகு சிலரிடம் மட்டுமே இருந்துள்ளது. எனவே பொருள் தெரியாச் சொற்களின் பொருளறிய நிகண்டு வாசிக்கும் தேவையும் இருந்துள்ளது என்பது புலப்படும்.

பாடங்கேட்டல் என்ற சங்க இலக்கிய வாசிப்பு நிலையில் ஒலிப்பிலா வாசிப்பு அமையும். எனினும் அது சங்கப்பாடல் நூலைப் பார்த்து வாசிக்கும் கூறான ஒலிப்பிலா வாசிப்பினின்றும் வேறுபட்டது. ஆயினும் பாடம் கேட்டு, பின்பாட்டுப் பாடுதல் போன்று சங்கப்பாடல்களைத் திரும்பச் சொல்லுதல் என்ற முறையும் இருந்துள்ளது. எனவே பாடங்கேட்டலிலும் ஒலிப்பு வாசிப்பு இருந்துள்ளது என்றே கருதவேண்டும். ஆக, பாடங் கேட்டல், பார்த்து வாசித்தல் ஆகிய இரண்டு சங்க இலக்கிய வாசிப்பு நிலைகளிலும் ஒலிப்புடன் வாசித்தல் மற்றும் ஒலிப்பிலாது வாசித்தல் என்ற இருமுறைகளும் இருந்துள்ளன எனக் கொள்ளத்தகும். சங்கப் பாடல்கள் ஓலைச்சுவடியில் அடங்கியிருந்தமையால் ஒரு சுவடியைப் பார்த்து அல்லது வாசிக்கக் கேட்டு, படி எடுக்க நேர்ந்தபோது சில எழுத்துப் பிழைகள் தோன்றவும் இடமிருந்துள்ளது (பாட வேறுபாடு). அவ்வாறான பிழைகளைத் திருத்தித் தெளிந்து வாசிப்பதும் நடைமுறையில் இருந்துள்ளது. தற்கால அச்சு நூல்களின் அச்சுப்பிழைகளோடும் வாசகரோடும் இதனைத் தொடர்புபடுத்தி நோக்கமுடியும். படி எடுத்தலில் ஏற்படும் எழுத்துப்பிழை, அச்சுக் கோர்க்கும்போது ஏற்படும் எழுத்துப்பிழை-இரண்டும் வாசகநிலையில் ஒப்புமையுடையனவே. எனினும் அப்பிழைகள் தோன்றுவதற்கான பின்புலம் வேறுபாடுடையதாம். அதாவது நூலறிவு பெற்றவர் செய்யும் தவறுக்கும் நூலறிவு பெறாதவர் செய்யும் தவறுக்கும் இடையிலான வேறுபாடு சுவடிப் பிழைக்கும் அச்சுப்பிழைக்கும் இடையில் உள்ளது.

### படி எடுக்க வாசித்துச் சொல்லுதல்

படி எடுத்தல் என்பது சங்கப்பாடல்களை வாசிக்கக் கேட்டு ஓலைச் சுவடியில் எழுதுதல் மற்றும் சங்க இலக்கிய நூலை நேரடியாகப் பார்த்து எழுதுதல் என இருவகைப்படும். எனவே அக்கால வாசிப்பு நிலைகளில் படியெடுக்க வாசித்துச் சொல்வதும் ஒன்று. இம்முறையில், மனத்தினுள் மனப்பாடமாய் உள்ள சங்கப் பாடல்களை வாசித்துச் சொல்லுதல் மற்றும் முன்னமே

எழுதப்பெற்ற சங்கப்பாடல் சுவடியை மறுபடியும் படிஎடுக்க அந்நூலைப்பார்த்து வாசித்துச்சொல்லுதல் என இருவகை உண்டு. பாடங்கேட்டல் என்ற வாசிப்பு நிலையில் ஆசிரியரின் சங்க இலக்கியப் பாடம் கூறும் வாசிப்போடு படியெடுக்க வாசித்துச் சொல்வதை ஒப்புநோக்கவியலும். எனினும் பாடம் கூறும் ஆசிரியரின் வாசிப்பில் நூல் மட்டுமன்றி, தேவையான விளக்கங்களும் இடம்பெறும். படியெடுக்க வாசித்துச் சொல்வோர் சங்க இலக்கிய நூலை மட்டுமே வாசித்துச் சொல்வர். மனப்பாடமாய் உள்ளவற்றிலிருந்து எடுத்துச்சொல்வதும் வாசிப்பு எனல் பொருந்தும். சங்க இலக்கிய நூல் பருப் பொருளாய் இல்லாததால் இது வாசிப்பு ஆகாது எனல் சரியன்று. அதே சமயம் மனத்தினின்று எடுத்துச்சொல்லும் எல்லாக் கூறுகளும் வாசிப்பு ஆவதும் அன்று. அவ்வாறே பாடங் கேட்டல் என்பது வாசிப்பில் அடங்கும்; எனினும் செவியால் கேட்கும் எல்லாக் கூறுகளையும் வாசிப்பாகக் கருதிட இயலாது. அப்படிக் கருதினால் சாதாரண உரையாடலுக்கும் சங்க இலக்கியப் பாடங்கேட்டலுக்கும் வேறுபாடு இல்லை என்பது போல் தவறாகிவிடும். 'மனப்பாடம்' மற்றும் 'பாடங்கேட்டல்' என்பவற்றில் உள்ள 'பாடம்' என்ற சொல் இலக்கியத்தரம் மிக்க இலக்கண வரம்புள்ள வாசிக்கத்தகுந்த சங்க இலக்கிய நூல் என்ற விரிவான பொருளுக்குரியது. 'பாடம்' என்பதற்குத் தமிழ்ப் பேரகராதி படிக்கும் நூற்பகுதி, படிப்பு, மூலபாடம் முதலிய பொருள்களைத் தருதல் இவண் குறிக்கத்தக்கது.[87] எனவே கேட்கப் பெறுபவை எல்லாமும் சங்க இலக்கிய நூலாகிவிடா; வாசிப்பாகி விடா. சங்க இலக்கிய நூல் என்று வரைமுறைப் படுத்தப் பெற்றதை மனத்துள் இருத்தித் தேவையானபோது அதை எடுத்துக்கூறும் செயற்பாங்கை வாசிப்பெனல் வேண்டும். முன்னதாகவே ஓர் ஆசிரியர் சொல்லக்கேட்டு மனத்துள் பதிவு செய்யப்பெற்ற சங்க இலக்கிய நூலைப் படி எடுப்பதற்காக (அல்லது பாடம் சொல்வதற்காக) மாணவர்க்கு எடுத்தோதும் போது மனத்திலுள்ள சங்க நூற்பாடல்களை வாசித்த பின்பே படி எடுப்போருக்கு (அல்லது பாடங்கேட்போருக்கு) எடுத்துச் சொல்லமுடியும். எனவே மனப்பதிவு வாசிப்பு முறையையும் (சங்க இலக்கிய) வாசிப்பு என்றே கருதவேண்டும்.

### நூலைப்பார்த்து வாசித்துச் சொல்லுதல்

படியெடுக்க வாசித்துச் சொல்லும் வாசிப்பு முறையின் இரண்டாம் பிரிவு நூலைப் பார்த்து வாசித்துச் சொல்லுதல் ஆகும். இம்முறையில் சங்க இலக்கிய நூல் பருப்பொருளாய்

இருக்க, அதிலுள்ள வரிவடிவத்தை வாசித்து, கேட்டெழுதுபவர் விளங்கிக் கொள்ளும் வகையில் சங்கப்பாடல்களைச் சொல்வர். இந்த வாசிப்பு முறையில் ஒரு சிறப்புண்டு. வாசித்துச் சொல்பவரின் சங்க இலக்கிய வாசிப்பு வரிவடிவத்தை அடிப்படையாகக் கொண்டு ஒலிப்பு வாசிப்பாக அமையும். அதைக்கேட்டுப் படி எடுத்தலின்போது நிகழும் சங்க இலக்கிய வாசிப்பு-வரிவடிவம், ஒலி வடிவம் என இருநிலைகளிலும் ஒலிப்புடன் வாசிப்பது மற்றும் ஒலிப்பிலாது வாசிப்பது என இருமுறைகளிலும் அமைதல் சிறப்புக்குரியது ஆகும். சங்க இலக்கியச் சுவடியை நேரடியாகப் பார்த்துப் படியெடுத்தல் என்பது இருவகைப்படும். 1. ஓர் ஓலைச் சுவடியைப் பார்த்து, வாசித்து அதை உள்ளவாறே இன்னொரு வெற்றோலைச் சவடியில் எழுதுதல், 2. சுவடியைப் பார்த்து வாசித்து அதைத் தாளில் மைகொண்டு எழுதுதல். இது தாள்சுவடிக்காலத்து முறை - பிற்காலத்தது. இவ்விரண்டாம் முறை இன்றும் மிகுதியான பழக்கத்தில் உள்ளது.

எவ்வகை வாசிப்பாயினும் அவரவர் முன்னறிவுக் கேற்பவே அவரவரின் புரிதல் அமையும். சான்றாக, வரி வடிவத்தைப் பார்த்து, சங்க இலக்கியத்தை வாசித்துக் கூறும் நபரின் முன்னறிவுக்கேற்ப அந்நூலை அவர் புரிந்துகொள்ளுதல் இயலும். அவ்வாறே படி எழுதுவோரின் முன்னறிவுக்கேற்ப அந்நூலைப் புரிந்துகொள்ள இயலும். புரிதல் என்பது வாசகரை / மாணவரைப் பொருத்து அமைவது.

ஓலையில் இலக்கியம் படைப்பது மட்டுமன்றிக் கடிதம் எழுதியனுப்புதலும் நடைமுறையில் இருந்துள்ளது. அதன் எச்சமாகவே இன்றும் 'அழைப்போலை', 'அறிவிப்போலை' முதலிய தொடர்கள் நடைமுறையில் உள்ளன. மேலும் 'பாடங் கேட்டல்' என்ற செவிவழி வாசிப்பின் எச்சமாக இன்றும் தொடக்கப்பள்ளிகளில் மாணவர்கள் பின்பாட்டுப்பாடுதல் போல் ஆசிரியர் சொல்வதைத் திரும்பச் சொல்லும் போக்கும் காணப்படுகிறது.

காலம் செல்லச்செல்ல அறிவியல் மாற்றங்கள் நிகழ்ந் துள்ளன. அம்மாற்றங்கள் வாசிப்பிலும் தாக்கத்தை ஏற்படுத்தி யுள்ளன. பனை ஓலை நறுக்குகளில் ஆணியால் எழுதப் பெற்றிருந்த சங்க இலக்கிய நூல் கருத்துகளை வாசித்த நிலைமாறி, தாளில் மைகொண்டெழுதிய தாள் சுவடியை வாசிக்கும் முறை ஏற்பட்டது. இது தாள் மற்றும் மை ஆகிய கண்டுபிடிப்புகளால் நிகழ்ந்த மாற்றமாகும். சென்னைப்

பல்கலைக்கழகக் கீழ்த்திசைச்சுவடி நூலகத்தில் சங்க நூல்கள் தாள்சுவடியாகக் காணக்கிடைக்கின்றன (16-ஆம் நூற்றாண்டு). சங்கப் பாடல்கள் தாள் சுவடியிலும் வாசிக்கப் பெற்றிருக்கின்றன என்பது புலப்படுகிறது.

தாள் சுவடிக்காலத்தும் அச்சுக் காலத்தும் கூட ஓலைச்சுவடியில் வாசிப்பதும் பாடங்கேட்டுச் செவிவழி வாசிப்பதும் நடைமுறையில் இருந்தது. தாளும் மையும் முதலில் ஆங்கிலேயர்களால் தமிழகத்துக்கு வந்திருக்கின்றன. கிறித்துச் சமயத்தைச் சார்ந்த, ''மடத்துறவிகள் பழைய (வாய்மொழி மற்றும் ஓலைச்சுவடி) நூல்களுக்குக் கையெழுத்துப்படி எடுத்தனர்... ஒரு கையெழுத்துப் படி எடுக்கப் பல மாதங்கள் ஆனதால், நூல்கள் எண்ணிக்கை மிகக் குறைவாக இருந்தன. எனினும் படித்தவர்கள் எண்ணிக்கை மிகக் குறைவாக இருந்ததால் எடுக்கப்பட்ட கையெழுத்துப் படிகள் போதுமானவையாக இருந்தன''[88] என்ற கருத்தின்வழித் தாள் சுவடியின் தோற்றத்தை அறிய முடியும். ஆயினும், கிறித்தவரல்லாத இந்து, சமண, பௌத்தச் சமயத்துறவிகள் தாள் சுவடி எழுதுதலை விரும்பவில்லை. அவர்கள் தாள் தூய்மையற்ற பொருள் என்று கருதினர். தாள்சுவடி வாசிப்புக்கு அவர்கள் மாறவில்லை. ஓலைச் சுவடிகளிலேயே (படியெடுத்தும் பார்த்தும்) வாசித்தனர். இந்நிலையில் சங்க இலக்கிய வாசிப்பு கிறித்துச் சமயத்தாரிடம் தாள் சுவடியாலும் ஏனைச் சமயத்தாரிடம் ஓலைச்சுவடியாலும் அமைந்திருந்தது எனல் தகும். தாள் சுவடி வாசிப்புடன் ஒப்பு நோக்கத்தக்க வாசிப்பு நிலைகள் இப்போதும் நடைமுறையில் உள்ளன. பதிப்பாசிரியர் தாம் வெளியிட வேண்டிய சங்க இலக்கிய நூலின் தாள் சுவடியை வாசிப்பது; அச்சுக்கோர்ப்போர் தாம் அச்சிட வேண்டிய சங்க இலக்கிய நூலின் தாள் சுவடியை வாசிப்பது;[89] மாணவர்கள் குறிப்பேட்டில் எழுதிவைத்த சங்கப்பாடல்களை வாசிப்பது; ஆசிரியர்கள் மாணவர்களின் சங்க இலக்கியத் தேர்வு விடைத்தாள்களை வாசித்துத் திருத்துவது முதலியவற்றைத் தாள் சுவடி வாசிப்போடு ஒப்புநோக்க முடியும். எனினும் தொடக்கக்காலத் தாள்சுவடிகள் எழுதப்பெற்ற முறைக்கும் தற்காலத் தாள்சுவடி எழுதும் முறைக்கும் வேறுபாடு உண்டு. (சான்று : இடைவெளிகள்). ஓலை, எழுத்தாணி மற்றும் எழுதும் முறை காரணமாக எழுத்துகளுக்கிடையிலான இடைவெளி அடிகளுக் கிடையிலான இடைவெளி, தொடர்களுக்கு இடையிலான இடைவெளி, முதலியவை இல்லாமல் தொடர்ந்து சங்கப்பாடல் களின் வரிவடிவம் எழுதப்பெற்றிருந்தது. அதையே அக்கால

வாசகர் வாசித்தனர். இந்நிலையில் புலமைமிக்கவர் மட்டுமே எந்தச் சொல்லில் எந்தக் கருத்து முடிவடைகிறது என்பதை யறிந்து வாசித்தனர். தாள் சுவடிக் காலத்தும் இந்நிலையே நீடித்தது.

ஓலைச்சுவடி வாசிப்பின் எச்சமாகத் தாள்சுவடிக்காலத்தும் அச்சுப்படி வாசிப்புக்காலத்தும் ஓலைச்சுவடியில் சங்கப்பாடல் களை வாசிக்கும் போக்கு இருந்து வந்துள்ளது. அதற்குக் காரணம்: அக்காலத் தமிழ் வாசகர்க்கு ஓலையில் வாசிப்பதே விருப்பமாக இருந்ததுதான். மேலும் அச்சு நூற்படியின் விலை அக்காலச் சூழலில் எல்லோராலும் வாங்கி வாசிக்கும் படியாக இல்லை. விலையை ஒரு பொருட்டாகக் கருதாதவர்களும் சங்கப் பாடல்களை ஓலையில் வாசிப்பதையே வழக்கமாகக் கொண்டிருந்தனர். அதற்குக் காரணம் அவர்களுடைய தொடக்க நிலை வாசிப்புப் பழக்கமே. தொடக்கத்தில் ஓலையில் வாசித்து வாசித்துப் பழக்கப்பட்டிருந்த கண்ணும் மனமும் ஏனைய வாசிப்பு முறைகளில் அதிக விருப்பம் கொள்ளவில்லை எனல் தகும். அவ்வாறே தாள்சுவடி வாசிப்பின் எச்சமாக அச்சுக்குப் பிறகும் தாள்சுவடியில் சங்கப் பாடல்கள் வாசிக்கப் பெற்றுள்ளன. மேலும், பழைய ஓலைச்சுவடி, தாள்சுவடி ஆகியவை தற்காலத்தும் வாசிக்கப்படுகின்றனவெனில் அக்காலத்தே சாதாரண பார்வையாலேயே வாசிக்கப்பெற்றன. தற்காலத்தில் குவி ஆடியின் உதவி கொண்டு வாசிக்கப்படுகின்றன.

அச்சு இயந்திரத்தின் வருகையால் சங்கப்பாடல்கள் தாளில் அச்சேறின. புத்தகம் என்று வழங்கப்படும் நூல் வடிவில் மாறின. 1554 அளவிலேயே தமிழ்மொழி அச்சேறிவிட்டது. இந்திய மொழிகளில் தமிழே முதலில் அச்சேற்றப்பட்டது. ஓலைச்சுவடி யில் முதலில் தோன்றியவை சங்க இலக்கியங்களே. ஆயினும் அச்சு இயந்திரங்கள் தமிழகத்துக்கு வந்த உடனேயே முதலிலேயே சங்க இலக்கியங்கள் அச்சேறிவிடவில்லை. சங்க இலக்கியங்களை அச்சேற்றுவதற்கு முன்னர்த் தமிழில் வேறு சில வடிவங்கள் அச்சேற்றப்பட்டன. அவற்றில் எழுத்து அமைப்பு-தாள் சுவடிக்காலத்தைப்போன்று தொடர்ந்து அமைக்கப் பெற்றிருந்தது (விரிவிற்குக் காண்க : B.S. Kesavan, Vol. I, P. 16-71 ).

சங்க இலக்கியங்கள் அச்சப் புத்தக வடிவம் பெற்றதும் பொருளாதாரத்தில் மேம்பட்டிருந்த தமிழர்களால் அச்சு வழியாகவே சங்க இலக்கியப் பாடல்கள் வாசிக்கப்பெற்றன. ஓலைச் சுவடியில் சங்கப்பாடல்களை வாசிப்பதற்குத் தேவையான

(இலக்கணம் முதலிய) தகுதிகளை விடவும் அச்சில் சங்கப் பாடல்களை வாசிப்பதற்குக் குறைந்த தகுதிகளே தேவையாய் இருந்தன. அச்சு நூல் வருகையால் சங்கப்பாடல் வாசிக்கும் முறைகளும் மாறின. அச்சுநூலை விரும்பிய இடத்தில் விரும்பும் வகையில் வைத்துக்கொண்டு படுத்துக்கொண்டோ, நடந்து கொண்டோ வாசிக்க முடிந்தது. அச்சு நூல் வருகையால் சங்க இலக்கிய வாசகர்க்கு எளிமையும் வசதியும் மிகுதியாகக் கிடைத்தன. எழுத்துகளுக்கிடையிலான இடைவெளிகள், சொற்களுக்கிடையிலான இடைவெளிகள், அடிகளுக்கிடை யிலான இடைவெளிகள், பாடல்களுக்கிடையிலான இடை வெளிகள் போன்றவை அச்சு நூல்களில் அமைந்தன. அவை மட்டுமன்றிப் புள்ளி எழுத்துக்கள், காற்புள்ளி முதலிய குறியீடுகள் அச்சில் தோன்றலாயின. சுவடியில் வாசிப்பதற்குக் குழப்பமாக இருந்த ெ = ே க் = க, ஈ = ர = ா போன்றவை நீக்கம் பெற்றன.[90] இவையெல்லாம் சங்க இலக்கிய வாசிப்பில் எளிமை சேர்த்தன. அதன்வழி வாசிப்பு வேகமும் மிகுந்தது. சங்க இலக்கியங்கள் அச்சில் வெளிவந்ததில் முதலில் அச்சில் வாசிக்கப்பெற்றது கலித்தொகையாகும் (1887) முதன் முதலில் அச்சுக்கு வந்த சங்க இலக்கிய நூல்களில் காலத்தால் பிந்தியது (1920) அகநானூறு ஆகம். காண்க : வரைபடம்.[91]

சங்க இலக்கியங்களை ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்யும் பணி 1940-களிலேயே தொடங்கிவிட்டது. இதனை, ''ஜே.வி. செல்லையா என்பவர் பத்துப்பாட்டு நூலை ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்து சிறப்பான முன்னுரையையும் குறிப்புரை களையும் கொடுத்துள்ளனர். 1946-இல் (ஜெனரல் பப்ளீஷர் - கொழும்பு) வெளியிடப் பெற்றுள்ளது. இந்நூலின் இரண்டாம் பதிப்பைக் கழக வெளியீட்டகம் 1962-இல் வெளியிட்டது''[92] என்ற குறிப்பின் வழி அறிய முடிகிறது. எனவே சங்க இலக்கியத்தை ஆங்கிலத்தில் வாசிப்பதும் 1940-களில் நடை முறைக்கு வந்திருக்கவேண்டும் என்பது புலப்படும். அக்கால கட்டத்தில் ஆங்கிலேயர் தமிழகத்தில் வாழ்ந்தனர். அவர்கள் சங்க இலக்கியத்தை ஆங்கிலத்தில் வாசிக்க முற்பட்டதன் விளைவு மொழிபெயர்ப்புகள் தோன்றலாயின.

சுவடிகளில் இருந்தபோது சங்க இலக்கியங்களை வாசிக்க விரும்பிய அனைவராலும் வாசிக்க முடியவில்லை. சிலரால் மட்டுமே வாசிக்க முடிந்தது. அச்சேறிய நூல்களாக, சங்க இலக்கியங்கள் வெளிவந்த பின்பு, விரும்பியவர்கள் எல்லாரும் சங்கப்பாடல்களை வாசிக்க முடிந்தது. இதற்குக் காரணமாக இருந்தவர்கள் சி.வை. தாமோதரம் பிள்ளை மற்றும் உ.வே.சா.

முதலானவர்களே. ''ஒருகாலத்தில் தமிழ் என்றால் ஏதோ பூத பைசாசம் என்று அஞ்சியிருந்தவர் உண்டு. அந்தக் காலம் மறைந்துபோய்விட்டது. தமிழ் என்றால் பண்டிதர் தவிர மற்றவர்கள் தொடக்கூடாத பொருள் அனுபவிக்க முடியாத வஸ்து என்ற பீதியும் மறைந்துவிட்டது. இலக்கியக் கர்ப்ப கிருஹத்தில் தமிழ்த்தாயைப் பூட்டிவைத்து 'எங்களுக்கே உரியவள்' என்ற வைதிக மனப்பான்மை கொண்டிருந்த பண்டிதர் குழுவிடமிருந்து தமிழை விடுதலை செய்து 'பிறருக்கும் தாய் இவள்' என்று உணர்த்திய புகழ் இந்த (19) இருபதாம் நூற்றாண்டுத் தமிழறிஞர்களையே சாரும்''[93] என்ற கருத்து ஒப்பு நோக்கத்தக்கது. எனினும் ''சங்க இலக்கியங்களான அகநானூறு புற நானூறு முதலியவைகளும், திருக்குறள் சிலப்பதிகாரம் முதலியவைகளும் இரண்டாயிரம் ஆண்டுகளாகக் கால வெள்ளத்தை நீந்தி இன்றும் பெருமையோடு விளங்குகின்றன என்றால், காரணம் என்ன? இரண்டாயிர ஆண்டுகளாகப் பொதுமக்கள் போற்றி வந்தார்கள் என்பது அன்று; இரண்டாயிர ஆண்டுகளாக அறிஞர்கள் விடாமுயற்சி கொண்டு அவற்றின் பெருமையைப் பறைசாற்றி வந்த பெருந்தொண்டே காரணம் ஆகும். அறிஞர்கள் இவ்வாறு தொண்டாற்றாமல் பொதுமக்களின் ஆராய்ச்சிக்கும் மதிப்புக்கும் விட்டுவிட்டிருப்பார்களானால், எந்த உயர்ந்த நூலும் உலகத்தில் இதுவரையில் வாழ்ந்திருக்க முடியாது; சுவையற்றவை என்று சிலவற்றை அழியவிட்டிருப் பார்கள். பயனற்றவை என்று சிலவற்றை மறந்துவிட்டிருப் பார்கள். விளங்காதவை என்று பலவற்றைத் துறந்துவிட்டிருப் பார்கள். ஆனால், அறிஞர்களின் தூண்டுதலாலும் பொதுமக்களின் கண்மூடிப் போற்றுதலாலுமே, அழிவுக்கும் மறப்புக்கும் துறப்புக்கும் இரையாகாமல் பல நல்ல நூல்கள் நம் நாட்டிலும் பிற நாடுகளிலும் காலங்கடந்து வாழ்ந்து வருகின்றன''[94] என்ற மு.வ.வின் கருத்தும் குறிப்பிடத்தக்கது.

சங்க இலக்கிய வாசிப்பு முதலில் வாய்மொழியாகவும் அடுத்து செவிவழியாகவும் பிறகு ஓலையில் எழுத்து வழி யாகவும் அதன்பின் தாள் சுவடியில் மையெழுத்து வழியாகவும் இறுதியாக அச்செழுத்து வழியாகவும் நடைபெற்று வந்துள்ளது. ஆயின் ஒவ்வொரு வாசிப்பு வழிமுறையிலும் சங்கப்பாடலின் நுகர்வு ஒரே மாதிரி இருந்திருக்கும் என்று கருதவியலாது. ஒலி வடிவ (வாய்மொழி/செவிவழி) வாசிப்பில் பாட்டின் ஒலிநயம் இசைநயம் முதலியவை சங்கப் பாடல் வாசிப்பு அனுபவத்தில் இடம் பெற்றிருந்தன. வரிவடிவ வாசிப்பில் அவை இடம்

பெறாமல் போய்விட்டன. எனவேதான், "அச்சுப்பொறி ஏற்பட்ட பிறகு, இலக்கியத்தைக் கண்ணால் நுகரும் பழக்கம் மிகுந்து, இலக்கிய நுகர்வில் குறை ஏற்பட்டுவிட்டது என்று புச்சர் என்ற பேராசிரியர் கருதுகின்றார். சொற்களைக் கேட்டு உணரும் திறன் முற்காலத்தில் மிகுந்திருந்தது என்பதும் அச்சுநூலில் கண்டு கற்கும் பழக்கம் மிகுந்த பிறகு சொற்களுக்கு உள்ள ஒலிநயத்தை நன்கு உணரத்தவறிவிட்டோம் என்பதும் நுகரத்தக்க இன்பத்தைப் படிப்படியே செவி இழந்துவிடுகிறது என்பதும் அவருடைய கருத்துகளாகும்"[95] என்று மு.வ. சுட்டுகிறார்.

### சங்க இலக்கிய வாசிப்பு நிகழ்வுகள்

| | | | | |
|---|---|---|---|---|
| படிநிலை 1. | - மூலம் | - வாய்மொழி | - (இசையொடு) | -தொடக்க கால ஆசிரியர்கள் |
| படிநிலை 2. | - மூலம் | - செவிவழி | - (இசையொடு) | - தொடக்க கால மாணவர்கள் |
| படிநிலை 3. | - மூலம் | - வரிவழி | - (ஒலிப்போடு) | - ஓலைச் சுவடி காலம் |
| படிநிலை 4. | - மூலம் | - வரிவழி | - (இலக்கணத்தோடு) | - இலக்கணக் காலம் |
| படிநிலை 5. | - மூலம் | - வரிவழி | - (திணை துறை குறிப்புகளோடு) | |
| படிநிலை 6. | - மூலம் | - வரிவழி | - (உரையோடு) | - உரையாசிரியர் காலம் |
| படிநிலை 7. | - மூலம் | - வரிவழி | - (ஒலிப்போடு) | - பிற்கால ஆசிரியர்கள் |
| படிநிலை 8. | - மூலம் | - வரிவழி | - (ஒலிப்பின்றி) | - தற்கால ஆசிரியர்கள் |
| படிநிலை 9. | - உரை | - வரிவழி | - (ஒலிப்பின்றி) | - தற்கால மாணவர் |

இவ்வாறாக, சங்க இலக்கியம் காலந்தோறும் பல்வேறு மாறுதல் களோடு வாசிக்கப் பெற்று வருகின்றது. எதிர்காலத்தில் கணிப் பொறித் திரையில் வாசிப்பு அமையும் வாய்ப்புகள் மிகுதியாக உள்ளன. எனவே சங்க இலக்கியமும் கணிப்பொறித் திரைக்கு இடம்பெயரும்.

### கள ஆய்வு முடிவுகள்

சங்க இலக்கியம் 2000 ஆண்டுகளாகத் தமிழர் வாசிப்பில் ஒவ்வொரு விதமாக இடம்பெற்று வந்துள்ளது. அத்தகைய வாசிப்பே சங்க இலக்கிய நிலை பேற்றிற்கும் காரணம் ஆகும். தற்காலத்தில் (1996) சங்க இலக்கிய வாசிப்பு தமிழகத்தில் எந்த நிலையில் உள்ளது என்பதைக் கள ஆய்வின் வழி நிறுவுதல் இயலும். அதற்காகச் சென்னையிலுள்ள 100 தமிழாசிரியர்களிடம்

வினா நிரல் வழிக் கருத்துத் திரட்டப்பெற்று ஆய்வு செய்யப் பட்டுள்ளது.

***சங்க இலக்கிய வாசிப்பு - தற்கால நிலை***

நூலாசிரியரின் சிந்தனை வாசிப்பதால் மீண்டும் சிந்திக்கப் பெறும் என்ற மூரிசனின் கருத்திற்கேற்பச் சங்கப்புலவர்களின் சிந்தனை தமிழ்வாசகர்களால் இன்றும் சிந்திக்கப் பெறுகிறது. சங்க இலக்கியம் வாசிப்பவர்களில்.... நாள்தோறும் வாசிப்பவர்கள் - 5%, இரண்டு நாட்களுக்கொருமுறை வாசிப்பவர்கள் - 10% வாரமிருமுறை வாசிப்பவர்கள் - 15%, வாரந்தோறும் வாசிப் பவர்கள் - 58% இவர்களில் தாம் வாசிக்கும்போது சங்க இலக்கிய வாசிப்புக்கென்று... ஒருமணிநேரம் ஒதுக்குபவர்கள் - 55%, இரண்டுமணி நேரம் ஒதுக்குபவர்கள் - 30%, மூன்றுமணி நேரம் / அதற்கு மேலும் ஒதுக்குபவர்கள் - 15%/

பொதுவாகவே வாசிப்பதற்கு நேரம் போதவில்லை/ கிடைப்பதில்லை என்று வருந்துவோர் மிகுதி. ''தவறான விசயத்தில் பார்வை செலுத்துவதை விட்டோமேயானால் சரியானவற்றைச் செய்ய நம்மால் முடியும்''[96] என்ற கருத்திற் கேற்பத் தேவையில்லாமல் நேரம் செலவாவதைத் தவிர்த்து, சங்க இலக்கிய வாசிப்புக்கான நேரத்தை மிகுவித்துக்கொள்ள முடியும். சங்க இலக்கிய வாசிப்பில் தற்கால வாசகரால் ஒருமுறை (தடவை) வாசிக்கும்போது மிகுதியாக வாசிக்கப்படும் அளவு வருமாறு:

> பெரிய பாடல் : 1-3, அளவான பாடல் : 5-10, சிறிய பாடல் : 10-20 சிறியபாடல்களாக இருப்பினும் பெரிய பாடல்களாக இருப்பினும் குறைவாக இருப்பினும் மிகுதியாக இருப்பினும் முழுமையாக வாசித்து அதன்வழி வாழ்க்கைக்குத் தேவையான கருத்துகளை மனத்துள் இருத்தவேண்டியது வாசகர் கடமை. எனவே ஒவ்வொரு வாசகரும் சங்கப் பாடல்களின் அடிக்கருத்தை அகழ்ந்தும் ஆழ்ந்தும் வாசிக்கவேண்டியது இன்றியமையாதது.

சங்க இலக்கிய வாசிப்பில் தமிழ் வாசகர்கள் மிகுந்த ஆர்வம் கொண்டவர்களே மிகுதி 67% அளவான ஆர்வம் கொண்டவர்கள் 28%, குறைவான ஆர்வமுடையவர்கள் 5%, 67% வாசகர்கள் சங்க இலக்கியத்தில் மிகுந்த ஆர்வம் கொண்டவராக இருப்பினும் அடிக்கடி வாசிப்பவரும் மிகுந்த நேரம் வாசிப்பவரும் 5-15% மட்டுமே என்பதை இவண் ஒப்புநோக்க வேணடும். இதில் ஒரு முரண்பாடும் தெரியும். அதற்குக்

காரணம் ஆர்வமிருந்தும் வாசிக்கும் சூழல் அமையாமையே என்று கருதவேண்டியுள்ளது. சங்க இலக்கிய வாசிப்பில் மிகுந்த ஆர்வம் கொண்டவர்களில் 30 வயதிற்கு மேற்பட்டவர்களே மிகுதி. இதிலிருந்து தற்கால இளைஞர்கட்குச் சங்க இலக்கிய வாசிப்பில் ஈடுபாடு குறைவு என்பது புலப்படும். இவண், ''நடப்புக்கால மாணவர்கள் பலர் சங்க இலக்கியப் 'பாடலைக் கூடச் சரிவரப் பார்த்துப் படிக்கத் திணரும் நிலைகண்கூடு''[97] என்ற கருத்து ஒப்புநோக்கத்தக்கதாகும். மனிதனின் ஒவ்வொரு ஈடுபாடும் ஒவ்வொரு சூழலில் ஏற்படுவதாகும். அவ்வகையில் தமிழ் வாசகரின் சங்க இலக்கிய வாசிப்பு ஈடுபாடு ஏற்படு தலானது... பள்ளிக்காலத்தில் - 2%, இளங்கலையில் - 6%, முதுகலையில் - 37%, ஆய்வுக்காலத்தில் - 15%, பணிக்காலத்தில் - 40%. ஒரு சமுதாயம் அமைவுறுவது, அதன் பழைய பண்பாட்டுக் கூறுகள் இளந்தலைமுறையினரைச் சென்று சேர்தலைப் பொறுத்தது என்று சமூகவியல் சுட்டும். அதற்காகவே பள்ளிக்கல்வியில் சங்கப் பாடல்களும் பாடப் பகுதியில் அமைக்கப்பெற்று வருகின்றன. ஆயினும் சங்க இலக்கிய ஈடுபாடு பள்ளிக்காலத்தில் வெறும் 2% வாசகர்க்கு மட்டுமே வந்துள்ளது என்பது கவனிக்கத்தக்கது. ஆனால் பணிக்காலத்தில் மிகுதியான வாசகர்க்கு ஈடுபாடு வந்துள்ளது (40%). பணியின் பொருட்டே அவர்கள் வாசித்தாக வேண்டிய கட்டாயம் இருப்பதே இதற்குக் காரணமாக இருக்க வேண்டும். சங்க இலக்கியம் தமிழ்ப்பண்பாட்டின் எதிரொளி எனக் கருதத்தகும். எனவேதான் சங்க இலக்கிய வாசகர் தரமான வாசகராகவே கருதப்படுகிறார். இதனைத் ''தரமான வாசகனுக்குக் கலாச்சாரச் சிந்தனை மீது உண்மையான ஈடுபாடு அவசியமாகிறது. மேலோட்டமான வாசகனுக்கோ வருடப்படும் சுகத்துக்கு ஆட்பட்ட வாசகனுக்கோ அவை சாத்தியமாவதில்லை''[98] என்ற கருத்தின்வழி உறுதிப்படுத்தவியலும். அத்தகைய தரமான வாசகரில்... மூலம் மட்டும் வாசிப்பவர்கள் 15%, மூலமும் உரையும் வாசிப்பவர்கள் 62%, மூலமும் அகரமுதலியும் வாசிப் பவர்களே 17%, உரை மட்டும் வாசிப்பவர்கள் 6%. மூலம் மட்டும் வாசிப்பவர்களே சிறந்த வாசகராகக் கருதப் பெறுவார். காரணம் தமது சொந்த அறிவால் பொருளுணர்தலே வாசிப்பின் நல்ல பண்பாகும். உரை என்பது உரையாசிரியரின் கருத்து. அதையும் சேர்த்து வாசிப்பது குற்றமாகாது; எனினும் முதலில் மூலமும் பிறகு மூலத்தோடு உரையும் வாசிப்பதே விரிவான பொருளறிதலைத் தருவதாகும். எனவே உரைமட்டும் வாசிக்கும் (6%) வாசகர்கள் மூலத்தையும் வாசிக்கப் பழகவேண்டும். மூலத்தைக் கண்டு ஒதுங்கும்/ஒதுக்கும் இவ்வாறான வாசகர்

களைக் குறித்து வ.சுப. மாணிக்கம் தரும் கருத்து இவண் குறிக்கத்தக்கதாகும். ''செய்தி சொல்லும் நாளேடன்று இலக்கியம். இலக்கியத்தின் உட்பொருள் அறிய, முதற்கண் சொற்பொருள் அறிவுவேண்டும். சொற்பயிற்சி இலக்கியப் பயிற்சிக்கும் இலக்கியப் படைப்பிற்கும் நனி இன்றியமையாதது. நீத்துப் பயிற்சி இல்லாதான் நீராழம் காணமாட்டான். ஆதலின் தமிழறிவு தேடுவார் பாட்டுக்களில் புதுச்சொல்வரும்போது பொன் பெற்றார் போல விளங்கிப் போற்றிக்கொள்ள வேண்டும். அச்சொற்களை அறிவுப் பகையென மயங்கி இலக்கியத்தினின்று புறங்காட்டி ஓடிவிடக்கூடாது''[99]. அவ்வாறு புறங்காட்டி ஓடாமல் சங்க இலக்கியத்தை வாசிப்பவர்கள் விரும்பி வாசிக்கும் நேரம் வருமாறு:

காலை - 7%, பகல் - 2%, மாலை - 3%, இரவு - 83%, நினைக்கும்பொழுது - 5% இரவுப்பொழுதிலேயே மிகுதி யானோர் வாசிப்பதற்குப் பல காரணங்கள் உண்டு. இரவில்தான் அமைதி நிலவும். வாசிப்புக்கு ஏற்ற சூழல் அமைதியே. ஆயினும் ''தூக்கம் வருவதற்காகப் புத்தகம் படிப்பவர்க்கும் தூக்கம் வரவில்லையே, ஏதாவது படிக்கலாம் என்று புத்தகத்தை எடுப்போரும்.... புத்தகத்தை முடித்தால்தான் தூங்குவது என்ற உறுதியோடு இரவில் வெகுநேரம் கண்விழிப்போரும் படிப் பவரில் பல இனங்கள் ஆவர்''[100] என்பதையும் இவண் கருத்தில் கொள்ளவேண்டும். சங்க இலக்கியத்தை இரவில் வாசிப்பவர்கள் இப்பிரிவினரிலும் இருக்கக்கூடும். இங்கு, ''இரவில் வாசிக்காமல் படுத்தால் ஆழ்ந்த உறக்கத்தை அனுபவிக்கவியலாது''[101] என்ற கருத்து ஒப்புநோக்கத்தக்கது.

வாசிக்கும் முறை ஒவ்வொருவருக்கும் ஒவ்வொருவிதமாய் அமையும். சங்க இலக்கிய வாசிப்பு முறையில்.... வாய்விட்டு வாசிப்பவர்கள் - 12%, மௌனமாக வாசிப்பவர்கள் - 73%, இசைத்து வாசிப்பவர்கள் - 3%, சூழலுக்கேற்றபடி வாசிப் பவர்கள் - 12%. இவர்களில் மௌனமாக வாசிப்பவர்கள் (73%) மிகுதியாக இருப்பதற்கும் இரவு நேரத்திலேயே மிகுதியானோர் (85%) வாசிப்பதற்கும் தொடர்பு உண்டு. அதாவது இரவில் வாய்விட்டு வாசிப்பதைக் காட்டிலும் மௌனமாக வாசிப்பதே போற்றப்பெறும். மற்றவர்களின் உறக்கத்தையும் பொருட்படுத்த வேண்டியிருக்கிறது. எந்த நேரத்தில் வாசித்தாலும் ஈடுபாட்டோடு வாசித்தால்தான் கருத்து மனத்தில் பதியும்; வாசிப்பின் பயன் கிட்டும். அந்த வகையில் சங்க இலக்கிய (வாசகர்களின்) ஈடுபாட்டிற்கான காரணம் வருமாறு: தன்னார்வம் - 23%,

வேலை நிமித்தம் - 74%, பிற இலக்கியங்களில் விருப்பமின்மை - 3% வேலை நிமித்தமாகவே மிகுதியானோர்க்குச் (74%) சங்க இலக்கிய வாசிப்பில் ஈடுபாடு ஏற்பட்டுள்ளது. இதற்கும் சங்க இலக்கிய வாசிப்பில் ஈடுபாடு வந்தது பணிக்காலத்திலேயே என்ற (40%) வாசகர்களின் கருத்துக்கும் தொடர்பு உண்டு. அதாவது பணிக்காலத்துக்கு முன் சங்க இலக்கிய வாசிப்பில் ஈடுபாடு இல்லாமலிருப்பினும் பணியின் பொருட்டு அவர்கள் வாசிக்கிறார்கள். இங்கு, ''இலக்கியச் சுவை என்பது அவர வருடைய வாழ்க்கையனுபவத்தையும் இலக்கியப் பயிற்சியை யும் ஒட்டியது''[102] என்ற கருத்து குறிக்கத்தக்கதாகும். எனவே பணியின்பொருட்டு வாசிப்பில் தொடர்பு ஏற்பட்டு அதுவே பயிற்சியாகிப் பிறகு ஈடுபாட்டை ஏற்படுத்திவிடுகிறது என்பது தெளிவு. மேலும் சங்க இலக்கிய வாசிப்பு ஈடுபாடு என்பது மற்றவர்களாலும் ஒரு வாசகர்க்கு ஏற்பட வாய்ப்புண்டு. அந்த வகையில் சங்க இலக்கிய வாசிப்பு ஈடுபாடு ஏற்படக் காரணமாக இருந்தவர்கள் என்று வாசகர்கள் குறித்தது வருமாறு: கற்பித்த ஆசிரியர்கள் - 82%, உரையாசிரியர்கள் - 6%, சங்க இலக்கிய ஆராய்ச்சியாளர்கள் - 3%, குடும்ப முன்னோர்கள் - 9%. எனவே மிகுதியான (82%) தமிழ் வாசகர்களின் சங்க இலக்கிய வாசிப்பு ஈடுபாட்டிற்கு அவ்விலக்கியத்தைக் கற்பித்த ஆசிரியர்களே காரணமாக உள்ளனர் என்பது புலப்படுகிறது. எந்த வகையான இலக்கியமாக இருப்பினும் வாசகருக்கு ஈடுபாட்டை ஏற்படுத்தும் முதல் மனிதராக அதனைக் கற்பிக்கும் ஆசிரியரே உள்ளார் எனக் கருதத்தகும். மேலும், குடும்ப முன்னோர்களால் சங்க இலக்கிய வாசிப்பில் ஈடுபாடு கொண்டவர்கள் இரண்டாம் நிலையில் உள்ளனர் (9%). இதிலிருந்து சங்க இலக்கியம் என்பது தலை முறை தலைமுறையாகத் தொடர்ந்து வாசிக்கத்தக்கது என்பது புலப்படும். (அவ்வாறு தலைமுறைகளின் தொடர்ந்த வாசிப்பே சங்க இலக்கிய நிலைபேற்றிற்கு அடிப்படையான இன்றி யமையாத காரணமாகும்). ஆனாலும் தற்கால ஆசிரியர்களான சங்க இலக்கிய வாசர்கள் தம் மாணாக்கர்க்குச் சங்க இலக்கிய வாசிப்பு ஈடுபாட்டைக் குறைந்த அளவில்/குறைவான எண்ணிக்கை யினரே ஏற்படுத்துகின்றனர் என்பதை மாணவர்களின் தரவுகள் உறுதிப்படுத்துகின்றன. கலை, இலக்கியப் போக்குகள் மாறு வதாலும் தலைமுறைகள் மாறுவதாலும் ஆசிரியர்கள், மாணவர் கட்கு ஏற்படுத்தும் ஈடுபாடு குறைந்து வருகிறது எனத்தகும். ஆசிரியர்கள் மாணவர்கட்குச் சங்க இலக்கிய வாசிப்பில் ஈடு பாட்டை ஏற்படுத்துவது மட்டும் குறையவில்லை; ஆசிரியர்களின் சங்க இலக்கிய வாசிப்பில் ஈடுபாட்டை ஏற்படுத்துவது மட்டும்

குறையவில்லை; ஆசிரியர்களின் சங்க இலக்கிய வாசிப்பும் குறைந்து வருகிறது. இதனை இ.ப.த.ம. ஆய்வுக்கோவையிலுள்ள கட்டுரைகள் பற்றிய கணக்கீடுகளின் வழித் தெளியமுடியும்.[103] (1970-இல் 27.1%-ஆக இருந்தது 1990-91-இல் 4.69%-ஆகக் குறைந்துள்ளது). ஆசிரியர்கள் மட்டுமன்றி மாணவர் மற்றும் இளந்தலைமுறை ஆய்வாளர்களின் சங்க இலக்கிய வாசிப்பும் (8.6%) மந்தமான நிலையிலேயே உள்ளது[104]. ''கோணலாக வாழ்ந்துவிட்டுச் சிந்தனையை மட்டும் சீராக வைத்திருப்பது என்பது முடியாது''[105] என்பது சங்க இலக்கிய வாசிப்பின் இன்றைய நிலைக்கும் பொருந்தும். எனவே சிந்தனை சீராக வேண்டுமெனில் சங்க இலக்கிய வாசிப்பும் மிகுதியாதல் வேண்டும்.

சங்க இலக்கிய வாசகர்களில் சங்க இலக்கியம் மட்டுமன்றி, சங்க இலக்கியம் தொடர்பான பிற (ஆய்வு) நூல்களையும் வாசிப்பவர்கள் இருக்கிறார்கள் (35%) அவர்கள் விரும்பும் சங்க இலக்கிய ஆராய்ச்சியாளர்:

வ.சுப.மா - 63%, மு.வ. - 18%, பிறர்/நிறையபேர் - 19%. வ.சுப.மா, மு.வ. ஆகிய இவ்விருவர் தம் ஆய்வேடுகளான தமிழ்க்காதல், The Treatment of Nature ஆகிய இரண்டு நூல்களே மேற்குறித்த வாசகர்களின் விருப்பமான ஆராய்ச்சி நூலாகவும் உள்ளன. மேலும் இத்தகைய ஆராய்ச்சியாளர்தம் தாக்குறவால் சங்க இலக்கியத் திறனாய்வில் ஈடுபாடு கொண்டவர்களும் உள்ளனர் (72%) இவர்களில் சங்க இலக்கியம் தொடர்பான நூல் எழுதுவதில் ஈடுபாடு கொண்டவர்கள் 15%. அவர்களில் ஒருநூல் எழுதியுள்ளோர் - 7%, இரண்டு நூல்கள் எழுதியுள்ளோர் - 5%, மூன்று நூல்கள் எழுதியுள்ளோர் - 3%, நூல் வடிவில் எழுதாதோர் - 85%. அவ்வாறே சங்க இலக்கியம் பற்றிய திறனாய்வுக் கட்டுரைகள் எழுதுவதில் ஈடுபாடு கொண்டவர்களில்... 1-5 கட்டுரைகள் எழுதியுள்ளோர் - 32%, 6-10 கட்டுரைகள் எழுதியுள்ளோர் - 30% 11-15 கட்டுரைகள் எழுதியுள்ளோர் - 18%, ஒரு கட்டுரையும் எழுதாதோர் - 20%. இங்கு 72% வாசகர்கள் திறனாய்வில் ஈடுபாடு கொண்டுள்ளனர் என்பதும் சங்க இலக்கிய வாசிப்பில் மிகுந்த ஆர்வத்துடன்/தன்னார்வத்துடன் வாசிப்பவர்கள் 67% உள்ளனர் என்பதும் ஒப்பிடத்தக்கதாகும். அதன்வழி இவ்வாசகர்கள் எழுதுவதற்காகவே வாசிக்கிறார்கள் என்று கருதவும் இடமுண்டு. எனினும் 20% வாசகர்கள் வாசிப்பினும் எழுத்தில் ஈடுபடாமல் உள்ளனர். எனவே எழுதுவதற்காகவே வாசிக்கிறார்கள் என்பதை உறுதிப்படுத்த இயலவில்லை. தமிழில் வாசித்து, தமிழில் எழுதுவது மட்டுமன்றி,

சங்க இலக்கியம் தொடர்பாக ஆங்கிலத்திலும் வாசிப்பவர்கள் உள்ளனர் (15%). இவர்களில் ஆங்கிலத்தில் சங்க இலக்கியம் தொடர்பாக நூல், கட்டுரைகளை எழுதுவோரும் உள்ளனர் 3%. ஆங்கிலக்கட்டுரை எழுதுவோர் 2% சங்க இலக்கியம் பற்றி ஆங்கில நூல் எழுதுவோர் 1% மேலும், சங்க இலக்கியம் வாசிப்பவர்களில் இலக்கணம் வாசிப்பதிலும் மரபுக்கவிதை எழுது வதிலும் ஈடுபாடு கொண்டவர்களும் உள்ளனர் என்பதையும் கள ஆய்வு தெரிவிக்கிறது. இலக்கண வாசிப்பில் ஈடுபாடு கொண்டவர்கள் 17%, மரபுக்கவிதை எழுதுவதில் ஈடுபாடு கொண்டவர்கள் 23%. இவ்வாறு படைப்புத் திறனெல்லாம் கொண்டிருக்கும் சங்க இலக்கிய வாசகர்களுள் மிகுதியான வாசகர்க்குப் பிடித்தமான பாடல்,

அகத்தில் : யாயும் ஞாயும் யாராகியரோ

புறத்தில் : யாதூஉம் ஊரே யாவரும் கேளிர்

மொத்தத்தில் சங்கப் பாடல்களுள் வாசகர்களுக்கு மிகவும் பிடித்தமானவை:

அகப்பாடல்கள் - 72%, புறப்பாடல்கள் - 6%, அகம் புறம் இரண்டும் - 22%, எட்டுத்தொகை நூல்களில் வாசகர்கட்குப் பிடித்தமான நூல்:

குறுந்தொகை - 62%, புறநானூறு - 18%, நற்றிணை - 9%, கலித்தொகை - 6%, பிறநூல்கள் - 5%. எனவே தமிழ் வாசகர்க்குப் அகப்பாடல் வாசிப்பில் விருப்பம் மிகுதி என்பது புலப்படும். இங்கு, "தொல்காப்பியத்துள் தலைமையானது பொருளதிகாரமே. எழுத்ததிகாரமும் சொல்லதிகாரமும் பொருளதிகாரத்திற்குக் கூட்டிச் செல்லும் வாயில்களே. பொருளதிகாரத்தில் உள்ள ஒன்பது இயல்களில் அகம் பற்றிய இயல் முதன்மையாக இடம் பெற்றிருப்பது தற்செயலானது அன்று. சங்கப்பாக்களுள் அகம் பற்றிய பாக்கள் மிகுதியாக இருப்பதும் தற்செயல் நிகழ்ச்சி அன்று. சிக்கனத்திற்குப் பெயர் போன திருவள்ளுவர் காமத்திற்கு எனத் தனிப்பாலும் 250 குறட்பாக்களும் அமைத்ததும் தற்செயல் நிகழ்ச்சி அன்று. இவையெல்லாம் காதல் வாழ்வு தலைமை பெற்றிருந்ததைக் காட்டும் சான்றுகள்"[106] என்ற கருத்தின் வழிக் காதல் வாழ்வுக்கு முதன்மை இடமளிக்கும் தமிழ்ச்சமூகத்தின் வாசகர்க்கு அகப்பாடல் விருப்பம் தொன்றுதொட்டு இருந்து வருகிறது என்பது தெளிவாகும்.

சங்க இலக்கிய வாசகர்க்குப் பத்துப்பாட்டில் பிடித்தமானவை:

நெடுநல்வாடை - 24%, திருமுருகாற்றுப்படை - 28%, பட்டினப் பாலை - 16%, முல்லைப்பாட்டு - 8%, பிற நூல்கள் - 24%.

சங்க இலக்கிய வாசகர்க்குப் பிடித்தமான சங்கப் புலவர்கள்:

நிறையபேர் (எனக் குறித்தவர்கள்) - 73%, கணியன் பூங்குன்றனார் - 10%, ஔவையார் - 7%, நக்கீரர் - 4%, கபிலர் - 4%, பாலைபாடிய பெருங்கடுங்கோ - 2% ஒரே பாடலை எழுதியிருப்பினும் கணியன் பூங்குன்றனார்க்கு 10% வாசகர்கள் இன்றும் இருப்பது குறிப்பிடத்தக்கது. அதேபோல் பிடித்தமான பாடலடிகளைக் குறிப்பிடுகையில் வாசகர்கள் யாதூஉம் ஊரே யாவரும் கேளிர் - 18%, நகைக்கூட்டம் செய்தான் அக்கள்வன் மகன் - 7% நிறைய உண்டு - 75% - எனக் குறித்துள்ளனர். எனவே ஒரே பாட்டு 2000 ஆண்டுகள் கழிந்தும் மிகுதியானோர்க்கு விருப்பமாக இருக்கும்படி எழுதிய கணியன் பூங்கன்றனார் சங்க இலக்கியத்தில் முதலிடம் பெற்றுள்ளார் என்பது தெளிவு.

வாசகர்கட்குச் சங்க இலக்கியப் பதிப்பில் பிடித்தமானவை... உ.வே.சா. பதிப்பு - 82%, பிற பதிப்பகள் - 18%, பிடித்தமான உரை கழக உரை - 72%, பிற - 28%. எனவே தமிழுலகம் இருக்கும் வரை உ.வே. சா-வும் கழக வெளியீட்டகமும் நினைக்கப்பெறும் என்பது உறுதி.

சங்க இலக்கியத்தில் வாசகர்கள் எவற்றை மிகுதியாக முதன்மையாக அறிகிறார்கள் என்பதைச் சுட்டும்போது... சமுதாயவியல் - 28%, கருத்தியல் - 12%, இலக்கிய நயம்-35%, இலக்கிய அறிவு - 12%, மொழியியல் - 6%, பிற - 7%, எனக் குறித்துள்ளனர். எனவே சங்க இலக்கிய வாசகர்க்கு இலக்கிய நயத்திலும் சமுதாயவியலிலும் மிகுந்த ஈடுபாடு இருப்பது விளங்கும். வாசகர்கள் சங்க இலக்கியம் பிற இலக்கிய வடிவங் களிலிருந்து எவ்வாறு மாறுபடுகின்றது என்பதற்கு...

சங்க இலக்கியம் எளிமை என்று 28% வாசகர்களும் சங்க இலக்கியம் கடுமை/தற்கால இலக்கியம் எளிமை என்று 72% வாசகர்களும் குறித்துள்ளனர். சங்க இலக்கியம் பரப்பப் பெறவேண்டும் என்பது 97% வாசகர்களின் கருத்தாகவும்; பரப்பத் தேவையில்லை என்பது 3% வாசகர்களின் கருத்தாகவும் உள்ளது. எனவே ஒரு சிலர் தவிர்த்து அனைவரும் சங்க இலக்கியம் பரப்பப்பெறவே விழைகின்றார்கள் என்பது முடிவு. அதற்கான வழிமுறைகளில், பாடப்பகுதியை மிகுதியாக்கல் - 32%, ஆய்வுத்தலைப்பைச் சங்க இலக்கியத்திலேயே தரல் - 12%, மலிவுப்பதிப்பும் எளியவுரையும் - 45%, நடப்பியலுடன் சேர்ந்த எளியவுரை - 8%, பிற - 3% என்ற மிகுதியானோர் எளிய உரை யோடு கூடிய மலிவுப் பதிப்புகளே சங்க இலக்கியம் பரப்பும்

வழிகளாகச் சுட்டியுள்ளனர். இதனைக் கவனத்தில் கொண்டு பதிப்பாளர்கள் செயல்படவேண்டும்.

தமிழ் வாசகர்கள் சங்க இலக்கியம் மற்றும் அவை தொடர்பான நூல்களைச் சொந்தமாக வாங்கி வாசிப்பதுண்டு. அவ்வாறு ஓராண்டில் நூல் வாங்குவோர் - 58% ரூ. 100 - ரூ. 200 - 36%, ரூ.201 - ரூ. 300 - 4%, ரூ. 301 - ரூ. 400 - 3% ரூ. 401 - 1000 களஆய்வுத்தரவு இவ்வாறிருப்பினும், தமிழ் நூல்களை வாங்குவோர் குறைந்துவிட்டனர். தமிழாசிரியர்களின் இலக்கிய நாட்டம் குறைந்துவிட்டது. பழந்தமிழ் இலக்கியங்கள் மறு பதிப்பு வராமல் போகவும் வெளியிட்டுவந்த நிறுவனங்கள் மூடப்படவும் - தமிழர்களின் வாசிப்புக் குறைந்துவிட்டதே காரணம் என்ற கருதப்படுகிறது.[107] பாரி நிலையம் வெளியிட்டு வந்த புலியூர்க்கேசிகன் எளிய உரை (மலிவுப்பதிப்பு), நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் வெளியிட்ட சங்க இலக்கிய நூல்கள், தஞ்சை சரசுவதி மகால் வெளியீடு, உ.வே.சா பதிப்பக வெளியீடு, முதலிய நிறுவனங்கள் சங்க இலக்கிய நூல்களை வெளியிடுதலை நிறுத்திக்கொண்டுள்ளன. வாங்குவோர் குறைவும் அதற்கு விலையேற்றமும் காரணமாகக் கருதத்தகும். ஆயினும் சங்க இலக்கியம் தவிர்த்த, பிற தற்கால இலக்கியங்கள் வெகுவாக விற்பனையாகின்றன. அதற்கேற்ப-தமிழர்கள் மிகுதி யும் விரும்பி வாசிப்பது... சங்க இலக்கியம் - 21%, இக்கால இலக்கியம் - 70%, பிற - 9%, இக்கால இலக்கியத்தில் நாவல் 23%, சிறுகதை 32%, கவிதை 6%, விமர்சனம் 9%,. எனவே இக்கால இலக்கிய வாசிப்புக்கும் விற்பனைக்கும் தொடர்பு உள்ளது விளங்கும். தற்கால இலக்கிய வகைகளில் கதைகளே மிகுதியும் விரும்பி வாசிக்கப்பெறுகின்றன. இதற்கும் சங்க இலக்கியப்பாடல்கள் மிகுதியும் கதைத்தன்மையோடு இருப் பதற்கும் ஓர் தொடர்பு உண்டு. சங்க இலக்கிய வாசிப்புப் படிப் படியாகக் கதை வாசிப்புக்கு மாறியுள்ளது என்று கருத இட முண்டு. 1992 இ.ப.த. மன்ற ஆய்வுக்கோவையின் கணக்கீட்டின்படி சங்க இலக்கியத்தின் இடத்தைத் தற்கால இலக்கியம் கைக்கொண்டுள்ளது விளங்கும். ஆயினும் 79% வாசகர்கள் தங்கள் வாழ்வு முன்னேற்றத்துக்குச் சங்க இலக்கியம் பயன்படுவதாகக் குறிப்பிடுகின்றனர். அவ்வகையில் துன்பமான சூழலில் அறிவுறுத்தி நல்லமுறையில் மனமாற்றத்தைத் தருவதாகச் சங்க இலக்கிய வாசிப்பு அமைந்துள்ளதெனச் சுட்டியுள்ளனர். அந்த வகையில் ''சில நூல்கள் முதல்முறையாகப் படிக்கும் போது தொல்லையாகவும் இருக்கும்; தொடர்ந்து படிக்கப்

படிக்க இன்பம் பயக்கம்; வாழ்நாளில் மறக்கமுடியாத துணையாக இருக்கும்; வழிகாட்டியாக நிற்கும்; மனச்சான்றைப் பண்படுத்தும்''[108] என்ற கருத்துச் சங்க இலக்கிய வாசிப்புக்கும் பொருந்தும் என்பது புலப்படும். சங்க இலக்கியத்தை ஓலைச் சுவடியில் வாசித்த அனுபவம் கொண்ட வாசகர்கள் 7%. இவர்கள் ஓலைச் சுவடிப் பயிற்சியின் பொருட்டு வாசித்துள்ளார்கள்.

எந்த ஒரு செயலும் தடையில்லாமல் நடைபெற்றால் மிகுதி யான பயனைத்தரும். ஆயின் சங்க இலக்கிய வாசிப்புப் பழக்கத்தில் வாசகர்க்குத் தடையாக இருப்பவை... வாழ்க்கைச் சிக்கல் - 8%, குடும்பச்சூழல் - 15%, பணியின் பளு - 35%, சமூகச் சூழல் - 27%, வேறு காரணங்கள் - 8%, தடையில்லை - 7%. எனவே பணியின் பளுவின் காரணமாக மிகுதியான வாசகர்க்குத் தமது வாசிப்புப் பழக்கத்திற்குத் தடை ஏற்படுகிறது என்பது குறிக்கத்தக்கதாகும். மேலும் 7% வாசகர்களே எந்தத் தடையும் இல்லாமல் வாசிக்கின்றனர் என்பதும் விளங்கும்.

வாசகர் தேவைக்கேற்பவே அவர்தம் வாசிப்பும் நிகழும். அவருடைய குடும்பச் சூழல் செய்யும் தொழில், சமூகத்தேவை, எழுதும் பண்பு, ஆயும் பாங்கு, வெளிப்படுத்தும் ஆற்றல் முதலியவற்றின் அடிப்படையில் அவர்களுடைய வாசிப்பு குறைந்தோ மிகுந்தோ அமையும். சங்க இலக்கிய வாசிப்புக்கும் அது பொருந்தும். வாசகர்கள் சங்க இலக்கிய வாசிப்பை மேற்கொள்வதற்கான இன்றியமையாத காரணங்கள் வருமாறு:

1. அறியும் ஆவலால் எழும் தன்னார்வத்தின் காரணமாக வாசிப்பது.
2. பாடம் நடத்துவதற்காக/விளக்கி உரைப்பதற்காக வாசிப்பது. (ஆசிரியர்கள்)
3. கட்டுரைகள், ஆய்வுரைகள், நூல் எழுதுவதற்காக வாசிப்பது.
4. தேர்வுகளுக்காக வாசிப்பது (மாணவர்கள்)
5. மேடைகளில் இலக்கிய நயத்துடன் பேசுவதற்காக வாசிப்பது.
6. வரலாறு எழுதுவதற்காக வாசிப்பது.
7. உரை/எளிய உரை எழுதுவதற்காக வாசிப்பது.
8. மனமாற்றம் வேண்டி வாசிப்பது.
9. இலக்கணத் தெளிவு/ஆய்வின் பொருட்டு வாசிப்பது
10. மேற்கோளுக்காக வாசிப்பது - முதலியனவாகும்.

*சங்க இலக்கிய வாசிப்பை வளர்க்கும் வழிகள்*

1. பள்ளிப்படிப்பு முதலே சங்க இலக்கியப்பாடப்பகுதியை மிகுதியாக-விரிவாக அமைத்தல்.
2. சங்க இலக்கிய மலிவுப்பதிப்பை வெளியிடல்.
3. தற்கால மொழி நடையில் எளிய உரைகளுடன் சங்க இலக்கியம் வெளியிடல்.
4. சங்க இலக்கியத்தைச் சிறுசிறு நூல்களர்க்கி (பகுதி பகுதியாக) கையடக்கப் பதிப்புகளாக வெளியிடல்.
5. தற்கால வாழ்வியலுடன் ஒப்பிட்டு, சங்க இலக்கியத்திற்கு உரை செய்தல்.
6. பொதுவிடங்களிலும் தொடர்புச் சாதனங்களிலும் சங்க இலக்கிய வாசிப்பின் தேவை பற்றிய சொற்பொழிவுகளை நிகழ்த்தல்.
7. சங்க இலக்கிய வாசிப்பில் சிறந்தவர்க்குத் தமிழாசிரியர் வேலைவாய்ப்பில் முன்னுரிமை அளித்தல்.

முதலிய செயல்பாடுகளை மேற்கொள்வதன் வழி மிகுதியானோர் சங்க இலக்கிய வாசிப்பில் மிகுதியாக ஈடுபட முடியும்.

*முடிவுரை*

'சங்க இலக்கிய வாசிப்பு' எனும் பொருளில் செய்யப்பெற்ற இவ்வாய்வின் வழிப் பெறப்படும் ஆய்வு முடிவுகள் வருமாறு:

சங்க இலக்கிய வாசிப்பு தமிழ்ப்பண்பாட்டு மரபுக் கூறுகளை வாசகருக்கு வழங்குகின்றது. சங்க இலக்கிய வாசிப்புக்குத் தொல்காப்பியமும் உரைநூல்களும் உறுதுணையாக உள்ளன. தொல்காப்பியத்தின் துணை உள்ளுறை, இறைச்சி, பொருள் கோள் முதலிய சங்க இலக்கியப் புரிதலுக்குப் பெரிதும் தேவைப் படுகின்றது. தொல்காப்பியம் தற்கால அமைப்பியல் கருத்தோடு ஒத்துள்ளது. அகப்பாடல்களில் பெயர் சுட்டலாகாது என்ற தொல்காப்பியர் கருத்து வாசிப்புச் சுதந்திரத்தை அடிப்படை யாகக் கொண்டதாகும். உரைநூல்கள் சங்க இலக்கிய வாசிப்பின் ஆழத்திற்கும் அகலத்திற்கும் பயன்படுகின்றன. சங்க இலக்கிய வாசிப்புக்குப் பயிற்சி இன்றியமையாதது. பயிற்சி இருந்தால் தான் புரிதலில் தெளிவு கிடைக்கும். சங்க இலக்கியம் சமூகத்தில் ஏற்படுத்தும் தாக்கம் குறைந்து வருகின்றது. சங்க இலக்கிய வாசிப்பின் வழி ஏற்பட்ட தாக்கமே பிற்காலத்தில் இலக்கியத் திறனாய்வு நூல்கள் எழக் காரணமாக உள்ளது. சங்க இலக்கிய வாசிப்பு அமைப்பியல் கருத்துப்படி தமிழறிஞர் வாசிப்பில் மாறுபட்ட பொருளறிதலைத் தந்துள்ளது.

'ஒல்' என்ற அடிச்சொல்லிலிருந்து ஒலி, ஓலை, ஓதல் ஆகிய சொற்கள் வளர்ச்சி அடைந்துள்ளன. ஓதலே பிற்காலத்தில் வாசித்தல், படித்தலாக மாறியுள்ளது. சங்க இலக்கியம் வாய்மொழியாகவே தொடக்கத்தில் இருந்துள்ளது. எனவே சங்க இலக்கிய வாசிப்பும் வாய்மொழி/செவிவழி வாசிப்பாகவே முதலில் இருந்துள்ளது. இதற்குச் சங்க இலக்கியத்தில் சான்றுகள் உள்ளன. சங்க இலக்கிய வாசிப்பு ஒலி வடிவத்திலிருந்து ஓலை வடிவத்திற்கு மாறி யுள்ளது; இவ்விரண்டிற்கும் இடையில் வரிவடிவம் தோன்றி யுள்ளது. ஒலி வடிவ வாசிப்பிலும் வரிவடிவச் சங்க வாசிப்பிலும் சங்க காலத்தில் இசையோடு வாசிக்கும் போக்கு இருந்துள்ளது. ஓலைச்சுவடி தோன்றிய பிறகு சங்க இலக்கிய வாசிப்பு பல்வேறு நிலைகளில் வகைகளில் பரவலாகியுள்ளது. அதன்வழிக் கல்வி முறையும் வளர்ந்துள்ளது.

ஓலைச் சுவடியில் முதலில் எழுதப்பெற்றவை சங்க இலக்கியமே. ஆனால் அச்சில் வெளியானவற்றில் சங்க இலக்கியம் முதலில் இடம் பெறவில்லை.

சங்க இலக்கிய நிலைபேற்றிற்கான அடிப்படைக் காரணம் தொடர்ந்து சங்க இலக்கியம் வாசிக்கப்பெற்றமையேயாம்.

அச்சுக்காலத்தில் சங்க இலக்கியத்தை இசையோடு வாசிப்பது குறைந்துவிட்டது. தற்காலத்தில் தேவைக்கேற்பவே சங்க இலக்கியம் வாசிக்கப் பெறுகிறது. சங்க இலக்கிய வாசிப்பில் மிகுந்த ஆர்வமுடையவர்கள் 67% தமிழ் வாசகர்கள். சங்க இலக்கிய வாசிப்பில் பணிக்காலத்திலேயே மிகுதி யானோர்க்கு (40%) ஈடுபாடு வந்துள்ளது. சங்க இலக்கிய வாசிப்பில் மூலமும் உரையும் வாசிப்போர் மிகுதி 62%, 83% வாசகர்கள் இரவு நேரத்திலேயே சங்க இலக்கியம் வாசிக்கின்றனர்.

சங்க இலக்கியத்தை மௌனமாக வாசிப்போரே மிகுதி 73%.

வேலை நிமித்தமாகவே மிகுதியானோர் சங்க இலக்கிய வாசிப்பில் ஈடுபடுகின்றனர் 74%.

சங்க இலக்கிய வாசிப்பில் ஈடுபாட்டை ஏற்படுத்தியவர்கள் கற்பித்த ஆசிரியர்கள் என்று 82% வாசகர்கள் குறித்துள்ளனர்.

தமிழாசிரியர்களின் சங்க இலக்கிய வாசிப்பு, குறைந்து கொண்டு வருகிறது.

தமிழ் வாசகர் மிகுதியும் விரும்பும் சங்க இலக்கிய ஆராய்ச்சியாளர் வ.சுப. மா. மிகுதியும் விரும்பும் ஆராய்ச்சி நூல் தமிழ்க்காதல்.

சங்க இலக்கியம் தொடர்பான திறனாய்வில் ஈடுபடும் வாசகர்கள் 72%.

சங்க இலக்கிய வாசகர்கள் இலக்கண வாசிப்பிலும் மரபுக்கவிதை எழுதுவதிலும் ஈடுபாடு கொண்டுள்ளனர் (சராசரி 20%). சங்க இலக்கிய வாசகர்கள் அகப்பாடல்களையே மிகவும் விரும்பி வாசிக்கின்றனர் 72%.

சங்க இலக்கிய வாசகர்கட்கு உ.வே.சா. பதிப்பும் கழக உரையும் மிகுதியும் விருப்பமானவையாம். தற்கால வாசகர்கள் சங்க இலக்கியம் எளிய உரையோடு மலிவுப் பதிப்பாக வெளியிடப்பெறவேண்டு மென்று விரும்புகின்றனர்.

சங்க இலக்கிய வாசிப்பின் இடத்தைப் பேரளவு தற்கால இலக்கிய வாசிப்பு, பெற்றுள்ளது.

## குறிப்புகள்

★ **சங்கப் பாடல் தொகுப்புகளில் இல்லாதவை, சிதைந்தவை (எண்: பாடல் எண்)**

| | | |
|---|---|---|
| நற்றிணை - | 234 | - முழுதுமில்லை |
| | 385 | - பிற்பகுதி இல்லை |
| ஐங்குறுநூறு - | 129 | - முற்றுமில்லை |
| | 130 | - முற்றுமில்லை |
| | 416 | - சிதைந்துள்ளது |
| | 490 | - சிதைந்துள்ளது |
| பதிற்றுப்பத்து - | 1-10 | - கிடைக்கவில்லை |
| | 91-100 | - கிடைக்கவில்லை |
| பரிபாடல் - | 3 7 பாடல்கள் | - கிடைக்கவில்லை |
| புறநானூறு - | 267, 268 | - கிடைக்கவில்லை |
| | 328, 370 | - முதற்பகுதி சிதைந்துள்ளது |
| | 244,335, 361 | - ஈற்றுப்பகுதி சிதைந்துள்ளது. |

சில பாடல்களில் ஓரிரு சொற்களைக் காணவில்லை.

1. விஜயராணி நோக்கு - ப. 228, 229.
2. T.P. Meenakshi Sundaram, History of Tamil Literature - p. 43 These works (Sangam) deal with the domestic and non domestic life of the Tamil which are called Agapporul and Purapporul respectively. This kind of man's whole life being divided into two divi sions namely, Agam and Puram in Tamil Literature is indeed Unique and this is not to be found anywhere in the Literatures of the World.
3. சி.இ. மறைமலை, இலக்கியக் கொள்கைள் - ப.1, 2.
4. மறைமலையடிகள், முற்காலப் பிற்காலத் தமிழ்ப்புலவோர் - ப.23.
5. மு.வ. இலக்கியத்திறன் - ப.63.
6. க. பூரணச்சந்திரன்; அமைப்பியல் - ப. 129.
7. க. பூரணச்சந்திரன், அமைப்பியல் - ப. 10.

8. க. பூரணச்சந்திரன்,அமைப்பியல் ப.

9. நா. பாலகிருஷ்ணன் (மொ.பெ.), மாற்றக்கூடியதா மனித இயல்? - ப. 17.

10. மு.வ., இலக்கியத் திறன் - ப.266, 267.

11. Murison, The Public Library - P. 207.

12. பாவண்ணன், தினமணி, 02.11.91.

13. மு.வ. இலக்கியத்திறன் - ப. 299 - 302.

**நுகர்தலின் ஆறு நிலைகள் - ஐ. ஏ. ரிச்சர்ட்ஸ்**

1. சொற்கள் நூலிலிருந்து கண் / செவி வாயிலாக மூளைக்குச் செல்லுதல்.
2. அச்சொற்களுக்குரிய பொருள்களின் உருவங்களை மனம் உணர்தல்.
3. சொற்களை மறந்து பொருள்களின் காட்சி மட்டும் புலப்படுதல்.
4. வாசகனின் முந்தைய அனுபவம் அக்காட்சியோடு சேரல்.
5. அதன்வழி உள்ளத்தில் ஏற்படும் உணர்ச்சி.
6. அந்த உணர்ச்சியால் விளையும் மனநிலை.

இந்த ஆறுநிலைகளில் நான்காவதான 'வாசகனின் முந்தைய அனுபவம்', வாசிகப்பட்ட கருத்தோடு உடன்படவில்லையெனில் அது வாசிப்பாக - நுகர்வாக அமையாது. எனவே இந்த ஆறுநிலைகளில் நான்காவது நிலையே வாசிப்பதற்கு மிகவும் இன்றியமையாதது.

14. சி.இ. மறைமலை, இலக்கியமும் சமூகவியலும் - ப.25, 26.

15. சமூகவியல் தொகுதி 1, (த.நா.பா.நி) - ப. 132.

16. தெ.பொ.மீ., தமிழிலக்கிய வரலாறு (சங்க காலம்) - ப. 17.

17. வ.சுப. மா., சங்கநெறி - ப.19.

18. மு.வ. இலக்கியத்திறன் - ப.57.

19. வ. பெருமாள், இலக்கியமும் வாழ்க்கையும் - ப. 112.

20. Ulrich Weisstein, Comparative Literature and Theory, P. 32.

21. டி.எஸ். எலியட், பாரம்பரியமும் தனித்துவத்திறனும் (மீட்சி) - ப. 57.

22. மு.வ., இலக்கியத்திறன், - ப. 58.

23. வ.சுப. மா., சங்க நெறி - ப.25.

24. தெ.பொ. மீ., தமிழிலக்கிய வரலாறு (சங்ககாலம்) - ப. 35.

25. தொல்:சொல்: பெயரியல் : 1.

26. தொல்:பொருள்: அகத்: 57.

27. குறுந் : 28.

28. தெ.பொ.மீ. முற்சுட்டிய நூல் - ப. 35.

29. க.பூரணசந்திரன், அமைப்பியல் - ப. 140.

30. மு.வ., இலக்கிய ஆராய்ச்சி - ப.10

31. கொல் என்பது இடைச்சொல். தற்காலத்தில் - கொல் என்பது கொலை செய் (ஏவல் வினை) என்ற பொருளைத் தருகிறது.

32. தெ.பொ.மீ. உலக நாகரிகத்தில் தமிழரின் பங்கு - ப.43.

33. வீ.ஆர். சத்தியமூர்த்தி, உரையாசிரியர்கள் திறனாய்வாளர்களா? (இ.ப.த.ம. 1979) ஆய்வுக்கோவை தொகுதி - 1, ப.247.

34. மு.வ., இலக்கியத்திறன் - ப. 247.

35. கைலாசபதி, ஒப்பியல் இலக்கியம் - ப.60 - 83, (Tamil Heroic Poetry. P. 16)

36. தெ.பொ.மீ., தமிழிலக்கிய வரலாறு (சங்ககாலம்) - ப. 48.

37. சி.பா., கட்டுரை வளம், - ப.8.

38. ம.ரா.போ. குருசாமி, தமிழியல்; ஓர் ஆகநோக்கு - ப. 50.

39. ச. கணபதிராமன், புறத்தில் அகம் (இ.ப.த.ம. 1979) ஆய்வுக்கோவை - ப. 135 - 139.

40. ஆ. ராமகிருட்டிணன், தமிழக வரலாறும் தமிழர் பண்பாடும் - ப. 67.

41. வ.சு.ப.மா., தமிழியல், ஓர் அகநோக்கு - ப. 27, 28

அலங்குளைய... என்று தொடங்கும் பாடலைப் பின்வருமாறு வ.சுப.மா. விளக்குவர். குறிப்பிட்ட புறநானூற்றடிகள் வரலாற்றுக்குப் பயன்படுபவை, பல்வேறு கருத்துரைகள் வரலாற்றாசிரியர்களால் இவ்வடிகளுக்கு எழுதப் பட்டிருப்பதை நீங்கள் அறிவீர்கள். பாரதப்போரில் பாண்டவப் படைக்கும் துரியோதனப் படைக்கும் சேரன் சோறிட்டான் என்று இவ்வடிக்குப் பொருள் கூறுவது வழக்கம். இக்கருத்துக்கு இவ்வடிகளில் இடமுண்டா? ஒருகாலத்து ஒரு கருத்தைச் சொல்லிவிட்டால், பின்னர்க் கற்பவர் திரண்ட நோக்கில் பார்க்கின்றனரேயன்றி மூலத்தோடு சொல்தோறும் பொருத்திப் பார்ப்பதில்லை. இருபடைக்கும் ஒப்பாகச் சோறு வழங்கினான் என்ற பொருள் எவ்வண்ணம் பெறப்படுகின்றது? ஐவரொடு சினந்து அன்னவர் நாட்டை நூற்றுவரும் கைப்பற்றினார்கள்; அந்நூற்றுவரும் போர்க்களத்து ஒழியும்படி பெருஞ்சோறு கொடுத்தான் என்பது இப்பகுதியின் நேர் பொருள். நூற்றுவரும் ஒழியப் பெருஞ்சோறு கொடுத்தான் என்பதிலிருந்து சேரன் பாண்டவர் பக்கம் துணையானவன் என்பது பெருஞ்சோறு புறப்பொருள் பற்றிய ஒரு குறியீடு. போர்க்குப் புறப்படும் படையாளர்க்கு அரசன் வழங்குகின்ற உணவு பெருஞ்சோறு என்ற அடைபுணர் மொழியால் சுட்டப்படும். வஞ்சித்திணையில் 'பிண்டம் மேய பெருஞ் சோற்றுநிலை' (1008) என்பர் தொல்காப்பியர். எனவே உதியஞ் சேரலாதன் பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தான் என்றால் யாருக்குக் கொடுத்தான் என்பது வினா. நூற்றுவர்க்கும் கொடுக்கவில்லை. ஐவர்க்கும் கொடுக்கவில்லை. தன் படைக்குப் பெருஞ்சோறு கொடுத்தான் என்பது கருத்து. இதன் குறிப்பு என்ன? பாண்டவர்க்குச் சேரன் பெரிய துணைப்படை அனுப்பினான் என்பது. இவ்விடத்துதான் பாட்டின் 'நடையோட்டத்தைப் பற்றவேண்டும். ஒழியப் பெருஞ்சோறு கொடுத்தான் என்பது பொருந்தாது. சோற்றுக் கொடையால் பொருகளத்து ஒழிக்கவும் முடியாது. நூற்றுவர் ஒழியத் தன் சேனைக்குப் பெருஞ்சோறு (இறுதிச்சோறு) கொடுத்து விடுத்தான் என்பதே பொருள். ''பெருஞ்சோற்றானும் நனிபல ஔவையார் தொண்டைமானுழை தூது சென்ற அரசியற் புலவர் ஆதலின், தன்படையாளர்க்குப் பெருஞ்சோறு வழங்கியபோது அவரையும் இவ்விருந்திற்கலந்து கொள்ளச்செய்தான் அதியமான். பெருஞ்சோறு என்பது பொருள் வரம்பான ஒருதுறைச் சொல்லென்று கருதாமையாலும், பெரும் என்பதனை வெற்றடையாகக் கருதினமையாலும் பிழையான பொருளுக்கு இடனாயிற்று''.

42. கா. சுப்பிரமணியன், சங்க காலச் சமுதாயம் - ப. 27.

43. க. பூரணச்சந்திரன், அமைப்பியல் - ப. 16/

44. 'ஒல்'லென, அகம் : 160 : 16.
ஒல்க - பரி : 21:61 (ஒல்க அசைய ; அசைவதால் ஒலி எழும்)
ஒல்க -நற்.303:1, 319:1, 348:3.

குறுந்: 88:1, கலி. 105:24
அகம் : 185 : 6, 301 : 19, புற : 209 : 16
மலை : 328
ஒலிக்கும் - குறுந். 7:4, அகம் : 160 : 16, மலை : 324
ஒலித்தல் - நற். 313 : 10, பரி:4:31, கலி: 81 : 31, புறம் : 137:6
ஒலிந்த - மதுரை : 261
ஒலிப்ப - அகம் : 45 : 2

45. கண்ணன், பண்டைத்தமிழரின் ஒலி உணர்வும் இசை உணர்வும், ப. 117.

46. ஓசை - நற்றிணை : 4 : 10, குறுந் : 16 :3
அகம் : 94 : 11, 267 : 12, புறம். 36 : 9

47. த்ச்.....ஒலித்தது > ஒலிச்சது, வந்தது । வந்துச்சி, மதமதன்னு > மசமசன்னு.

48. ஓதை - மலை : 227, 339.

49. ஓதல் - பதிற் : 24 : 6, சங்கப்புலவர் - ஓதல் ஆந்தையார்
தொல் : பொருள் : அகத்: 27, 28, 33 (33 - ஒத்து)

50. ''ஓதல் பகையே தூதிவை பிரிவே''
''அவற்றுள்
ஓதலும் தூதும் உயர்ந்தோர் மேன'' - தொல்:பொருள்:அகத்:27, 28.

51. தமிழ்ப்பேரகராதி - ப. 623.

52. பி. கோதண்டராமன், இந்தியக்கலைகள் - ப. 94.
இசை இருவகைப்படும் : 1. இசைக்கருவியால் இசைத்தல் 2. வாய்ப் பாட்டால் இசைத்தல்.
வ. பெருமாள், இலக்கியமும் வாழ்க்கையும் - ப. 34.
வாய்விட்டு உரத்த குரலில் படிக்கும்போது முதன் முதலில் செவி இன்பம் அடைகின்றது. எதுகை மோனை முதலிய இன்பச் சொற்கள் செவிக்கு விருந்து அளிக்கவல்லன.

53. தமிழ்ப்பேரகராதி - ப. 624.

54. மேலது - ப. 775.

55. 'பேடையும் பெடையும் நாடின் ஒன்றும்', தொல்:பொருள்: மரபியல் : ருரு.

56. கலி. - 42:3.

57. தமிழ்ப்பேரகராதி - ப.629.

58. நற். - 250, 369 (புலவர் பெயர் : மதுரை, ஓலைக்கடையத்தார் நல் வெள்ளையார், அகம்: 77:7, புறம். 350 (புலவர் பெயர்: மதுரை ஓலைக் கடைக்கண்ணம் புகுந்தாராயத்தனார்), கலி: 94:42.

59. மு.வ. மொழிநூல் - ப. 108, 109, பெரும்பாலும் வினையடியிலிருந்து பெயர்கள் பிறத்தல் திராவிட மொழியின் இயல்பாக உள்ளது.

60. தமிழ்ப்பேரகராதி ப. 629.

61. கே.கே. பிள்ளை, தமிழக வரலாறு மக்களும் பண்பாடும் - ப. 142.
ஆ. இராமகிருட்டிணன், தமிழக வரலாறும் தமிழர் பண்பாடும் - ப. 226, 111.

62. . சுப்பிரமணியம், சுவடி இயல் - ப. 128.

63. சோமலெ, தமிழ்நாட்டு மக்களும் மரபும் பண்பாடும் - ப. 146.

64. மு.வ. சங்க இலக்கிய யாப்பு, தமிழியல் : ஓர் அகநோக்கு - ப. 19, 20.

65. விரிவிற்குக் காண்க: K.Kailasapathy, Tamil Heroic Poetry - p.1. 16.

66. கைலாசபதி, சமூகவியலும் இலக்கியமும் - ப. 52.

67. மு.வ. மொழியின் கதை - ப. 17.

68. புறம். 206:2 (வள்ளண்மை உடையவர் செவிகளிலே விளங்கிய சொற்கள் விதைத்து).

69. புறம். - 237 : 4, 5.

70. கலி. -68: 3, 4 (தீய சொற்களை நீக்கப்பட்ட செவிகளே வயல்கள் என்றும், சான்றோர் பாடல்களே பாய்ச்சப்படும் நீர் என்றும், புலவரின் அறிவு வாய்ந்த நாவே ஏர் என்றும் புதிய புதிய கவியின்பமே இந்த உழவின் விளைவு என்பதும் உரை.

71. புறம் - 72:13 (கேள்வி - செவிவழி கேட்டறிந்த கல்வி)

72. தொல்: பொருள்: செய்: 75

73. இராம. சுந்தரம், சொல் புதிது சுவை புதிது - ப.1

74. சோமலெ, தமிழ்நாட்டு மரபும் பண்பாடும் - ப. 149.

75. தொல் : பொருள் : அகத் : 57

76. புறம் : 1

77. பாடலின் முன்பகுதி மட்டும் அந்தாதித் தொடை கொண்டது.

78. செ. அரங்கராசன், பொருள்கோள் - ப. 223

நூல்களை அல்லது அவற்றின் சில பகுதிகளை உருச்செய்து, மனத்திறுத்திப் பாடஞ் சொல்லவுங் கேட்கவுமான நிலை பண்டு மிகுதியாயிருந்தது. அவ்வாறு மனனஞ் செய்வதற்கு வாய்ப்பாகச் செய்திகளைச் செய்யுள் வடிவில் தந்தனர்; அச் செய்யுள்களை ஓசை நயம் பொருந்தப் பாடினர். செய்யுள்களில் ஒலிநயத்தைப் பொறுத்தவே எதுகை, மோனை, இயைபு போன்ற தொடைகளை அமைத்தனர்; மாற்றியும் அமைத்தனர். இவ்வாறு, தொடைக்காகச் சொற்களை மாற்றியமைத்தல் செய்யுள்கள் பலவற்றிற் காணப்படுகின்றது. குறிப்பாக மொழி மாற்று மற்றும் கொண்டுகூட்டுப். பொருள்கோள்களுடைய செய்யுள்களில் 'தொடைக்காகச் சொற்களை மாற்றல்' மிகுதியுங் காணப்படுகிறது.

79. நன்னூல் நூற்பா - 41:2, 3

80. நன்னூல் நூற்பா 40

81. நன்னூல் நூற்பா 42

82. நன்னூல் நூற்பா 43

83. பூ. சுப்பிரமணியம், சுவடிஇயல் - ப. 23

84. பூ. சுப்பிரமணியம், சுவடிஇயல் - ப. 63

85. A Descriptive Catalogue of palm-leaf manuscripts in Tamil. Institute of Asian Studies, 3 Vols. 6 books, 1990-1993

சென்னையில் உள்ள உ.வே.சா. நூலகம், கீழ்த்திசைச் சுவடி நூலகம், ஆசியவியல் ஆய்வு நிறுவனம் மற்றும் தஞ்சையில் உள்ள சரஸ்வதி மஹால் நூலகம் ஆகிய இடங்களில் சங்க இலக்கிய ஓலைச்சுவடிகள் வாசிக்கக் கிடைக்கின்றன.

86. ஆ. இராமகிருட்டிணன், முற்சுட்டிய நூல் - ப. 15

87. தமிழ்ப்பேரகராதி - ப. 2591

88. வெ. கிருட்டிணசாமி, தகவல் நுட்பவியல் - ப. 26

89. உ.வே.சா. முதலிய தொடக்க கால, சங்க இலக்கியப் பதிப்பாசிரியர்கள் ஓலைச்சுவடிகளிலிருந்தே மூல நூலைப் பெற்றிருந்தனர். எனினும் அச்சுக்கு

அந்நூல் செல்லும்போது கையெழுத்தில் தாளில் எழுதியே எடுத்துச் செல்லப்பெற்றது. அவர்கள் தாம் எழுதிய சங்க இலக்கியத்தாள் சுவடியை ஒருமுறையாயினும் வாசித்த பின்பே அச்சுக்குக் கொடுத்திருக்கவேண்டும். எனவே அவர்தம் அத்தகைய வாசிப்பு தாள்சுவடி வாசிப்பில் அடங்கும்.

90. முகவை இராமானுச கவியராயர் ஆத்திசூடிக்கு உரையெழுதி 1840இல் வெளியிட்டுள்ளார். இப்பதிப்பில் மெய்யெழுத்துகட்குப் புள்ளி இல்லாத அச்செழுத்துகளால் அச்சிடப்பெற்றுள்ளன.

B.S. Kesavan, Vol-1, -P. 88,89

இக்குறைபாடுகள் 1800களில் சி.வை. தாமோதரம்பிள்ளை, உ.வே.சா. முதலியவர்களால் நீக்கப்பெற்றன.

91. காண்க : வரைபடம் (பின்னிணைப்பு)

92. B.S. Kesavan, Vol,i, - P.97

93. ரகுநாதன், இலக்கிய விமர்சனம் - ப. 40

94. மு.வ., இலக்கிய ஆராய்ச்சி - ப. 40

95. மு.வ., இலக்கியத்திறன் (மேற்கோள்) - ப. 299

96. போல் காம்பெல், (மொ.பெ) நா. பாலகிருஷ்ணன்) மாற்றக்கூடியதா மனித இயல்? ப. 42

97. க.ப. அறவாணன், இ.ப.த.ம. ஆய்வுக்கோவை 1992 - முகவுரை

98. பாவண்ணன், தினமணி : 02.11.91

99. வ.சுப.மா, சங்க நெறி - ப.46

100. வல்லிக்கண்ணன், நூலகம் இதழ் - ப.28-29

101. Ahuja & Pramila Ahuja, How to increase Reading speed, p.1 people read in the morning, they read during lunch hour and they read even after day's hard work. Some are in the habit of reading a lot before going to sleep. They even report that they need some type of reading before they go to bed, otherwise they do not enjoy a sound sleep.

102. மு.வ., இலக்கிய ஆராய்ச்சி - ப. 86

103. க.ப. அறவாணன், இ.ப.த.ம. ஆய்வுக்கோவை: 1992 நேற்றும் இன்றும் (அட்டவணை) ஐந்தமிழ் ஆய்வாளர் மன்ற ஆய்வுக்கோவை 1996, வசந்தமாலை அவர்களால் கணக்கிடப்பட்டுள்ளது.

105. போல் காம்பெல், மாற்றக்கூடியதா மனித இயல் - ப. 17

106. க.ப. அறவாணன், படைப்பாளி + சமுதாயம் = இலக்கியம் - ப. 84

107. முத்துக்குமாரசாமி, இலக்கிய நாட்டம் செந்தமிழ்ச்செல்வி

108. மு.வ., இலக்கிய ஆராய்ச்சி - ப. 33

## துணைநூல்கள்

சங்கப் புலவர்கள், -சங்க இலக்கியங்கள் (பதினெண் மேற்கணக்கு), நி.செ.பு., சென்னை 600 098., இரண்டாம் பதிப்பு - 1981.

தொல்காப்பியர், - தொல்காப்பியம், நி.செ.பு., சென்னை 600 098., இரண்டாம் பதிப்பு - 1981.

தொல்காப்பியர்,(இளம்பூரணர்) - தொல்: பொருள்: இளம்பூரணம், கழக வெளியீடு, சென்னை., மறுஅச்சு - 1969-அக்தோபர்.

தொல்காப்பியர், -தொல்காப்பியம் பாரி நிலையம், 184, பிராட்வே, சென்னை 600 108., புதிய ஏழாம் பதிப்பு - 1986.

அரங்கராசன்.செ., - பொருள்கோள் மணிவாசகர் பதிப்பகம், 55, லிங்கி தெரு, சென்னை 600 001., திருத்தியபதிப்பு - டிசம்பர் 1989.

அறவாணன். க.ப., - படைப்பாளி + சமுதாயம் = இலக்கியம், தமிழ்க்கோட்டம், 11, இரண்டாம் தெரு, மோகன் நகர், புதுச்சேரி., 09.08.1995.

இராமகிருட்டிணன் .ஆ, - தமிழக வரலாறும் தமிழர் பண்பாடும், சர்வோதய இலக்கியப்பண்ணை, 32/1, மேலவெளி வீதி, மதுரை 625 001. அக்டோபர் - 1983.

கண்ணன். கோ. , - பண்டைத்தமிழரின் ஒலி உணர்வும் இசை உணர்வும், நி.செ.பு., சென்னை 600 098., டிசம்பர் - 1994.

கிருட்டிணசாமி. வெ., - தகவல் நுட்பவியல், மணிவாசகர் பதிப்பகம், 55, லிங்கி தெரு, சென்னை 600 001., ஆகஸ்ட் 15, 1992.

கைலாசபதி .க , - ஒப்பியல் இலக்கியம், நி.செ.பு., சென்னை 600 098., இரண்டாம் பதிப்பு - 1986.

கைலாசபதி .க, - சமூகவியலும் இலக்கியமும், நி.செ.பு., சென்னை 600 098., இரண்டாம் பதிப்பு - பிப்ரவரி 1988.

கோதண்டராமன் .பி, - இந்தியக் கலைகள், நி.செ.பு., சென்னை 600 098., 1987.

சந்திரசேகரன் .ஆர், - தமிழியல் : ஓர் அகநோக்கு, தா.ஏ. ஞானமூர்த்தி 61 - அவது அகவை மலர், 'கலைக்கதிர்', அவினாசிச்சாலை, கோவை - 18. ஆகஸ்ட் 1972.

சுந்தரம் .இராம, - சொல்புதிது சுவை, புதிது தமிழ் நூலகம், சென்னை., 1978.

சுந்தரம் . டி (பதி), - சமூகவியல் (அடிப்படைக் கூறுகள்) த.நா.பா.நி., சென்னை., மறுபதிப்பு - 1988.

சுப்பிரமணியம் .பூ, -சுவடிஇயல், உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை 600 113., டிசம்பர் 1991.

சுப்பிரமணியன் .கா, - சங்காலச் சமுதாயம், நி.செ.பு., சென்னை 600 098., இரண்டாம் அச்சு - ஆகஸ்ட் 1987.

சோமலெ, - தமிழ்நாட்டு மக்களின் மரபும் பண்பாடும் நேஷனல் புக் டிரஸ்ட், இந்தியா. அ5, கிரீன்பார்க், புதுதில்லி 110 016. மறுபதிப்பு - 1981.

பாண்டுரங்கன் .அ. (பதி), - நோக்கு (தொகுதி 4), தமிழ்த்துறை, புதுவைப்பல்கலைக்கழகம், காரைக்கால்., 1992.

பாலசுப்பிரமணியன் .சி, - கட்டுரை வளம், நறுமலர்ப் பதிப்பகம், சென்னை 600 029., ஒன்பதாம் பதிப்பு : சூலை, 1980.

பிள்ளை. கே.கே., - தமிழக வரலாறு மக்களும் பண்பாடும் த.நா.பா.நி., சென்னை., 1972.

பூரணச்சந்திரன் .க - அமைப்பு மைய வாதமும் பின் அமைப்பு வாதமும், நிகழ் வெளியீடு, 123, காளீசுவரர் நகர், கோவை., ஏப்பிரல் 1991.

பெருமாள் .வ, - இலக்கியமும் வாழ்க்கையும், மணிவாசகர் பதிப்பகம், 12பி, மேலசன்னதி, சிதம்பரம். ஐந்தாம் பதிப்பு - செப்டம்பர் 1984.

போல்காம்பெல், - மாற்றக்கூடியதா மனித இயல்?, நா. பாலகிருஷ்ணன் (மொ.பெ.), காந்தளகம், 834 அண்ணாசாலை, சென்னை., மார்கழி 1987.

மறைமலை .சி.இ., - இலக்கியக் கொள்கைகள், நீலமலர் வெளியீட்டகம், 5-பி, எல்லப்ப நாயக்கன் தெரு, கோமளீசுவரன் பேட்டை, சென்னை 600 002., டிசம்பர் 1976.

மறைமலை .சி.இ., - இலக்கியமும் சமூகவியலும், மணிவாசகர் பதிப்பகம், 55, லிங்கிதெரு, சென்னை -1., 1991 - டிசம்பர் 25.

மறைமலையடிகள், - முற்காலப் பிற்காலத் தமிழ்ப் புலவோர், கழக வெளியீடு, திருநெல்வேலி. மறுபதிப்பு - செப்தம்பர் 1963.

மாணிக்கம் .அ, - பணந்தி முனிவரின் நன்னூல் காண்டிகையுரை, பூம்புகார் பிரசுரம் பிரஸ், 63, பிராட்வே, சென்னை - 1., ஜுலை 1981.

மாணிக்கம் .வ.சுப. - சங்கநெறி, மணிவாசகர் பதிப்பகம், 55 லிங்கி தெரு, சென்னை -1., சூன் 1989.

மீனாட்சிசுந்தரம் .தெ.பொ, - உலக நாகரிகத்தில் தமிழரின் பங்கு டாக்டர் இராமசண்முகம், டாக்டர் ச. செயப்பிரகாசம் (பதி), ஞாலத்தமிழ்ப்பண்பாட்டு ஆய்வு மன்றம், மதுரை 625 021., வெளியீடு : சர்வோதய இலக்கியப் பண்ணை, 32/1, மேலவெளி வீதி, மதுரை 625 001., மறுபதிப்பு - 1990.

மீனாட்சிசுந்தரம் .தெ.பொ, - தமிழ் இலக்கிய வரலாறு (சங்காலம்), சர்வோதய இலக்கியப் பண்ணை, மதுரை 625 001., 1981.

ரகுநாதன், - இலக்கிய விமர்சனம், மீனாட்சி புத்தக நிலையம், 60, மேலக்கோபுர வாசல், மதுரை - 1., நான்காம் பதிப்பு - ஆகஸ்டு 1980.

வரதராசன் .மு, - இலக்கிய ஆராய்ச்சி, தாயக வெளியீடு, ஐந்தாம் பதிப்பு - 1986., விற்பனை உரிமை : பாரி நிலையம், சென்னை - 108.

வரதராசன் .மு, - இலக்கியத்திறன், தாயக வெளியீடு, மறுபதிப்பு - 1987, விற்பனை உரிமை : பாரி நிலையம், சென்னை - 108.

வரதராசன் .மு, - மொழி நூல், கழகம், 79 பிரகாசம் சாலை, சென்னை - 108., மறுபதிப்பு - 1985.

வரதராசன் .மு, - மொழியின் கதை, டாக்டர் மு.வ. பதிப்பக வெளியீடு மறுபதிப்பு - ஜுன் 1982.

வெற்றிச் செல்வன், - இசையியல், மணிவாசகர் நூலகம், சிதம்பரம் - 608 001., மறுபதிப்பு மார்ச் 1994.

### பருவ வெளியீடுகள்

எலியட்.டி.எஸ் (க.ஆ), - பாரம்பரியமும் தனித்துவத்திறனும், மீட்சி, திசம்பர் 1990.

பாவண்ணன் (க.ஆ) - வாசகன் இலக்கியம் வாசிப்பு, தினமணி (தமிழ்மணி) 02.11.91

முத்துக்குமாரசாமி .இரா, - இலக்கிய நாட்டம்,செந்தமிழ்ச் செல்வி, சூன் 1993.

வல்லிக்கண்ணன் (க.ஆ), - புத்தகங்களும் படிப்பவர்களும், நூலகம் (இதழ்), ஜுலை 1974.

### ஆய்வுக்கோவைகள்

இந்தியப்பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம், - ஆய்வுக்கோவை தொகுதி-1, உஸ்மானியப் பல்கலைக்கழகம், ஹைத்ராபாத். 1979.,

இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம், - ஆய்வுக்கோவை தொகுதி -1, புதுவைப்பல்கலைக்கழகம், புதுச்சேரி, 1992.

### அகராதிகள்

சென்னைப் பல்கலைக்கழகம், - தமிழ்ப்பேரகராதி, மறு அச்சு - 1982.

கழகம், - தமிழ்-ஆங்கில அகராதி, இரண்டாம் பதிப்பு - அக்தோபர் 1982.

கழகம், - தமிழ்-தமிழ் அகராதி, 16-ஆவது பதிப்பு - மார்ச்சு 1987.

## *English Books*

*Ahuja G.C & Pramila Ahuja - How to Increase Reading Speed Sterling Publishers Private Limited, L.10. Green Park Extemsion, New Delhi 110 016., Reprint 1994.*

*Kailasapathy .K, - Tamil Heroic poetry, OXFORD, At the Clarendon press, 1968.*

*KEsavan .B.S, - History of printing and publishing in India (Vol.1), National Book trust, India A.5, Green Park, New Delhi 110 016. 1985.*

*Meenakshi Sundaram. T.P, - History of Tamil Literature, publisher: Dr. B.D. AGASHE Secretary, Marathi sahithya parishad, Andhra pradesh, Isamja Bazar, Hyderabad. July 1965.*

*Murison .W.J, - The public Library, clive Bingely, London III Edition 1988.*

*Shu Hikosaka. Dr John Samuvel .G.Dr. (General Editors), - A Descriptive catalague of palm-Leaf Manuscripts in Tamil. 3 Vols, 6 Books.,Institutte of Asian Studies, Madras. 1990 - 1993.*

*Virich Weisstein - Comparative Literature and Literary Theory., Indiana Press Bloomington 1973.*



'ஆ' அச்சு = சங்க இலக்கியங்கள்
பத்துப்பாட்டு
புறநானூறு
அகநானூறு
கலித்தொகை
ஐங்குறுநூறு
பரிபாடல்
பதிற்றுப்பத்து
குறுந்தொகை
நற்றிணை
'அ'
'ஆ'
'அ' அச்சு = ஆண்டுகள் (ஓர் அலகு = 5 ஆண்டுகள்)

# தொல்லியலும் சங்க இலக்கியமும்

செ. இராசு
கல்வெட்டியல் துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

*முன்னுரை*

தொல்லியல் ஆய்வை *Archaeology* எனக் கூறுவர். இச்சொல் *Archrious - Logos* என்ற இரு சொற்களால் ஆனது. 'ஆதி காலத்தைப் பற்றிய அறிவியல்' என்பது இத்தொடரின் பொருளாகும். தொல்லியல் ஆய்வு என்பது பெரும்பாலும் பூமிக்குள் புதையுண்டு மறைந்து கிடக்கும், அல்லது மேற்பரப் பிலேயே காணப்படும் மனித இனத்தோடு தொடர்புடைய பொருள்களையும், அவர்கள் நாள்தோறும் வாழ்க்கையில் பயன் படுத்திய பொருள்களையும் அகழ்ந்தெடுத்து, பழம் பண்பாடு களைப் பற்றி உய்த்தறியும் ஆய்வாகும்.

தொன்மையான வரலாற்றை வெளிப்படுத்திக் காட்டும் இலக்கியங்கள், பிற ஆவணங்கள், கல்வெட்டுக்கள், செப்பேடுகள், நாணயங்கள் ஆகியவை தோன்றும் முன்னர் வாழ்ந்த மக்களின் வாழ்க்கைமுறை, பண்பாடு பழக்க வழக்கம், நாகரிகம், நம்பிக்கைகள் ஆகியவை பற்றி அறிய இத்தொல்லியல் ஆய்வே நமக்குத் துணை செய்கிறது. வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட காலநிலையை வெளிப்படுத்தும் திறன் இவ்வியலுக்கே உரியதாகும். இதனை மனிதன் தோன்றிய நாளிலிருந்து அவனைத் தொடர்ந்து பின்பற்றி அவன் வாழ்க்கை பற்றிய வரலாற்றுச் செய்திகளைத் துருவி ஆராயும் ஓர் இயல் எனலாம்.

இத்தொல்லியல் ஆய்வில் மதிப்புடைய பழம்பெரும் சின்னங்கள், தங்கம், வெள்ளி, இரத்தினக்கற்கள் போன்ற அழகிய அரிய மதிப்புமிக்க தொல்பொருட்களை மட்டும் ஆராய வேண்டும் என்பதில்லை; சாம்பல், மண், கற்கள், எலும்புத் துண்டுகள், மண்டை ஓடுகள், உடைந்த சட்டி பானைகள், மனிதன் அன்றாட வாழ்வில் பயன்படுத்திய பிற எளிய பொருள்கள் போன்றவற்றிற்கும் இந்த ஆராய்ச்சியில் மிகவும் அரிய முக்கியத்துவம் உண்டு.

உலகில் தோன்றி, ஆண்டு, மறைந்த பேரரசுகள், அவற்றின் வாழ்வு, படையெடுப்பு, வெற்றி தோல்விகள், அதன் விளைவுகள் ஆகியன பற்றியே நாட்டு வரலாறு நமக்குக் கூறுகிறது. பொதுமக்களைப் பற்றிய குறிப்புகளை அவை பெரும்பாலும் தருவதில்லை. ஆனால் தொல்லியல் ஆய்வோ இப்புவியில் தோன்றி வாழ்ந்து மறைந்த சாதாரண மக்களின் அன்றாட வாழ்க்கை முறையை, அவர்கள் விட்டுச்சென்ற எச்சங்களின் துணையால் நமக்குத் தெரிவிக்கிறது.

தமிழகத்தில் பல்வேறிடங்களில் தொல்லியல் அகழாய்வுகள் நடைபெற்றுள்ளன. அவற்றில் எடுத்த அரிய பல தொல்பொருட் களை C14 எனப்படும் கரிப்பகுப்பாய்வு மூலம் கால நிர்ணயம் செய்துள்ளனர்.

• அவற்றின் காலம் கி.மு. 7 ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 3 ஆம் நூற்றாண்டுவரை என்று அறிஞர்களால் ஆய்வு செய்து கணிக்கப்பட்டுள்ளது. அந்த அகழாய்வுகளில் சங்க இலக்கியத் தோடு மிகவும் தொடர்புடைய பெயர் - பொருள்கள் பற்பல கிடைத்துள்ளன. அவற்றின் மூலம் தொல்லியல் அகழாய்வுகள் காலம் சங்க காலம் என்பதை அறிகிறோம்.

எனவே அந்தத் தொல்லியல் அகழாய்வுக் காலத்தைச் சங்க இலக்கியத்தின் காலம் என்று கொள்ளுவது தவறாகாது. ஆழமான விரிவானதோர் பெரிய ஆய்வுக்கு ஒரு முன்னோடியாக இந்த ஆய்வுக் கட்டுரை அமைந்துள்ளது.

### பெருங்கற்படைச் சின்னங்கள்

தமிழகத் தொல்லியல் ஆய்வில் மிகவும் சிறப்பாகக் குறிக்கப்பெறும் தன்மையுடையது பெருங்கற்படைச் சின்னங் களின் ஆய்வாகும். தமிழகமெங்கும் பரவலாகவும், மிகுதியாகவும் காணப்பெறுவது இச் சின்னங்களேயாகும். இக்கால ஈமக் குழிகளில் பெரிய பெரிய கற்பலகைகளைக் கொண்டு செய்த கல்லறைகளையும் (Cists), கல் வட்டங்களையும் (Cairn Circles) கொண்ட காரணத்தால் இப்பண்பாட்டைப் பெருங்கற்படைப் பண்பாடு என்று அழைப்பர். இப்பண்பாடு வழங்கிய காலம் Megalithic Age என்று கூறப்படும். Megos என்றால் பெரிய என்றும், Lithos என்றால் கல் என்றும் கிரேக்க மொழியில் பொருள்படும்.

கல்வட்டம், கல்படை, கல் குவை, கல் திட்டை, கல் அறை, கல்பதுக்கை எனப் பல வகைகளாக இவை காணப் பெறும். இவை பெரும்பாலும் புதைகுழியிடங்கள் (Burial Sites) என வழங்கப் பெறும்.

*நீண்ட கற்கள்*

பெருங்கற்படைச் சின்னங்கள் உள்ள இடங்கள் பலவற்றில் நீண்டு உயர்ந்த கற்கள் நடப்பட்டுள்ளன.

ஆட்களைப் புதைத்துப் பதுக்கை சேர்த்திய பின் அதில் கல் நடுதலைப் புறநானூற்றில் உறையூர் இளம்பொன் வாணிகனார் கூறுகிறார்.

'பரலுடை மருங்கின் பதுக்கை சேர்த்தி
........................
இனிநட் டனரே கல்லும்' (புறம். 264)

என்பது அவர்தம் பாடல் பகுதி.

அகநானூற்றுப் பாடல் ஒன்றில் எயினந்தை மகன் இளங்கீரனார் பதுக்கையில் 'நெடுநிலை நடுகல்' இருந்ததைச் சுட்டுகிறார்.

'சிலை ஏறட்ட கணைவீழ் வம்பலர்
உயர்பதுக்கு இவர்ந்த அதர்கொடி அதிரல்
நெடுநிலை நடுகல்' (அகம். 289)

என்பது அப்பகுதியாகும். இந்நெடுநிலை நடுகல்லை

'ஏறுடை இனநிரை பெயரப் பெயராது
செறிசுரை வெள்வேல் மழவர்த் தாங்கிய
தறுக ணாளர் நல்இசை நிறுமார்
பிடிமடிந் தன்ன குறும்பொறை மருங்கின்
நட்ட போலும் நடாஅ நெடுங்கல்
அகல்இடம்' (அகம். 269)

என்று வருணிக்கிறார் மதுரை மருதன் இளநாகனார். பிற்காலப் புறப்பொருள் வெண்பாமாலையும் இதனை 'ஓங்கிய கல்' என்று கூறும்.

இவ்வாறு இக்கற்கள் ஒன்றோ, இரண்டோ, பலவோ பதுக்கைகளில் நடப்பட்டிருப்பதைப் பெரியார் மாவட்டத்தில் கொடுமணல் முக்கடி வேலம்பாளையம், குடுமியாம்பாளையம், பிரப் நகர், நல்லாம்பட்டி ஆகிய இடங்களில் காணலாம். தொல்லியலார் இதனை *Menhir* என்பர். இந்நெடுங்கற்களே நடுகல்லின் தொடக்கம் எனலாம். *Menhir* என்பதை நடுகல்லின் வேறாகக் 'குத்துக்கல்' எனத் தொல்லியலாளர்கள் அழைப்பர்.

**பதுக்கை**

பூமிக்குள் பதுக்கப்பட்டிருப்பதால் இவை பதுக்கை எனப் பெயர் பெற்றது. சங்க இலக்கியங்களில் இப்பதுக்கைகள் பல்வேறு இடங்களில் குறிக்கப்படுகின்றன. அவை

'செந்தொடை பிழையா வண்கண் ஆடவர்
அம்புவிட வீழ்ந்தோர் வம்பப் பதுக்கை' (புறம். 3)

'வெண்நுனை அம்பின் விசைஇட வீழ்ந்தோர்
எண்ணுவரம்பு அறியா வம்பப் பதுக்கை' (அகம். 109)

'செருவேட்டு சிலைக்கும் செங்கண் ஆடவர்
வில்இட வீழ்ந்தோர் பதுக்கை' (அகம். 157)

'வடிநவில் அம்பின் ஏவல் ஆடவர்
ஆள்அழித்து உயர்த்த அஞ்சுவரு பதுக்கை' (அகம். 215)

'நல்இசை வலித்த நாணுடை மனத்தர்
கொடுவில் கானவர் கணைஇடத் தொலைந்தோர்
படுகளத்து உயர்த்த மயிர்த்தலைப் பதுக்கை' (அகம். 231)

'இடுமுள் நெடுவேலி போலக் கொலைவர்
கொடுமரம் தேய்த்தார் பதுக்கை' (கலி. 12)

'....... மன்னர்
கழிப்பிணிக் கறைத்தோல் நிரைகண் டன்ன
உவலிடு பதுக்கை' (அகம். 67)

என்பனவாகும். ஏழாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இயற்றப்பட்ட பெருங்கதையும் 'ஆளிடு பதுக்கை' என்று கூறும்.

இப்பதுக்கைகள் பெரும்பாலும் போர்க்களத்தில் போரிட்டு வீர மரணம் எய்திய வீரர்கட்கு நினைவாக, மேடாக உயர்த்து அமைக்கப்பட்டிருந்தன என்பதை அறிகிறோம். பொதுமக்களில் உயர்ந்தவர்கட்கும் அமைக்கப் பட்டிருக்கலாம். பதுக்கைகளைக் 'கற்கிடை' என்றும் அழைப்பர்.

இப்பதுக்கைகளைச் 'சவக்குழிகள்' என்றும் அழைப்பர். இதன் உட்பகுதி நான்கு செங்குத்தான பாறைகளைக் கொண்டு ஒரு சிறு அறையாகத் தடுக்கப்பட்டிருக்கும். இவ்வாறான அறைகள் இரண்டு மூன்று கூடச் சேர்ந்தமாதிரி இருக்கலாம். ஒரு அறையிலிருந்து மற்றொரு அறைக்குப் போகத் துளையும் இருக்கும். இவ்வறைகளின் கிழக்குப் பக்கம் உள்ள துளைகளை 'இடுதுளை' என்பர். படையல் பொருள்களை வைக்க இவை பயன்பட்டிருக்கலாம். கல்லறையின் உள் உள்ள ஆவி வெளியே சென்றுவர அத்துளை பயன்படுகிறது என்ற நம்பிக்கையும் உண்டு.

சிறு கோயில்போல இது காட்சியளிக்கும். தமிழ்நாட்டுக் கோயிற் கட்டடக் கலையின் தொடக்க காலக் கூறினை இங்குக்

காணமுடியும். குழி பெரும்பாலும் கிழக்கு மேற்காக அமைக்கப் பட்டிருக்கும். கல்லறைகளைப் பெரிய பாறை கொண்டு மூடுவர். புதுக்கோட்டைப் பகுதியில் இவற்றைக் 'குரக்குப் பட்டடை' என்று அழைப்பர்.

இப்பதுக்கையின் உள்ளும், புறமும் மண் கலயங்களிலும், மண்ணிலும் இறந்தவர்கள் பயன்படுத்திய பொருள்கள் வைக்கப் பட்டிருக்கும். இரும்புக் கருவிகள், மட்பாண்டங்கள், அவர்கள் விரும்பி அணிந்த பல வண்ணக் கல் மணிகள், பாசிகள், சங்கு வளையல்கள் ஆகியன காணப்படும். இரும்புக் கருவிகள் வேளாண்மைக் கருவிகள், வீட்டு உபயோகக் கருவிகள், வேட்டைக் கருவிகள் எனப் பலவகைப்படும். குதிரை லாடம், கடிவாளம், அங்கவடி போன்றவைகளும் காணப்படும்.

**தாழிகள்**

தொல்லியல் ஆய்வில் மிகவும் சிறப்பிடம் பெறுவது தாழிகள் (Urns) ஆகும். தமிழ்நாட்டில் இவை பெரும்பாலும் நான்கு வகைகளாகக் காணப்படுகின்றன. அவை

1. கூர்முனைத் தாழிகள்
2. கால்கள் உடைய தாழிகள்
3. விலங்குருவத் தாழிகள்
4. சவப் பெட்டிகள்

என்பவைகளாகும். இவற்றுள் பெரும்பாலும் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டவை கூர்முனைத் தாழிகளேயாகும்.

மணிமேகலையில் ஈம வகைகளைச் சுட்டும் சீத்தலைச் சாத்தனார்

'சுடுவோர் இடுவோர் தொடுகுழிப் படுப்போர்
தாழ்வயின் அடைப்போர் தாழியிற் கவிப்போர்'

என்று கூறுகிறார் (மணி. 6, 66-67).

சங்க இலக்கியங்களில்

கலம்
தாழி
கவிசெந்தாழி
ஈமத் தாழி
தாழிய பெருங்காடு
முதுமக்கள் தாழி
மன்னர் மறைத்த தாழி

என்ற தொடர்கள் காணப்படுகின்றன. (அகம். 129; புறம் 228, 236, 256, 364; பதி. 44)

இவை மிகப் பெரியவையாக இருந்ததையும் சங்க இலக்கியம் சுட்டுகிறது. சங்க இலக்கியத்துள்

மா இருந் தாழி (நற். 271)

ஓங்கு நிலைத்தாழி (அகம். 275)

கண்ணகன் தாழி (புறம். 228)

என்ற தொடர்களைக் காணுகிறோம்.

இவை கைகளாலும் (Hand Made) சக்கரங்களாலும் (Wheel Made) வனையப்பட்டிருக்கும்.

'சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் இறந்தான். பெரும்புகழ்கொண்ட இவனுக்குப் பெரிய தாழி அல்லவா வனைதல் வேண்டும். உலகையே சக்கரமாகக் கொண்டு இமய மலையையே மண்ணாக வைத்துப் பெரிய தாழி வனைதல் வேண்டும். அது உன்னால் முடியுமா?' என்று வேட்கோவரைப் பார்த்து வினவுகிறார் ஐயூர் முடவனார் என்னும் புலவர்.

'அன்னோன் கவிக்கும் கண்ணகன் தாழி
வனைதல் வேட்டனை யாயின் எனையதூஉம்
இருநிலம் திகிரியாப் பெருமலை
மண்ணா வனைதல் ஒல்லுமோ நினக்கே'

என்பது அப்பகுதியாகும் (புறம். 228).

மற்றொரு புலவர் கணவன், மனைவி இருவருக்கும் அமையும் வண்ணம் மிகப் பெரிதாகத் தாழி வனையுமாறு வேட்கோவைக் கேட்கின்றார்.

'சுரம்பல வந்த எமக்கும் அருளி
வியன்மலர் அகன்பொழில் ஈமத் தாழி
அகலி தாக வனைமோ'

என்பது அவர் கேட்கும் புறநானூற்றுப் பகுதி (புறம். 256).

தாழி வனைவோர்

'கலம் செய் கோ'

எனப்பட்டனர். இவர்கள் தொன்மைக் காலமாகவே இத் தொழிலில் ஈடுபட்டனர். ஒருவர் 'மூதூர்க் கலம் செய்கோ' எனப்படுகிறார்.

தமிழக அகழாய்வுகள் மூலம் பிணங்களை ஓரிடத்தில் திறந்த வெளியில் இட்டுவைத்துத் தசைகள் அழிந்த பின் எலும்புகளைத் தாழியில் இடுவர் என்பதும், பிணங்களை எரித்து எஞ்சிய சில எலும்புகளைத் தாழியில் இடுவர் என்பதும், சுட்ட சாம்பலில் ஒரு பகுதியைத் தாழியில் இடுவர் என்பதும் தெரியவந்துள்ளன.

ஆனால் மிகவும் வயோதிகர்களை இறுதிநாட்களில் உயிருடனே தாழியில் இருக்கச் செய்து உணவும் தண்ணீரும் வைப்பர் என்ற தவறான மரபுவழிச் செய்திகளும் நிலவுகின்றன.

பெருங்கற்படைக் காலக் கல்லறைகளின் உள்ளும், தனி இடங்களிலும் ஒன்றிரண்டாகவும் பல சேர்ந்தும் தாழிகள் புதைக்கப்பட்டன. ஆதிச்ச நல்லூர், மலைக் கோவிலூர், பெருமாள் பாளையம், பாடாலூர் திருப்பூர் போன்ற இடங்களில் நூற்றுக்கணக்கில் ஒரே இடத்தில் தாழிப் புதையல்கள் உள்ளன.

தாழிகளின் உள்ளும் புறமும் சிறுசிறு மட்கலங்களும், ஆயுதங்களும், பல வண்ணக் கல் மணிகளும், அவர்கள் பயன் படுத்திய பொருள்களும் படையலாக வைக்கப் பெற்றிருக்கும்.

பொதுமக்களால் முதுமக்கள் தாழி, மூத்தாந் தாழி, மதமதக்காத் தாழி, பாண்டியர் தாழி (பண்டையோர்?) எனப் பலவாறு அழைக்கப்படுகின்றன.

சங்ககாலத் தொடக்கத்தில் வாழ்ந்த பண்டைநாளைய சோழ மன்னர்கள் இவ்வழக்கத்தைப் புகுத்தினர் என்று சில பிற்கால இலக்கியங்கள் கூறுகின்றன.

'நாளும் - பதுமக் கடவுள் படைப்படையக் காத்த
முதுமக்கட் சாடி முதலோன்' (குலோ.உ 12)

'மாறழிந்து - ஓடி மறலி ஒளிப்ப முதுமக்கட்
சாடி வகுத்த தராபதி' (விக்கிரம. உ-7-8)

'திக்கனைத்தும் - தாங்கி முதுமக்கட் சாடி யமன்படைபின்
வாங்கி ஒளிப்ப வகுத்தோன்' (சங்கர உ.5-6)

'சித்தமகிழ்ந் தீனமறச் செங்கோல் நடாத்திநமன்
உத்தமன்என்று எந்நாளும் உயிர்கொடுபோ காமையினால்
மொய்த்தமுதி யோர்கட்கு முதுமக்கட் சாடிபல
வைத்தகுல தீரனே மன்னாகோ மன்னாகோ'

(திருவண்ணாமலைப் புராணம்)

இச்சோழ மன்னர்களை நாபாகன், சுரகுரு என உரையாசிரியர்கள் அழைப்பர். குலோத்துங்கன் பிள்ளைத்தமிழ் இதனை 'மட்சாடி' என்று அழைக்கிறது.

### சங்ககால ஊர்களில் அகழாய்வு

சங்க இலக்கியம் குறிப்பிடும் தொன்மையான சில ஊர்களில் தொல்லியல் அகழாய்வுகள் முறைப்படி நடை பெற்றுள்ளன. அவ் அகழாய்வுகள் மூலம் அவ்வூர்களின் பழம் பெருமை கண்டறியப்பட்டுள்ளது. அதன் மூலம் சங்க காலத்தில் அவ்வூர் இருந்துள்ளமை, மக்கள் வாழ்ந்தமை ஆகியன உறுதி செய்யப்பட்டுள்ளன.

### அகழாய்வு நடைபெற்ற ஊர்

| இப்போதைய பெயர் | சங்ககாலப் பெயர் |
|---|---|
| அரிக்கமேடு | வீரைமுன்துறை (அகம். 206) |
| அழகன்குளம் | மருங்கூர்ப்பட்டினம் (நற். 258) |
| உறையூர் | உறந்தை (புறம். 39) |
| கரூர் | கருவூர் வஞ்சி (புறம். 11) |
| காஞ்சிபுரம் | கச்சி (பெரும். 420) |
| காவிரிப்பூம்பட்டினம் | புகார் (பட். 173) |
| கொடுமணல் | கொடுமணம் (பதி. 74) |
| கொற்கை | கொற்கை (அகம். 27) |
| தருமபுரி | தகடூர் (பதி. 78) |
| திருக்கோவிலூர் | கோவல் (அகம். 35) |
| திருத்தங்கல் | தங்கால் (அகம். 48) |
| மதுரை | மதுரை (பரி. 11) |
| வல்லம் | வல்லம் (அகம். 336) |
| கொடுங்கலூர் | முசிறி (புறம். 343) |

இவ்அகழாய்வுகளை மைய அரசின் தொல்லியல் அளவீட்டுத் துறை, தமிழ்நாடு அரசு தொல் பொருள் ஆய்வுத் துறை, சென்னைப் பல்கலைக் கழகத் தொல்லியல் துறை, தமிழ்ப் பல்கலைக்கழகக் கல்வெட்டியல் துறை ஆகியன மேற் கொண்டன. அரிக்கமேட்டு ஆய்வில் ஒரு பகுதியை அமெரிக்க நாட்டுத் தொல்லியல் நிபுணர்களும் மேற்கொண்டனர்.

### நடுகல்

#### வீரர்கள் நினைவாக

போர்க்களத்தில் போரிட்டு வீர மரணம் எய்திய வீரர்களுக்கே பெரும்பாலும் நடுகல் நாட்டப்பட்டது. இதனை

'விழுத்தொடை மறவர் வில்லிட வீழ்ந்தோர்
எழுத்துடை நடுகல்' (ஐங்குறு 352)

'நல்லமர்க் கடந்த நாணுடை மறவர்
பெயரும் பீடும் எழுதி அதர்தொறும்
பீலி சூட்டிய பிறங்குநிலை நடுகல்' (அகம் 67)

'விடுவாய்ச் செங்கணைக் கொடுவில் ஆடவர்
நன்னிலை பொறித்த கல்' (அகம். 179)

'சிலையே றட்ட கணைவீழ் வம்பலர்
உயர்பதுக்கு இவர்ந்த அதர்கொடி அதிரல்
நெடுநிலை நடுகல்' (அகம். 289)

'கடுங்கண் மறவர் பகழி மாய்த்தென
மருங்குல் நுணுகிய பேஎமுதிர் நடுகல்' (அகம். 297)

'வில்லீண் டரும்சமம் ததைய நூறி
நல்லிசை நிறுத்த நாணுடை மறவர்
நிரைநிலை நடுகல்' (அகம். 387)

'முனைக்கு வரம்பாகிய வென்வேல் நெடுந்தகை
நடுகல்' (புறம். 314)

'ஒன்னாத் தெவ்வர் முன்னின்று விலங்கி
ஒளிறேந்து மருப்பில் களிறெறிந்து வீழ்ந்தெனக்
கல்' (புறம். 335)

'விழுத்தொடை மறவர் வில்லிடத் தொலைந்தோர்
எழுத்துடை நடுகல்' (அகம். 53)

'ஒன்னாத் தெல்வர் உலைவிடத்து ஆர்த்தென
நல்வழிக் கொடுத்த நாணுடை மறவர்
செல்லா நல்லிசைப் பெயரோடு நட்ட
கல்' (அகம். 390)

என்ற சங்க இலக்கியத் தொடர்கள் மூலம் அறியலாம்.

**கால்நடைப் போர்**

பசுக்களையும், பார்ப்பனர்களையும், பெண்களையும், நோயாளிகளையும், மக்கட்பேறு இல்லாதவர்களையும் போர் நடைபெறும் இடத்தைவிட்டு அகலுமாறு அறிவிப்பர். எல்லோரும் அகன்றபின் எஞ்சியிருக்கும் பசுக்கூட்டங்களையும், பிற கால்நடைகளையும் அப்புறப்படுத்த வெட்சிப் பூச்சூடி வீரர் புறப்படுவர். பகைவர் கால்நடைகளைக் கவர்வர். இவர்கள் வெட்சியார் எனப்படுவர்.

வெட்சியார் கவர்ந்த ஆநிரைகளையும், பிற கால்நடைகளையும் உரியவர்கள் கரந்தைப் பூச்சூடிப் போரிட்டு மீட்பர். இவர்கள் கரந்தையார் எனப்படுவர். இதுவே போர்த் தொடக்கமாகவும் அமையும். இவ்வெட்சி, கரந்தை வீரர்களுக்கு நடப்பட்ட நடுகற்களே தமிழ்நாட்டில் மிகுதியாகக் காணப்படு கின்றன. அதிலும் வெட்சியார் நடுகற்களைக் காட்டிலும் கரந்தையார் நடுகற்களே மிகுதியாகக் காணப்படுகின்றன.

சங்க இலக்கியங்களிலும் கால்நடைப் போருக்குரிய பல பாடல்கள் உள்ளன.

'முனைஆத் தந்து முரம்பின் வீழ்ந்த
வில்லோர் வாழ்க்கை விழுத்தொடை மறவர்
வல்லாண் பதுக்கைக் கடவுட் பேண்மார்
நடுகல்' (அகம். 35)

'நடைமெலிந் தொழிந்த சேட்படர் கன்றின்
கடைமணி உகுநீர் துடைத்த ஆடவர்
பெயரும் பீடும் எழுதி அதர்தொறும்
பீலீ சூட்டிய பிறங்குநிலை நடுகல்' (அகம். 131)

'ஏறுடை இனநிரை பெயரப் பெயராது
செறிசுரை வள்வேல் மழவர்த் தாங்கிய
தறுக ணாளர் நல்லிசை நிறுமார்
பிடிமடிந் தன்ன குறும்பொறை மருங்கின்
நட்ட போலும் நடாஅ நெடுங்கல்' (அகம். 269)

'பல்லா தழீஇய கல்லா வல்வில்
உழைக்குரல் கூகை அழைப்ப ஆட்டி
நாகுமுலை யன்ன நறும்பூங் கரந்தை
விரகறி யாளர் மரபில் சூட்ட
நிரைஇவண் தந்து நடுகல் ஆகிய
வெண்வேல் விடலை' (புறம். 261)

'பல்லாத் திரள்நிரை பெயர்தரப் பெயர்தந்து
கல்லா இளையர் நீங்க நீங்கான்
வில்லுமிழ் கடுங்கணை மூழ்கக்
கொல்புனற் சிறையின் விளங்கியோன் கல்' (புறம். 263)

'வைஎயிற்று உயர்ந்த மதியின் மறவர்
கையகத்து உய்ந்த கன்றுடைப் பல்லான்
நிரையொடு வந்த உரையன் ஆகி
உரிகளை அரவம் மானத் தானே
அரிதுசெல் உலகில் சென்றனன்' (புறம். 260)

## நடுகல் ஆய்வு

செய்யுள்களும், இலக்கியங்களும், இலக்கணங்களும், இதிகாச புராண ஆகமங்களும், தோத்திரங்களும், சாத்திரங்களும் உயர்ந்தோர் வழக்கு. வரலாற்றின் ஊற்றுக் கண்ணாக விளங்கும் பழங்குடி மக்களின் பண்பாட்டை அறிய நடுகற்களே மூல காரணமாக அமைந்துள்ளன. ஏனெனில் நடுகல் மக்கள் வழக்காகும்.

பண்டைய நடுகற்கள் பெரும்பாலும் மன்னர்களுக்கோ குறுநிலத் தலைவர்களுக்கோ எடுக்கப்படவில்லை. அவை மறவர், எயினர், மழவர், வேடர், கோவலர், வடுகர், கள்வர், பறையர், பாணர் ஆகிய குடிகளைச் சேர்ந்த சேவகன், இளமக்கள், தொறுவாளன், இளையோர், ஆள், இளமகன், அடியாள், அடியார், மன்றாடி, மனைமகன் ஆகியோருக்கே நாட்டப்பட்டுள்ளன.

## நடுகல்லே தெய்வம்

சங்க காலத்தில் நடுகல் வழிபாடு சிறப்புடன் மிகுதியாக விளங்கியது.

'கல்லே பரவின் அல்லது
நெல்லுகுத்துப் பரவும் கடவுளும் இலவே' *(புறம். 335)*

என்று பாடுகிறார் ஒரு சங்கப் புலவர்.

## உருவமும் எழுத்தும்

முதலில் நடுகல்லாக நெடுநிலை நடுகல் எனப்படும், நீண்டு உயர்ந்த கல் நடப்பட்டது. அதன் பின்னர்ச் சிறு அளவில் நடுகற்கள் நடப்பட்டன.

அக்கற்களில் முதலில் உருவமோ, பெயரோ, பெருமையோ குறிக்கப்படாமல் அவை வெறும் கற்களாக மட்டுமே இருந்தன. பின்னர் உருவமும், பெயரும், பெருமையும் ஓவியமாக எழுதப்பட்டன. பின்னர்க் காலம் செல்லச் செல்ல உருவம் செதுக்கப்பட்டது. பீடும், பெயரும் உளியால் எழுத்துக் களாகச் செதுக்கப்பட்டன. இதனை

'நட்ட போலும் நடா நெடுங்கல்' *(அகம். 269)*

'பெயரும் பீடும் எழுதி அதர்தொறும்
பீலி சூட்டிய பிறங்குநிலை நடுகல்' *(அகம். 67)*

'மரம்கோள் உமண்மகன் பேரும் பருதிப்
புன்தலை சிதைந்த வன்தலை நடுகல்
கூர்உளி குயின்ற கோடுமாய் எழுத்து' *(அகம். 343)*

'கடுங்கண் மறவர் பகழி மாய்த்தென
மருங்குல் நுணுகிய பேஎமுதிர் நடுகல்
பெயர்பயம் படரத் தோன்றுகுயில் எழுத்து' (அகம். 297)

எனச் சங்க இலக்கியம் குறிக்கிறது. உப்பு வண்டியின் சக்கரங்களாலும், நடுக்கல்லில் அம்புகளைத் தேய்ப்போர் முயற்சியாலும் நடுகல் எழுத்துக்களின் கூர்மையான முனைகள் அழிந்தன என்பதால் நடுகற்களின் தொன்மை புலப்படுகிறது. அக்காலத்திலேயே வழிப்போக்கர்கள் தாம் வழிகளில் காணும் நடுகல் எழுத்துக்களைப் படிக்க முற்பட்டனர் என்ற விபரமும் இதன்மூலம் தெரிகிறது.

தமிழ்நாட்டில் எழுத்துடனும், எழுத்துக்கள் இன்றியும் ஆயிரக்கணக்கான நடுகற்கள் கிடைத்துள்ளன. அவை சங்க இலக்கியங்களுடன் தொடர்புபடுத்தி ஆய்வு செய்தற்கு உரியவை,

**மணிகளும் பாசிகளும்**

தொல்லியல் ஆய்வு நடைபெற்ற தமிழக ஊர்களில் மிகவும் அதிகமாகக் கிடைப்பன பண்டைய மணிகளும் பாசிகளுமாகும். சுடுமண், எலும்பு, தந்தம், இரும்பு, பிற உலோகங்களில் சில மணிகளும், பாசிகளும் கிடைப்பினும் பெரும்பாலும் கிடைப்பவை பல்வேறு வண்ணக் கற்களினால் ஆன மணிகளே.

இவை மிக உயர்ந்த வேலைப்பாடு உடையவை. பதிற்றுப்பத்து இவை 'வினைமாண் அருங்கலம்' (74) என்று கூறும். தமிழகத் தொல்லியல் ஆய்வில் மிகமிக அதிகமாகக் கிடைக்கும் ஒருவகை மணி சூதுபவளம் என்னும் 'கார் நீலியன்' கல்லினால் செய்யப்பட்டவையாகும். இவ்வகைக் கற்கள் குஜராத்திலும், இமயமலைச் சாரலிலும் மட்டுமே கிடைக்கின்றன. பட்டினப்பாலையில் (187). 'வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்' புகார் வந்ததாகக் கூறுவது இதனை மெய்ப்பிக்கிறது. இன்னும் ஆப்கானிஸ்தானில் கிடைக்கும் லேபிஸ் லசுலி என்னும் கல் மணிகளும், இலங்கையில் கிடைக்கும் பூனைக்கண் மணியும் தமிழக அகழாய்வில் கிடைப்பது அந்நாடுகளுடன் தமிழகம் கொண்டிருந்த தொடர்பை உறுதிப் படுத்துகிறது.

பொன்னோடு மணிகளைச் சேர்த்து அணிவதைச் சங்க இலக்கியம் காட்டுகிறது. இலக்கியத்துள்

'இலங்கு மணி மிடைந்த பொலங்கலம்' (பதி : 14)

'இலங்கு மணி மிடைந்த பசும்பொன்' (பதி : 34)

போன்ற தொடர்களைக் காணுகிறோம். மணிகள் மலையிலும், நிலத்திலும், நீரிலும் கிடைத்தன (மதுரை 504), மணியோடு பவளமும் சேர்த்து அணியப்பட்டன என்பதை

'மணியொடு மிடைந்த அணிகிளர் பவளம்' (அகம். 167) என்ற தொடர் மூலம் அறிகிறோம்.

மணியோடு முத்துக்களும் கோர்த்து அணியப்பட்டன என்பது 'மணியொடு முத்து யாத்த நேர் அணி' (பரி. 17) என்ற தொடரால் அறியப்படுகிறது.

மணிகளைக் குடைந்து உருவாக்குவது பற்றிய சில குறிப்புகளும் கிடைக்கின்றன.

'கோடு போழ் கடைநரும்
திருமணி குயிநரும்' (மதுரை. 511)

என்பது இலக்கியத் தொடர். கூட்டமாக இவர்கள் இருந்துள்ளனர்.

கொங்கு நாட்டுப் பகுதியில் காங்கயம் பகுதியில் கால்நடை மேய்க்கும் பொழுதும், கலப்பையால் நிலத்தை உழும் பொழுதும், மழை பெய்யும் பொழுதும், கிழங்குகளைத் தோண்டி எடுக்கும் போதும் மணிகள் கிடைப்பதாகச் சங்க இலக்கியத்தின் வழி அறிகின்றோம்.

'முல்லைக் கண்ணிப் பல்லான் கோவலர்
புல்லுடை வியன்புலம் பல்ஆ பரப்பிக்
கல்லுயர் கடத்திடைக் கதிர்மணி பெறூஉம்' (பதி : 21)

'நாஞ்சில் ஆடிய கொழுவழி மருங்கின்
அலங்கு கதிர்த் திருமணி பெறூ உம்
அகன்கண் வைப்பின் நாடுகிழவோனே' (பதி : 58)

'கால்கொண்டு
கருவி வானம் தண்டுளி சொரிந்தெனப்
பல்விதை உழவின் சில்ஏ ராளர்
..................
இலங்கு கதிர்த் திருமணி பெறூஉம்
அகன்கண் வைப்பின் நாடுகிழ வோனே' (பதி : 76)

'குன்றத்துப்
பழங்குழி அகழ்ந்த கானவன் கிழங்கினொடு
கண்அகன் தூமணி பெறூஉம் நாடன்' (குறு. 379)

என்பன அதைக் குறிக்கும் இலக்கியத் தொடர்களாகும்.

மணிகளில் பாத்திரங்களும் செய்யப்பட்டன என்பது 'மணி செய் மண்டை' (அகம் 105) என்ற தொடர் மூலம் பெறப்படுகிறது. மணிகள் உருவாக்கப் பெறாத கற்களை 'வயக்கு உறாமணி' (கலி. 132) என்றும், மண்ணிலிருந்து எடுத்த மணிகளை 'மண்ணாமணி' (கலி. 41) என்றும், செய்யப்பட்ட மணிகளை 'வடிமணி' (கலி. 96) என்றும் கூறியுள்ளனர். மணிகள் சுடர்விட்டுப் பிரகாசமாக இருக்கும் என்பது 'மின் அவிர் சுடர்மணி' (பரி. 13) என்ற தொடர் மூலம் பெறப்படுகிறது.

### சங்குப் பொருட்கள்

தமிழக அகழாய்வுகளில் சங்கினால் செய்யப்பட்ட ஏராளமான அணிகலன்கள் கிடைத்துள்ளன. அவை பலவிதமான கோடுகளினாலும், கட்டங்களினாலும் அழகுபடுத்தப்பட்டுள்ளன.

கிழக்கு மேற்குக் கடற்கரை நகரங்களில் மட்டும் அல்ல; உள்நாட்டு அகழாய்விடங்களிலும் சங்கு அணிகலன்கள் ஏராளமாகக் கிடைக்கின்றன.

சங்க இலக்கியங்களில் சங்குகளை அறுப்பது, குடைவது, அணிகலன்கள் செய்வது பற்றிய பல குறிப்புக்கள் வந்துள்ளன.

கொற்கையில் சங்குத் தொழில் செய்வோர் குடியிருப்பே இருந்தது என்பதை

'சீருடை விழுச்சிறப்பின்
விளைந்த முதிர்ந்த விழுமுத்தின்
இலங்குவளை இருஞ்சேரிக்
கட்கொண்டிக் குடிப்பாக்கத்து
நற்கொற்கை' (மதுரை 134-138)

என்பதனால் அறியலாம்.

அறுக்கப்பட்ட சங்கின் எச்சங்கள் கண்கள் போன்று காட்சியளிக்கின்றன என்பதை

'அரம் போழ்ந்து அறுத்த
கண் நேர் இலங்கு வளை' (மதுரை 316)

என்ற தொடரால் அறியலாம்.

'கோடீர் இலங்கு வளை' (குறு. 11)
'கோடீர் எல்வளை' (ஐங்குறு)
'சில் நிரை வால்வளை' (குறு. 189)
'இறைவளை' (குறு. 289)

'செறி வளை' (குறு. 190)

'ஆய் வளை' (குறு. 316)

சங்கினால் செய்யப்பட்ட காரணத்தால்தான் கைகளில் அணியப் பெறும் அணி 'வளை' எனப்பட்டது.

**சுடுமண் பொருள்களும் மட்பாண்டங்களும்**

சங்க காலத்திற்கு இணையான பெருங்கற்காலப் பண்பாட்டுக் காலத்தில் சுடுமண்கலை மிகச் சிறப்புடன் விளங்கியது. வீட்டு அழகுப் பொருள்களும், பாசிகளும், அணிகலன்களும், விளையாட்டுப் பொருள்களும், பொம்மைகளும், முத்திரை களும், அளவுக் கருவிகளும், கூரை ஓடுகளும் செய்யப்பட்டன.

பெரிய தாழிகள் இல்லாமல் சிறு மட்பாண்டங்கள் பல தொல்லியல் அகழாய்வில் கிடைத்துள்ளன. உடைந்த மட்பாண்ட ஓடுகளுடன் முழுப் பாத்திரங்களாகவும் பல கிடைத்துள்ளன. அன்றாடம் புழங்குவதுடன், ஈமச் சடங்கு போன்றவைகட்கும் அவை பயன்படுத்தப்பட்டன.

தொல்லியல் ஆய்வாளர்கள் அவ்வாறு கிடைத்தவற்றுக்கு அகல், உருளி, கலயம், கிண்ணம், குடம், குடுவை, குண்டா, குண்டு போகினி, குண்டுமொந்தை, கூசா, சட்டி, சருவசட்டி, சிதை குண்டா, சின்ன கலயம், சின்ன குண்டு போகினி, சொப்பு, சொம்பு, சொரக்காய் லோட்டா, தட்டு, தவளை, தாளம், தோண்டி, பாளி, பானை, மடக்கு, மரக்கால், மறவை, மூக்குக் கிண்ணம், மூசை, மூடி, மைக் கிண்ணம், வடிகட்டி, வானலி, விளக்கு என்று பல்வேறு பெயரிட்டு அழைக்கின்றனர்.

இவை சங்க இலக்கியத்துள் 'சிறு கலம்' என்று பொதுவாக அழைக்கப்படுகின்றன (புறம். 232)

இம்மட்பாண்டங்கள் செய்முறையின் மூலம் பல்வேறு வகைகளாகக் குறிக்கப்பெறுகின்றன. அவை

கறுப்பு - சிவப்பு வகை

கறுப்பு வகை

சிவப்பு வகை

ரசட் கலவையும் வண்ணப் பூச்சும் கொண்டவை

பழுப்பு நிறவகை எனப் பல்வேறு வகைப்படும்.

மின்னும் சிவப்புச் சாயம் பூசப்பட்டவை ரசட் கலவைப்பூச்சு எனப்பெறும். இம்மட்பாண்டங்களில் பல்வேறு வரைகோடுகள் எழுதப்பட்டிருக்கும்.

இரும்பு

பெருங்கற்படைப் பண்பாட்டுக் காலத்தில் மக்கள் இரும்பைத் தாராளமாகப் பயன்படுத்தியுள்ளனர். அகழாய்வு களில் இரும்பால் உருவாக்கப்பட்ட வீட்டுப் பயன்படு பொருட்கள், வேளாண்மைக் கருவிகள், வேட்டைக் கருவிகள், போர்க்கருவிகள் ஆகியவை கிடைத்துள்ளன.

கல் மணிகளுக்குத் துளையிடும் நுட்பமான - மிகவும் கூர்மையான இரும்புக் கருவிகள் இருந்துள்ளன. பல தொல்லியல் அகழாய்விடங்களில் இரும்பு உருக்கியபின் எறியப் பட்ட மண் கட்டிகள், இரும்புக் கசடுகள் பல கிடைத்துள்ளன.

அம்பு முனைகள், ஈட்டி, வேல், வாள், குறுவாள், மண்வெட்டி, கொத்து, கோடரி, கடப்பாரை, அரிவாள், சுத்தி, உளி, வாய்ச்சி, ஆணி, தூண்டில், தகடு, கொக்கி போன்ற பல இரும்புப் பொருட்கள் கிடைத்துள்ளன.

இவ் இரும்புக் கருவிகள் பற்றிய குறிப்புகள் பல சங்க இலக்கியத்துள் கிடைக்கின்றன. சங்க இலக்கியங்களில் வேல், வாள், ஈட்டி, கேடயம், வில், அம்பு போன்ற ஆயுதங்கள் குறிக்கப் பெறுகின்றன. இரும்பு செய்தல், இரும்பு வடித்தல், கொல்லன் உலைக்களம், வேல் வடித்தல் போன்ற பல்வேறு செய்முறைகளும் சங்க இலக்கியங்களில் கூறப்பட்டுள்ளன. சங்க காலத்தில் இரும்பின் பயன்பாடு மிகவும் அதிகமாக இருந்தது.

'இரும்புசெய் கொல்லன்' (நற். 133)

'இரும்பு வடித்தன்ன' (பெரும். 222)

'இரும்பு திரித்தன்ன மாஇரும் மருப்பு' (அகம். 4)

'இரும்பு புனைந்து இயற்றாப்
பெரும்பெயர்த் தோட்டி' (புறம். 150)

'இரும்பு தலையாத்த
திருந்து கணை விழுக்கோல்' (பெரும். 91)

'இரும்பு செய் விளக்கு' (பெரும். 42)
'எஃகுடை இரும்பு' (பதி. 74)

'கருங்கைக் கொல்லன் செந்தீ மாட்டிய
இரும்பு உண் நீரினும்' (புறம். 21)

'இரும்பு பயன்படுக்கும் கருங்கைக் கொல்லன்
விசைத்து எறி கூடமொடு பொரூஉம்
உலைக்கல்' (புறம். 170)

போன்ற பல குறிப்புக்கள் சங்க இலக்கியத்துள் காணப் படுகின்றன.

### குதிரை

தமிழகத் தொல்லியல் அகழாய்வில் குதிரை லாடம், குதிரைக் கடிவாளம், குதிரையேற்றத்திற்குப் பயன்படும் அங்கவடி என்னும் கால்மிதி ஆகியவை கிடைத்துள்ளன. எனவே பெருங்கற்படைக் கால மக்கள் குதிரைகளைப் பழக்கிப் பயன்படுத்தியுள்ளனர் என்பது பெறப்படுகிறது.

குதிரைகள் கடல் கடந்த வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டதாகப் பட்டினப்பாலை கூறுகிறது. 'நீரின் வந்த நிமிர் பரிப் புரவி' என்ற தொடரை (185) அங்குக் காணுகிறோம். அவைகளில் உயர் ரக வெண்மையான குதிரைகளும் இருந்தன. பெரும்பாணாற்றுப்படையில் (488)' வளை கண்டன்ன வாலுளைப் புரவி' என்று கூறப்படுகிறது. நான்கு குதிரைகள் பூட்டப்பட்ட தேர் பற்றிய குறிப்பு அகநானூற்றில் வருகிறது.

குதிரை பற்றிய பல குறிப்புக்கள் சங்க இலக்கியங்களில் பல இடங்களில் காணப்படுகின்றன (குறு. 385; கலி. 96; அகம் 1; புறம் 158).

### தொல்லெழுத்தியல்

அகழாய்வில் கிடைக்கும் மட்பாண்டங்களிலும், பானை ஓடுகளிலும் பலவற்றில் குறியீடுகளைப் போலவே பழந்தமிழ் எழுத்துக்கள் சொல்லாகவும், சிறு சொற்றொடர் வடிவிலும் கீறப்பட்டுள்ளவைகளைக் காணலாம். இவை பெரும்பாலும் மலைக் குகைகளிலும், சிறுபான்மை பாறைகளிலும், மலைச் சாரல்களிலும் பொறிக்கப் பெற்றுள்ள பழந்தமிழ் எழுத்துக் களையே ஒத்துக் காணப்படுகின்றன.

இவற்றைப் பொதுவாகப் பிராமி எழுத்து (மொழி தமிழ்) என்று அழைப்பர். ஆனால் இந்தியத் தொல்லியல் அளவீட்டுத் துறையின் கல்வெட்டுப் பிரிவினர் ஆந்திர மாநிலப் பட்டிப்ரோலி விற்கு வடக்கே கிடைக்கும் இவ்வெழுத்துக்களை வடபிராமி என்றும், தெற்கே கிடைக்கும் இவ்வெழுத்துக்களைத் தென்பிராமி என்றும் அழைத்தனர். அதிலிருந்து இரண்டுக்கும் உள்ள வேறுபாட்டினை அறியலாம்.

தமிழ்நாட்டில் பெரும்பாலும் வர்க்க எழுத்துக்கள் இல்லாமல், மெய்கள் (சிலவற்றிற்குப்) புள்ளியிட்டும், தொல் காப்பிய விதிகட்கு உட்பட்ட அமைப்பில் எழுத்துக்கள் பொறிக்கப்

பட்டும், ற, ன, ழ, எ, ஒ போன்ற தமிழுக்கேயுரிய சிறப்பெழுத்துக்கள் உயிர், மெய், உயிர்மெய்களில் காணப் பெற்றும் காணப்படுகின்றன. இவை பிராமி என்ற பெயருக்கு மாறாகத் தமிழி, திராவிடி என்ற பெயர்களையும் பெற்றிருந்தன. எனவே இவை தமிழ்நாட்டுக்குரிய தனி எழுத்து வகையைச் சார்ந்தவை என்பது புலப்படும்.

வடமாநில அகழாய்வுகளில் பானை ஓடுகள் தமிழ்நாடு போல மிகுதியாகக் கிடைப்பதில்லை. கிடைக்கும் பானை ஓடு களிலும் எழுத்துப் பொறிப்புக்கள் மிகுதியாக இருப்பதில்லை. ஆனால் தமிழ்நாட்டில் பெருநகரங்களிலிருந்து விலகி நெடுந் தொலைவில் உள்ள சிற்றூர்களில் நடைபெற்ற அகழ்வாராய்ச்சி களில் கூட மிகுதியான பழந்தமிழ் எழுத்துக்கள் பொறிக்கப் பெற்ற பானை ஓடுகளைக் காணுகின்றோம். எனவே இந்தியத் தொல்லியல் அறிஞர்களிடம் பிராமி=தமிழி=பழந்தமிழே! தமிழ்நாடே பிராமி வரிவடிவம் தோன்றிய இடமாக இருக்கலாம் என்ற கருத்து உருவாகியுள்ளது.

புகளூர் - ஆறுநாட்டார் மலையில் பதிற்றுப்பத்து 7, 8, 9 ஆம் பத்துக்களுக்குரிய அரசர் பெயர் வரிசையாகப் பொறிக்கப் பட்டுள்ளது. மாங்குளத்தில் நெடுஞ்செழியன் பெயரும், பணவன், கடலன், வழுதி போன்ற பாண்டியர் குலப் பெயரும் பொறிக்கப்பட்டுள்ளன. ஜம்பையில் 'அதியந் நெடுமாந் அஞ்சி' பெயர் பொறிக்கப்பட்டுள்ளது.

சங்ககாலத் தலைவர்களான பிட்டன், பண்ணன், ஓரி, நள்ளி, ஆய், கீரன் போன்றோர் பெயர்களையும், அகல், ஆதன், அந்தை, கண்ணன், வேள், அந்துவன், கிழார், சாத்தன், சாத்தந்தை, கொற்றன், கொற்றி, நாகன், வண்ணக்கண் போன்ற சங்க இலக்கியங்களில் மட்டுமே பயின்று வரக்கூடிய பல சொற்களையும் பானையோட்டுப் பொறிப்புக்களிலும், தமிழிக் (பிராமிக்) கல்வெட்டுக்களிலும் காணுகின்றோம்.

**யவனர் தொடர்பு**

சங்க காலத்தில் தமிழ்நாட்டோடு யவனர் தொடர்பு இருந்தது. கிரேக்கர், ரோமானியர், எகிப்தியர், பாரசீகர், அராபியர் ஆகிய அனைவரையும் யவனர் என்று பொதுப் பெயரால் பழந்தமிழர் அழைத்தனர். அயோனியன் என்ற சொல்லே யவனர் என ஆயிற்று என்பர்.

அவர்களுள் ரோம் நாட்டார் வீரத்தால் தலைமை எய்தினர். ஜூலியஸ் சீசர் காலத்தில் அலெக்சாண்டிரியா ரோம் நாட்டவர்

வசமானது. அகஸ்டஸ் காலத்தில் எகிப்து முழுவதும் ரோமானியர் கைவசமானது.

தென்னிந்திய வாணிகத்தைக் கிரேக்கர் மூலம் செய்த ரோமானியர் தாங்களாகவே அவ் வணிகத்தை மேற்கொள்ள லாயினர். செங்கடல் வழியாகத் தென் இந்திய-ரோம் வாணிகம் நடைபெற்றது.

மேற்குக் கடற்கரைக்கு மிளகு, சந்தனம், தந்தம், ஏலக்காய், அகில், தேக்கு, இலவங்கம், சில விலங்குகள், பறவைகள் ஆகிய வற்றிற்காக வந்த ரோமானியர் பாலக்காடு, போளுவாம்பட்டிக் கணவாய் வழியாகக் கொங்கு நாட்டுக்கு வருகைபுரிந்து பல வண்ண மணிக்கற்களைப் பெற்றுச் சென்றனர். நொய்யல் நதிக்கரை வழியாகக் காவிரியை அடைந்து சோழ நாட்டுக்கும், பாண்டிய நாட்டுத் துறைமுகங்களுக்கும் சென்றனர். தூத்துக்குடி வரை சென்று முத்துக்களைக் கொள்முதல் செய்தனர். இவற்றுள் மிளகு யவனர்கட்கு (ரோமர்கட்கு) மிகவும் பிடித்தமான பொருள். மிளகை 'யவனப் பிரியா' என்றனர்.

அவர்கள் விட்டுச்சென்ற எச்சங்கள் தமிழ்நாட்டின் பல பகுதிகளில் கிடைக்கின்றன. ரோமானிய மணிகளும், ரோமானிய உயர்வகைப் பானை ஓடுகளான ரௌலாடம், அரிட்டைன் வகை ஓடுகளும், அம்போரா என்னும் மதுக் குடங்களும், ரோமானிய சுடுமண் பொம்மைகளும், பல ரோம் அரசர்களின் தங்க, வெள்ளி, செம்பூக் காசுகளும் தமிழ்நாட்டின் பல இடங்களில் கிடைத்துள்ளன.

அழகன் குளம், அரிக்கமேடு, ஆனைமலை, காஞ்சிபுரம், கரூர், காரைக்காடு, வசவசமுத்திரம், பொள்ளாச்சி, கொற்கை, வெள்ளையனிருப்பு, கொடுமணல் என அவ்வூர்கள் பலவாகும்.

தோகை (துகி), அகில் (அகிலம்), அரிசி (அரிஜா, அரி), இஞ்சி (ஜிஞ்சர்), இஞ்சி வேர் (ஜிஞ்சிபார்) முதலிய தமிழ்ச் சொற்கள் யவனர் மொழியுட் புகுந்தன.

யவனர் கப்பல்கள் பொன்னோடு முசிறிக்கு வந்து பொன்னைக் கொடுத்துவிட்டுக் கப்பலில் மிளகை ஏற்றிச் செல்வர் என்று சங்க இலக்கியம் கூறுகிறது.

'சேரலர்
சுள்ளியம் பேரியாற்று வெண்ணுரை கலங்க
யவனர் தந்த வினைமாண் நன்கலம்

பொன்னோடு வந்து கறியொடு பெயரும்
வளம்கெழும் முசிறி'

என்று அகநானூறு (149) கூறுகிறது.

இன்னும் யவனர் பற்றிய பல்வேறு குறிப்புக்கள் சங்க இலக்கியத்துள் குறிக்கப்பட்டுள்ளன. அவை

'யவனர் இயற்றிய வினைமாண் பாவை' (நெடு. 101)

'நயனில் வன்சொல் யவனர்ப் பிணித்து
நெய்தலைப் பெய்து கையிற் கொளீஇ' (பதி. பதிகம் 2)

'வலிபுணர் யாக்கை வண்கண் யவனர்
புலித்தொடர் விட்ட புனைமாண் நல்இல்' (முல். 61-2)

'யவனர் நன்கலம் தந்த தண்கமழ் தேறல்
பொன்செய் புனைகலத்து ஏந்தி நாளும்
ஒண்தொடி மகளிர் மடுப்ப மகிழ்சிறந்து
ஆங்கு இனிது ஒழுகுமதி' (புறம். 56)

என்பனவாகும்.

யவனச்சேரி, யவன வீரர், யவனத் தச்சர் போன்ற குறிப்புக் களையும் காணுகிறோம். தமிழ்நாட்டில் நடைபெற்ற அகழ் வாராய்ச்சிகள் மூலம் அவை அனைத்தும் ரோமானியர் தொடர்புடையவை என அறியப்படுகின்றன.

**கருவூர்ப் புதையல்**

மேலைக் கடற்கரை நகரான வஞ்சி-கருவூர் எனப்பட்டது. அது சங்கச் சேரர் கோநகரம். சேரர்கள் கொங்கு நாட்டை வென்று கைப்பற்றினர். சேரர்கள் கொங்கு நாட்டிலும் ஒரு வஞ்சியை ஏற்படுத்தி அதற்கும் கருவூர் என்று பெயரிட்டனர்.

கரூரில் ஆட்சிபுரிந்தது சேரரில் இரும்பொறை மரபு. அவருள் ஒரு சேர மன்னன் கருவூர் ஏறிய ஒள்வாள் கோப்பெருஞ்சேரல் எனப்பட்டான். கருவூர் காவிரியின் தலை ஆறாகிய அமராவதிக் கரையில் உள்ளது. அதற்குச் சங்க இலக்கியப் பெயர் 'தண் ஆண்பொருநை' என்பது.

அமராவதி ஆற்றங்கரையில் அண்மைக் காலத்தில் தனியாரால் மிகமிக அரிய தொல்பொருட்கள் பல தோண்டி எடுக்கப்பட்டன. அவற்றுள் முத்திரைகளிலும், மோதிரங் களிலும், காசுகளிலும் பல எழுத்துப் பொறிப்புக்கள் காணப் படுகின்றன. அவை

குறவன் (முத்திரை)

தித்தின் (மோதிரம்)

தாயன் ஓதவன் (மோதிரம்)

சாத்தன் (மோதிரம்)

வேடுவன் (மோதிரம்)

குட்டுவன் கோதை (காசு)

கொல்லிப்பொறை (காசு)

கொல்லிரும்பொறை (காசு)

மாக்கோதை (காசு)

மாக்கோக் கோதை (காசு)

பெழுவழுதி (காசு)

என்பனவாம்.

இப்பெயர்களை நாம் சங்க இலக்கியங்களில் பல இடங்களில் காணுகிறோம். குறவர் பெருமான் (புறம். 157) குறமகன் (மலை. 183) குறவன் (நற் 201) என்றும், தித்தன் (நற். 58, அகம் 122, புறம் 80) என்றும், தாயங்கண்ணன் (குறு. 319) என்றும், கருவூர்க் கதப்பிள்ளை சாத்தன் (நற். 343) உறையூர்க் கதுவாய்ச் சாத்தன் (நற். 370) என்றும், வேட்டுவன் (அகம். 36, புறம் 214) என்றும், சேரமான் குட்டுவன் கோதை (புறம். 54) என்றும், பொறையன் (குறு. 89) மாந்தரஞ்சேரல் இரும்பொறை (புறம். 53) என்றும், சேரமான் கோதை மார்பன் (புறம். 48) பெருவழுதி (நற். 55) என்றும் சங்க இலக்கியங்களில் காணுகிறோம்.

### தமிழரின் கடற்செலவு

எகிப்தில் நடைபெற்ற அகழாய்வில் கண்ணன், சாத்தன் என்று தமிழில் படிக்கக் கூடிய சொற்கள் கிடைத்திருக்கின்றன. தாய்லாந்து நாட்டில் சங்க காலத் தமிழ் எழுத்தில் 'பெரும்பதன் கல்' என்று எழுதப்பட்ட உரைகல் கிடைத்துள்ளது. அதனைப் பெரும் பத்தன் என்று படித்துப் பொன்வேலை செய்வோன் என்று கருதுகின்றனர்.

தாய்லாந்தில் சங்ககாலச் சோழரின் புலிச் சின்னம் பொறிக்கப்பட்ட காசு கிடைத்துள்ளது. அண்மையில் கான்ஸ்டாண்டிநோபில் நகரத்தில் முசிறி வணிகர்கட்கும் மேனாட்டு வணிகர்கட்கும் எழுதப்பட்ட ஒப்பந்தங்கள் பற்றிய கிரேக்க மொழி ஆவணங்கள் கிடைத்துள்ளன.

இவற்றால் பண்டைய சங்க காலத் தமிழரின் கடற்செலவு பற்றிய செய்திகளை அறிகின்றோம். சங்க இலக்கியத்துள் பழந்தமிழரின் கடற்செலவு பற்றிய பல குறிப்புக்களைக் காணுகிறோம்.

'நளியிரு முந்நீர் நாவாய் ஓட்டி
வளிதொழில் ஆண்ட உரவோன் மருக' (புறம். 66)

'முந்நீர் வழங்கு நாவாய்' (புறம். 13)

'சினம்மிகு தானை வானவன் குடகடல்
பொலம்தரு நாவாய் ஓட்டிய அவ்வழி
பிறகலம் செல்கலாது' (புறம். 126)

'ஏமுறு நாவாய் வரவு எதிர்கொள்வார்' (பரி. 10)

'வேறுபல் நாட்டுக் கால்தர வந்த
பலவினை நாவாய் தோன்றும் பெருந்துறை' (நற். 295)

'தீம் புகார்த் திரைமுன்துறை
தூங்கு நாவாய்' (பட். 124)

என்பன தமிழர் கடல்செலவைக் காட்டும் தொடர்களாகும்.

# சங்கச் சமூகத்தில் பெண்டிர் நிலை

**ச. சிவகாமி**
உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை - 600 113

ஒளி-இருள், பகல்-இரவு, மலை-மடு, ஆக்கம்-அழிவு, தோற்றம்-மறைவு என்பன போன்ற இருமைகள் உலகை இயக்கு கின்றன. உலகின் உயிரோட்டம் உயிரினங்களின் ஆண்-பெண் எனும் இருமையால் இயல்கின்றது. ஒரு முழுமையின் சமக் கூறாக இவ்விருமைகள் அமைகின்றனவே அன்றித் தம்முள் உயர்வுதாழ்வு கற்பிப்பனவல்ல என்பது இயற்கை நியதி. ஆனால், இன்றைய உலகு ஆணாதிக்கச் சமுதாயமாக, ஆண் பெண்ணை விட மேலானவன் என்ற கருத்தில் செயல்படுவதாகப் 'பெண்ணிய ஆய்வாளர்' கருதுவர்[1]. இதன் வன்மையும் மென்மையும் தனித்த ஆய்விற்குரியன. இங்கே, இற்றைக்கு ஈராயிரம் ஆண்டுகட்கு முன் வாழ்ந்த சங்கத் தமிழ்ப்பெண்டிரின் நிலை என்ன என்பதை அறிய முயல்கிறது இக்கட்டுரை.

சங்க இலக்கிய ஆய்வாளர் சிலரும்[2] சிறிய அளவில் சங்கப் பெண்டிரின் நிலையை உணர்த்தியுள்ளனர். முழுநிலையில் 'சங்க கால மகளிர்' என்ற ஆய்வு நூல் முதலில் ஆங்கிலத்திலும் பின்பு தமிழிலும் வெளிவந்துள்ளது[3]. இவற்றினின்றும் மாறுபட்ட நோக்கிலும் போக்கிலுமானதோர் மீள்பார்வையாக இவ்வாய்வு அமைகிறது.

சங்கச் சமூகம் பெண்மைக்கு அளிக்கும் விளக்கம்; பெண்டிரின் பொறுப்பாக, கடமையாகக் காட்டுவன; பெண்டிரின் செயற் பாடுகள்; பெண்டிர் பெற்ற மதிப்புகள்; பெண்டிர் மதிப்புக் குறைத்தல்; சில தனிக் கூறுகள்; பெண்டிர் ஆடவர் இடையே காணும் வேறுபாடுகள் ஆகியன இதனுள் நோக்கப்பட்டு அன்றைய பெண்டிரின் நிலை அறுதியிடப்படுகிறது.

''சமூகம் என்பது ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதியில் நீண்ட காலமாக ஒன்று சேர்ந்து வாழ்வதற்காக மக்கட்கூட்டம் ஏற்படுத்திக் கொள்ளும் அமைப்பாகும். தம் தேவைகளைப் பெறுவதற்காக மக்கள் தங்கள் உறவுகள் இவை என்று முடிவு செய்து அவை

நடைபெற வேண்டிய வழிகளைப் பற்றிய விதிகளை வகுத்துக் கொள்கின்றனர். அவை பொருளாதார அமைப்பு, கல்வி, கலை, சமயம், பொழுதுபோக்கு, சட்டம், சமயச் சடங்குகள், பழக்க வழக்கங்கள் போன்றவற்றில் அமைந்து சமூகத்திற்கு நிலை பேற்றை அளிக்கின்றன'' என்ற கருத்தினை[4] உட்கொண்ட நிலையில் சங்கச் சமூகம் இங்கு அணுகப்பட்டுள்ளது.

**பெண்மை - விளக்கம்**

சங்கப் பாக்கள் பெண்ணின் இயல்புகள் எவை? அவள் எப்படி இயங்க வேண்டும் என்பன பற்றிச் சில கருத்துரைக் கின்றன. அவற்றை அக்காலத்திற்குரிய பெண்மையின் விளக்க மாகக் கொள்ளலாம்.

அன்பும் மடனும் சாயலும் இயல்பும்
என்பும் நெகிழ்க்கும் கிளவியும் பிறவும்
ஒன்றுபடு கொள்கை *(அகம் 225 : 1-4)*

உடையவளாயிருத்தல் பெண்ணின் இயல்பாகிறது. பெண்மை சான்று, பெருமடம் நிலைபெற இறைக்கற்பு கொள்ளுதல் (பதி *70; 14-15)* இன்றியமையாததாகும். பெண்ணின் மென்மை அவளுக்கு ஆடவரின் மதிப்பைப் பெற்றுத் தரும் (புறம் 68 : 6) இவற்றால் அன்பு, மடம், மென்மை, இனிமை, அழகு ஆகியவற்றுடன் கற்பிற்கு முதலிடம் தருதல் பெண்மை என்பது பெறப்படுகிறது. சங்கப் பெண்மை, தொல்காப்பியர் காட்டும் பெண்மையுடன் பெரிதும் ஒத்திருப்பதும்[5] சுட்டத்தக்கது.

பேணினர் எனப்படுதல் பெண்மையும் அன்று (கலி. 47 : 21) எனும் கூற்றால் பேணப்படுதலே பெண்மை என்று வரையறுக்கப் படுதலையும் காணலாம். பெண்ணுக்குக் கணவனே அன்னையும் அத்தனுமாய் (குறு. 93 : 3), நீரின்று அமையா உலகம் போல் அவனின்றி அவள் அமையாளாய் (நற். 1:6-7) அமைதல் காட்டப் படுகிறது. எனவே 'இகழினும் கேள்வரை ஏத்தி இறைஞ்சும்' (பரி 20 : 89 - 90) ஆறிய கற்பினளாய், ஊடினும் இனிய கூறும் இன்னகையாளாய் அமைதல் (பதி 16 : 10-11) வேண்டப் படுகிறது.

கணவர் உவப்பப் புதல்வரை (மது. 600) ஈன்று புறந் தருதல் தலைக் கடனாகிறது (புறம் 312:1). அரும் பெறற் காதலற்கு விருந்திட்டு, இனிதென அவன் உண்டலின் முல்லை சான்ற கற்பினள் ஆதல் (நற். 142 : 9 - 10) பெண்மையின் போற்றத்தக்க பண்புகளாகும். இத்தகைய பெண் கொண்ட கொழுநன் குடிவறன் உற்றதெனப் பட்டினியாவது இருப்பாளே தவிர,

எஞ்ஞான்றும் தந்தை கொடுக்கும் கொழுஞ் சோற்றை விரும்பமாட்டாள் (நற் 110 : 8 - 13) என்பதும் குறிக்கத் தக்கது. அது கணவனுக்கு இழுக்குத் தரும் என்பது காரணமாகும்.

கணவனுக்காக மட்டுமே தன்னை அணிசெய்து கொண்டு (ஐங். 496 : 3-5, நெடு. 53 - 56), அவனது நலத்திற்காக வழிபட்டு (மது. 550 - 556, குறுந். 218) 'சாதல் அஞ்சேன், அஞ்சுவல் சாவில் பிறப்புப் பிறிதாகுவது, ஆயின் மறக்குவேன் கொல் என் காதலன் என' (நற். 397 : 7-9) வருந்தி, 'இம்மை மாறி மறுமையாயினும் நீயாகியர் என் கணவனே யானே நின் நெஞ்சில் நிறைய வேண்டும்' (குறுந். 49) என வேண்டிய பெண்மை தன்னை ஆணுக்குள் அடக்கமாக வெளிக்காட்டுகிறது.

கணவன் மறுமணம் புரிந்த பொழுதும் அதனை வாழ்த்தி வரவேற்றலும் (ஐங். 292 : 2-5), பரத்தமை நாடின் அதனையும் இகழாத கடவுள் கற்பின் தன்மையால் ஏற்றுக்கொளலும் (குறுந். 252) அவ்வாறு அமையாது எதிர்த்துப் புலவி காட்டல் மனைகெழு மடந்தைக்குத் தகாது என்பதுடன் அவளுக்கு வறுமையை அது உருவாக்கும் எனக் கருதுதலும் (அகம் 326 : 10-17) தனக்காகக் காதலனைக் கடிந்துரைப்போரைத் தடுத்தலும் (குறுந். 296:5-8) சிறந்த பெண்மையின் நல் இயக்கமாக அன்று கருதப்பட்டது. தலைவனுக்குப் பழி நேராது அவன் பரத்தமையை மறைக்க முயல்வதும் அவள் கடனாகிறது (அகம் 116 : 9-12, 44:9-10) என்பதும் இவண் சுட்டத்தக்கது.

பெண்ணின் எண்ணமும் செயலும் இல்வாழ்வின் தடையற்ற நலனை மட்டுமே உட்கொண்டு அமைதலை,

விருந்து எதிர்கொள்ளவும், பொய்ச்சூள் அஞ்சவும்
அரும்பெறல் புதல்வனை முயங்கக் காணவும்
ஆங்கு அவிந்த ஒழியும் என் புலவி தாங்காக
அவ்அவ் இடத்தான் அவை அவை காண
பூங்கண்மகளிர் புனைநலம் சிதைக்கும்
மாய மகிழ்நன் பரத்தமை
நோவென் தோழி! கடன் நமக்கு எனவே (கலி. 75; 27-33)

என்று மொழிதல் கொண்டு காட்டலாம். இவற்றின் காரணமாகப் பெண் மனைக்கு விளக்காகிறாள் (ஐங். 405).

**பெண்டிர் பொறுப்புகள்**

அவரவர் இயல்பிற்கேற்பச் சமூக அங்கத்தினர் ஒவ்வொரு வருக்கும் ஒவ்வொரு சூழலிலும் சில பொறுப்புகள் உள்ளன.

எச்சூழலிலும் அவற்றை அவர் நிறைவேற்றுவது அவரது கடமையாகிறது. அவ்வகையில் ஒவ்வொரு பெண்ணும் தனது பருவம் மற்றும் தகுதிக்கு (Position) ஏற்ப இல்லப் பொறுப்பு களை மேற்கொண்டுள்ளாள்.

வாழ்வின் தலையாய பகுதியாக நடுநிற்கும் பருவத்தில் பெண், மிக எளிய நிலையிலும் இல்லத்தைச் சிதையவிடாது சிறப்பாக நடத்திச் செல்பவளாகத் (குறுந் 295. 3-6) திகழ்வதால் கணவனுக்கும் அவள் தாயாகிறாள் (குறுந். 19:1) இத்தாய்மைப் பண்பு பல்வேறு சூழல்களிலும் பலவாறாகச் சங்கப் பாக்களில் எதிரொலிக்கின்றது. அவற்றுள் குழந்தை வளர்ப்பு முதன்மை பெறுகிறது. அதனுள் அன்பும் பரிவும் பெருகி நிற்பதையும் (நற். 110 : 1-8) தவறு செய்யுங்கால் கண்டித்தலையும் (குறுந் 246 : 3-8) காண்கிறோம். 'கறைபட்டு வந்து நம் சேரியின் போகா முடமுதிர் பார்ப்பானை தோழி! நீ போற்றுதி என்றி' (கலி. 65 : 7 - 9) எனும் கூற்றால் ஆதரவற்றோருக்கு ஆதரவளித்தலும் அவள் விரும்பி ஏற்றுக்கொண்ட பொறுப்பாகிறது. விருந்தினரை மகவாக எண்ணிப் போற்றினாள் (மலை. 184 - 185) என்பதும், வறுமைத் துயிரில் வாடுவோரை 'ஈன்றோள் நீத்த குழவி போல' எனப் பேசுவதும் (புறம். 230 : 6-9) பெண்ணின் பொறுப்புகள் தாய்மை நோக்கோடு நிகழ்த்தப்பட்டதை உணர்த்துகின்றன.

சிறுபருவத்திலேயே பெண்டிர் இல்லப்பணிகளில் ஈடு படுத்தப்பட்டதை,

> பாசவல் இடித்த கருங்காழ் உலக்கை
> ஆய்கதிர் நெல்லின் வரம்பு அணைத் துயிற்றி
> ஒண்டொடி மகளிர் வண்டல் அயரும் (குறுந். 238 : 1-3)

என்பதால் பெறலாம். இல்லத்திற்குத் தேவையான நீர் கொணர்தல், வீட்டுத் தோட்டம் அமைத்தல் (குறுந். 361), உணவுப்பொருள் தொகுத்தல் (புறம். 176 : 1-4) போன்ற பணிகளில் ஈடுபட்ட பெண்டிர் தாம் வாழ்கின்ற இடத்திற்கேற்பப் பிறபல பணிகளிலும் தம்மை ஈடுபடுத்திக்கொண்டனர். குறிஞ்சி நில மகளிர் தினைப்புனக் காவலும் (நற். 134: 3-6), விளைந்த தினையைக் காயவைத்துப் பாதுகாத்தலும் (குறுந். 335 : 1-2) மேற்கொண்டனர். மற்றும் தன் தந்தையாரும், தமையன்மாரும் வேட்டையாடிக்கொண்டுவந்த விலங்குகளின் ஊனினை, எதிர்காலத்தில் பயன்படுத்திக்கொள்வதற்கேற்பப் பக்குவப் படுத்தலும் (ஐங். 365 : 1-3) செய்தனர்.

இல்லத்தில் உள்ள கறவைகளிடம் தீம்பால் கறந்து கன்றுகளை அவற்றிற்குரிய தாம்புகளில் பிணித்து அவற்றை ஓம்பும் பணி (கலி 111 : 1-3, முல்லை 12-16) முல்லை வாழ் ஆய மகளிர் பொறுப்பாகிறது. மாடு மேய்த்தல் தொழிலையும் இவர் மேற்கொண்டனர் (கலி. 116 : 1-2, கலி 108 : 33) என்பதும் சுட்டற்பாலது. நாள்தோறும் தயிர் கடைந்து மோராக்கி அதனைப் பிற நிலங்களுக்கு எடுத்துச் சென்று வருதலும் இவர் பொறுப்பே (கலி. 108:26).

நெய்தல் நிலப் பெண்டிர் இல்லப் பணியும் பரந்தமைகிறது. இல்லத்து ஆடவர் கொணர்கின்ற மீன்களைப் பிற இடங்களுக்கு எடுத்துச் சென்று விற்றலும் (ஐங். 49 : 1) எஞ்சியவற்றை உணக்குதலும் (அகம் 20 : 1-10) விளைந்த உப்பினை நெல்லாக மாற்றித் தருதலும் (அகம் 390 : 6 - 10) முதன்மை பெறுகின்றன. ஆயமகளிரும், பரதவ மகளிரும், வேறு பணியில் ஈடு பட்டிருக்கும் தம் தந்தைமாருக்கு உணவு எடுத்துச் செல்லலும் (கலி. 108:31-32; அகம். 60:1-6) குறிக்கத்தக்கது.

வயல்களில் களையெடுத்து (புறம் 61 : 1-3), அறுவடைக்கு முன் விளைந்த கதிர்களைப் பறவைகள் பற்றாது ஓம்பிப் பின் அவற்றை அறுத்து இடித்து அரிசியாக்கும் பொறுப்பை (அகம் 145:16-19) மருதநில மகளிர் மேற்கொண்டுள்ளனர். பூ விற்றலும் இவரிடம் காணப்படுவது (நற். 97 : 6-9) சுட்டத்தக்கது.

மகள் மனைவியானதும் அவள் பணி வேறு சில பொறுப்பு களை ஏற்பதாகிறது. குழந்தை பராமரிப்புடன் இல்லத்திற்குத் தேவையான பொருட்களை வாங்கும் பொறுப்பும் கொள்வதை,

''கானுறை வாழ்க்கைக் கதநாய் வேட்டுவன்
மான்தசை சொரிந்த வட்டியும் ஆய்மகள்
தயிர்கொடு வந்த தசும்பும் நிறைய
ஏரின் வாழ்நர் பேரில் அரிவையர்
குளக்கீழ் விளைந்த களக்கொள் வெண்ணெல்
முகந்தனர் கொடுப்ப உகந்தனர் பெயரும்'' (புறம். 33: 1-7)

''முள்ளெயிற்றுப் பாண்மகளின் கெடிறு சொரிந்த
அகன்பெரு வட்டி நிறைய மனையோள்
அரிகாற் பெரும்பயறு நிறைக்கும்'' (ஐங். 47 : 1-3)

போன்ற பகுதிகள் காட்டுகின்றன. மனையுறை பெண்டிர்க்கு மிகப் பெரிய பொறுப்பாகச் சங்கச் சமூகம் காட்டுவது விருந்தோம்பலாகும். செல்வ நிலையினர் மட்டுமின்றி

ஏழ்மையோரும் அதனைத் தம் கடமையாகக் கருதி, விதைக்கு என வைத்திருக்கும் தினையைக் கூட விருந்தினருக்குப் பயன்படுத்தியதைச் சங்கப்பாடல் பரவுகின்றது (புறம். 333 : 8 -14) எனவே பெண்,

உள்ளது,
தவச் சிறிது ஆயினும் மிகப் பலர் என்னாள்
நீர்நெடும் பந்தர் ஊன் முறை ஊட்டும்
இல் பொலி மகடூஉ (புறம் 331 : 6-9)

எனப் போற்றப்பட்டாள்.

இல்லத்தைத் தூய்மைப்படுத்தி (புறம் 108: 1-3) நலங் காக்கும் பெண்டிர் தம் துணைவர் போரிலும் வேட்டை யாடலிலும் பெற்ற புண்களுக்கு மருந்திட்டு ஓர் மருத்துவராகச் செயல்படுவதுடன் அவர்தம் நோவு தணிய இன்குரலில் பாடி ஆற்றுவிப்பதும் (புறம். 281, மது. 302 - 304) சுட்டத்தக்கது. கணவன் வேட்டையாடிக் கொணர்ந்த மான், பன்றி போன்ற வற்றின் ஊனினைத் தன் குடியில் உள்ளோர் அனைவர்க்கும் பகிர்ந்தளித்தலும் (நற். 85 : 8-10, நற். 336 : 3-6) அவள் கடனாகக் காட்டப்படுகிறது.

காலைப் பொழுதிலே தயிர் கடைந்து அதனை மோராக்கி விற்று, அதனின்றும் கிடைத்த வருவாயில் சுற்றத்துடன் பகிர்ந்துண்டும், நெய்யினால் வரும் வருவாயில் நல்ல கறவை களைப் பெற்றுத் தன் இல்லத்தினை மேலும் மேலும் வளம் பெறச் செய்யும் ஆய மகளிரை,

''ஆம்பி வான்முறை அன்ன கூம்பு முகிழ்
உறையமை தீந்தயிர் கலக்கி நுரை தெரிந்து
புகர்வாய்க் குழிசி பூஞ்சுமட்டு இரீஇ
நாள்மோர் மாறும் காதினாள் பணைத் தோள்
குறுநெறிக் கொண்ட கூந்தல் ஆய்மகள்
அளவிரை உணவில் கிளையுடன் அருந்தி
நெய்விலைக் கட்டிப் பசும்பொன் கொள்ளாள்
எருமை நல்லான் கருநாகு பெறூஉம்'' (பெரும் 157 - 165)

எனக் காட்டியிருப்பது எண்ணத் தக்கது. பெண்டிர் அன்று இல்லப் பொறுப்பில் ஆடவருக்கு நிகராக விளங்கியதை இவை தெளிவாக உணர்த்துகின்றன. இவற்றை நோக்க, ''பயிர் செய்கை, கால்நடை வளர்ப்பு ஆகிய பணிகளைச் சுற்றியே பெண் களின் வாழ்க்கை பின்னிடப்பட்டிருந்தது; இவற்றிலிருந்து

உணவுகளை எடுத்து, சேமித்து, தயாரித்து, தட்டில் பரிமாறும் வரை எழுந்த தேவைகள் அனைத்தையும் தமது உழைப்பினால் பூர்த்தி செய்தனர்; இவர்களின் இந்த உழைப்பின் விளைவு சிறு கைத்தொழில்களின் வளர்ச்சியாகும்'' என்ற கூற்று[6] உறுதிபடக் காணலாம்.

தன்மனைக்கண் நிகழும் திருமணப் பணிகளை நிறை வேற்றும் பொறுப்பும் பெண்டிரின் பாற்பட்டதை, ''கானக நாடன் வரையின், மன்றலும் உடையாள் கொல் தோழி யாயே' எனும் பகுதி (ஐங். 253 : 3-4) அறிவிக்கிறது. ''தந்தை கூற்றுகள் இல்லாமையும், மகளின் களவுச் செயல்கள் பற்றி வருந்தும் பொறுப்பும் உடன் போக்கில் பிரிந்த மகளை மருமகன் வீட்டில் சென்று காணும் பொறுப்பும் தாய் அல்லது செவிலித் தாய்க்கே இருப்பனவாகச் சங்க இலக்கியப் பாக்கள் படம்பிடிக்கின்றன. எனவே, ஒரு காலத்தில் பெற்ற பிள்ளைகளின் நடத்தை, திருமணம் முதலானவை பற்றிக் கவனிக்கும் முழுப் பொறுப்புத் தாய்க்கே இருந்தது என்பதை இக்குறிப்பு உணர்த்துவதாகக் கொள்ளலாம். இக்குறிப்புத் தாய்வழித் தலைமையின் எச்சமாகும்'' என்ற கருத்தும்[7] உன்னத்தக்கது.

முதுமையடைந்த பெண்டிர் பற்றியும் சங்கப்பாக்கள் சில குறிப்புகளைத் தருகின்றன. அவர்க்கென்றும் சில பொறுப்பு களிலிருந்தமையை விரிச்சி கேட்டல் கொண்டு அறியலாம். சகுனம் பார்ப்பதில் நம்பிக்கை கொண்ட சங்கச் சமூகத்தினர் ஒரு செயலைத் துவங்கும் பொழுதும், மனத்துன்பத்தால் உலைவுறும் பொழுதும் விரிச்சி கேட்டனர். 'நெல் நீர் எறிந்து விரிச்சி ஓர்க்கும்' இவ்வழக்கினை, பொறுப்பினை செம்முதுபெண்டிரே மேற்கொண்டனர் (புறம். 280 : 6-7, முல்லை 6 : 11) என அறிகிறோம். இல்லத்தே உள்ள இளஞ்சிறார்களைப் பாதுகாப்புடன் புறத்தே வழிபாடு போன்றவற்றிக்காக அழைத்துச் சென்று வருதலும் கூட (மது, 460 - 467) இங்கு இணைத்துக் கூறத்தக்கது. மிகவும் தளர்ந்த நிலையில் 'கோல் கால் ஆக முன்றில் போகா' முதலில் அடைகையில் அவளைப் புரக்கும் பொறுப்பு அவள் மகனுக்குரித்தாயிற்று (புறம். 159 : 1-6) அங்ஙனம் யாருமற்ற வேளையில் தம் முயற்சியிலேயே பொருளீட்டி வாழ்வு நடத்தியதை,

''பெரும்பின்னிட்ட வால்நரைக் கூந்தலர்
நன்னர் நலத்தர் தொன்முது பெண்டிர்
......

புடையமை பொலிந்த வகையமை செப்பில்
காமர் உருவில் தாம் வேண்டு பண்ணியம்
கமழ் நறும்பூவொடு மனைமனை மறுக' (மது. 408 - 423)

என்பதால் பெறலாம். இவற்றால் சிறுபருவம் முதல் முதுமை வரை பெண்டிர் ஏதேனும் பொறுப்புடையோராய்க் கடமை யுணர்வுடன் செயல்படுவதைக் காணமுடிகிறது.

இங்ஙனம் இல்லப் பொறுப்பில் தேர்ந்த சங்கச் சமூகப் பெண்டிர், ஆடவர்க்கு இணையாகப் பொருளீட்டுதலிலும் தம் பங்கைச் செவ்வனே புரிந்துள்ளனர். அவர் மேற்கொண்ட பல்வகைத் தொழில்கள் இதனை இயம்புகின்றன. பூவிற்றல் (நற்.118 : 8-11); உப்பு விற்றல் (அகம் 390 : 8-11) மோர், நெய் விற்றல் (கலி. 106: 44-45) மீன் விற்றல் (அகம். 320 : 2-4) என்பன அவ்வவ் நிலத்திற்குரிய இளம்பருவ மகளிரின் திறமாக முன்பே மொழியப்பட்டிருப்பினும் வருவாய் ஈட்டுதலில் பெண்டிரின் பங்கேற்பு என்ற நிலையில் இங்கு மீண்டும் சுட்டுதல் இன்றி யமையாததாகிறது. வேட்டைத்தொழிலில் எஞ்சும் ஊனினை வேட்டுவனே வெண்ணெல்லாக மாற்றிவரும் குறிப்புக் காணப்படுவதும் (புறம். 331: 1-7) குறிஞ்சி நில மகளிர் இத் தொழிலில் ஈடுபட்டமைக்கான குறிப்பின்மையும் ஆயத்தக்கது.

பாண்மகள் தானே மீன்பிடித்தலும் உண்டு என்பதை "நோன் கொள் நுண்கோலின் மீன்கொள் பாண்மகள்" (அகம். 216 : 1) என அகநானூறு பேசுகிறது. பிறவும் (அகம் 126 : 7 - 12) பெற்றனர். நெடுந்தொலைவு செல்லும் உப்பு வணிகருடன் உமண மகளிர் தம் புறத்தே மகவினையும் கட்டிக்கொண்டு அவரின் உப்புவண்டியை ஓட்டிச் செல்லும் அரிய காட்சி யொன்றும் (பெரும். 58 - 65) சங்கப்பா தருதல் நோக்கத் தக்கதாம்.

இவை தவிர மற்றும் சில தொழில்களையும், அவற்றைப் புரியும் பெண்டிர் அத்தொழில் குறிப்புடனே அழைக்கப் பட்டதையும் அரியற் பெண்டிர், அகவன் மக்ளிர், வெறியாள், புலைத்தி, விறலி, பாடினி என்னும் சொற்கள் உணர்த்துகின்றன. முன் சுட்டிய தொழில்கள் தமக்காகத் தாமே செய்து கொள்வதாக அமைய, இவை பிறர்பொருட்டுச் செய்வன என்ற வேறுபாடும் இங்கே அமைகிறது.

கள்ளினைக் காய்ச்சித் தயாரிப்பதையும் விற்பதையும் மேற் கொண்டோர் (அகம் 157 : 1-4) அரியற் பெண்டிராவர். இவர்

கள்ளடு மகளிர் (பெரும் 339) எனவும் அழைக்கப்பட்டனர். பல்லிடங்கட்கும் இவர் கள்ளை எடுத்துச் சென்று விற்றதை,

'அரியல் பெண்டிர் அல்குல் கொண்ட
பகுவாய்ப் பானைக் குவிமுனை சுரந்த
வரிநிறக் கலுழி ஆர மாந்திச்
செருவேட்டுச் சிலைக்கும் செங்கண் ஆடவர்'

(அகம். 157 : 1-4)

என்பதால் அறியலாம். பல தெய்வங்களையும் அகவி, வேண்டியோர்க்குக் குறிச்சொல்லும் பெண் அகவன் மகள் (குறுந். 23) எனப்பட்டாள். இவர் தன் தொழில் திறமைக்காகப் பெண்யானையைப் பரிசிலாகப் பெற்றதை (குறுந். 298 : 5-8) அறிய முடிகிறது.

தன் மகளின் வாட்டம் கண்டு வருந்தும் தாய் அதன் காரணமறிய வெறியாட்டு நிகழ்த்துதல் சங்கச் சமூகப் பழக்க மாகும். புதுமணல் பரப்பிய முற்றத்தில் செம்முது பெண்டிரோடு நெல்லை முன்வைத்துக் கட்டினும் (நற். ,288; 5-10) கழங்கினும் (நற். 268 : 7-9) குறி பார்த்து மகளின் நோய்க்கு நெடுவேளே காரணம் என அறிந்தால் வெறியாட்டு நிகழும் (அகம் 22 : 3-7) இவ்வெறியாடலை 'வேலன்' ஆகிய ஆடவன் (குறுந். 362 : 1) மட்டுமின்றிப் பெண்டிரும் மேற்கொண்டிருந்ததைக் குறுந் தொகைப் பாடல்கள் (105, 366) தருகின்றன. அதன் காரணமாக அவள் 'வெறியாள்' (குறுந். 366) எனப்பட்டாள்.

இவர்தம் தொழிலினின்றும் மாறுபட்டதாக; பிறரின் ஆடைகளைத் தூய்மை செய்யும் பணியாகப் புலைத்தியின் தொழில் அமைகிறது. தன் தொழிலுக்காகக் 'களர்படு கூவல் தோண்டுதலும்' (புறம் 311 : 1-2) தூய்மை செய்த ஆடைகளைப் பசையில் தோய்த்து எடுத்தலும் (குறுந். 330 : 1 - 4) குறிப்பிடத் தக்கது. இவற்றைச் சார்புத் தொழில்களாகக் கருதலாம். ஆடை வெளுக்கும் பெண்டிர் தமக்குத் துணையாகத் தம்புதல்வரை ஈடுபடுத்தலும் (அகம் 387 : 4-7) காணப்படுகிறது. ஏனையோரி மிருந்து சற்று மாறுபட்ட நிலையிலும் இப்பெண்டிர் அமை கின்றனர். பனையோலை கொண்டு பெட்டிகளைச் செய்து விற்றலும் இவரின் துணைத்தொழிலாக (கலி. 117 : 6-8) அறிய முடிகிறது. மற்றும் தலைவனின் பரத்தமைக்குத் தூது செல்பவளாகவும் அமைகின்றாள் என்பதற்கு,

'நாடி நின்தூது ஆடி, துறைசெல்லாள், ஊரவர்
ஆடை கொண்டு ஒலிக்கும் நின்புலைத்தி' (நற். 90 : 1-2)

என்பது சான்றாகிறது. இது ஏதேனும் கட்டாயத்தின் பேரிலா அன்றித் தொழில் காரணமாகப் பலரையும் அறிந்து வைத்திருந் தமையாலா என்பது தனித்த ஆய்விற்குரியது. இவற்றால் போலும் இவள் 'வறன் இல்புலைத்தி' (நற். 90 : 3) என வறுமையற்றவளாகச் சுட்டப்படுகிறாள். எனினும் புலைத்தி என்பது இழிவுச் சுட்டலாக அமைதலும் எண்ணத்தக்கது. இவர்கள் அனைவரும் தம் தொழிலுக்கு ஊதியமாக எவற்றை, எப்படிப் பெற்றனர் என்பதற்கான விளக்கங்கள் சங்கப்பாக்களில் தென்படவில்லை.

பிறரை மகிழ்வித்தலை நோக்கமாகக் கொண்டு செயல்படும், விறலி, பாடினி ஆகிய இருவரையும் தொழில் சார்ந்த மகளிராகக் கருதுகின்றனர்.[8] தமது கலைகளை மூலதனமாகக் கொண்டு அதிலிருந்து கிடைக்கும் வருவாயில் வாழ்க்கை நடத்துதலால் இவர்களைத் தொழில் மகளிராகக் கொள்வது ஏற்புடையதே. இவரது குழுவிற்குத் தலைமைப் பொறுப்பு ஆடவரைச் சார்ந்ததாக (மலை 568 - 570) அமைகிறது. தலைவனின் மனையோளாக (புறம். 260 : 3), முல்லை சான்ற (சிறு 30 - 31), சிறுமீன் புரையும் கற்பினளாக (பெரும் 302 - 304) விறலி அமைகிறாள், ஆயின்,

ஒருதலைப் பதலை தூங்க ஒருதலைத்
தூம்பகச் சிறுமுழாத் தூங்கத் தூக்கிக்
கவிழ்ந்த மண்டை மலர்க்குநர் யாரெனச்
சுரன் முதலிருந்த சில்வளை விறலி
செல்வை ஆயின் (புறம். 103 : 1-5)

என்பது போன்ற விறலியாற்றுப்படை பாடல்கள் (புறம். 133, பதி. 40, 57) விறலியும் தலைமைப் பொறுப்பை ஏற்றிருந்திருக் கலாம் என்ற எண்ணத்தைத் தோற்றுவிக்கின்றன.

அவை புகழ் அரங்கின் மேலும் (கலி 79 : 4) விழவுக் களத்திலும் (குறி.192-193) விறல் பட ஆடும் விறலி ஆடுமகள் (நற். 95; 1-2) புறம். 128:5-7) எனவும் அழைக்கப்பட்டாள். இக் கலைஞரை அரசர் தம் அரசவைக்கண் தமக்கு உரியவராக்கிப் புரந்தனர் என்பதை 'ஆடுநடை அண்ணல் நிற்பாடுமகள் காணியர்' (பதி. 44:7) 'நும் விறலியர் பின்வர ஆடினிர் பாடினிர் செலினே நாடும் குன்றும் ஒருங்கு ஈயும்மே (புறம். 109) என்பன போன்ற காட்டுகள் காட்டுகின்றன. 'ஆடு சிறை யறுத்த நரம்புசேர் இன்குரல் பாடு விறலியர் பல்பிடி பெறுக (பதி. 43: 21-22) பாடுவல் விறலியர் (புறம். 172:3) போன்ற குறிப்புகள்

அவள் பாடும் திறனையும் ஒருங்கே கொண்டவளாக அமைகிறாள் என்பதை வலியுறுத்துகின்றன. விறலியும் பாடினியும் ஒருவரோ என்ற ஐயமும் சிலவிடங்களில் (பொருந. 161 - 162, பதி. 47) எழுவதும் குறிக்கத்தக்கது. இவர் மன்னர் அவையில் மட்டுமின்றிப் பாசறைக்கும் சென்று பாடி வீரரை மகிழ்வித்ததை,

உரவுக்களிற்றுப் புலாஅம் பாசறை
நிலவின் அன்ன வெள்வேல் பாடினி
முழவின் போக்கிய வெண்கை (பதி. 61 : 14-16)

போன்ற தரவுகளில் (பதி 43: 21-28, பதி 46:1-7) காணலாம்.

'நாடக மகளிர் ஆடுகளத்து எடுத்த விசி வீங்கு இன்னியம்' (பெரும் 55 - 56) எனும் அரிய குறிப்பும் நோக்கற்பாலது. விறலியும் இவரும் ஒருவராக அன்றி வெவ்வேறானவரா என்பது புலப்படுமாறில்லை.

இக்கலைஞர் பெற்ற பரிசில்களே இவரின் ஊதியமாகிறது. குழுவாகச் செயற்படினும் தனித்த நிலையில் இவர் சிறப்பிக்கப்படல் எண்ணத்தக்கது. பொன்னரிமாலை, முத்து (பொருந. 161 - 162) குறுந்தொடி (மது. 218) வயங்கு இழை (பதி. 40:21) போன்றவற்றுடன் பிடியையும்[9] (பதி. 43 : 22) பரிசிலாகப் பெற்றுள்ளனர். இக்கலைஞரை நன்கு சிறப்பித்ததன் காரண மாகப் 'பாடினி வேந்து' என அரசர் போற்றப்படலும் (பதி. 14:17, 17:14) குறித்தற்பாலதாம். இத்தகு சிறப்புடை விறலியை அகப் பாடல்கள் தலைவனின் பரத்தமைக்குத் துணை போவதாக அவற்றின் துறை கொண்டு (அகம். 203, நற். 170. நற். 290, பரி, 6) நவில்வது மீளாய்விற்கு உட்படுத்த வேண்டியதொன்றாகத் தோன்று கிறது. பாடற் பகுதிக்கண் இது தொடர்பாக விறலியைச் சுட்டும், நேரடிக் குறிப்பு இன்மை இவ்வெண்ணத்தை எழுப்பியுள்ளது.

தொழில் நிலையில் இவர் தவிரக் குற்றேவல் புரியும் பெண்டிரையும் காணலாம். பெருஞ் செல்வந்தர் இல்லங்களிலும் (நற். 330 : 1-2); அரண்மனைகளிலும் (நெடு. 151) இவர் பணியாற்றியுள்ளனர். பதிற்றுப் பத்து தரும் 'செறுவினை மகளிர்' (71 : 1-3) எனும் குறிப்பு, களையெடுக்கும் பணியில் உரிமை யுடையோர் தவிரப் பிறரும்தேவை கருதி நியமிக்கப்பட்டனரோ என்ற எண்ணத்தைத் தருகிறது. அந்தப்புரக் காவலிலும் பெண்டிர் சிறந்திருந்தனரோ என்ற சிந்தனையை,

பீடுகெழு சிறப்பிற் பெருந்தகை அல்லது
ஆடவர் குறுகா அருங்கடி வரைப்பின் (106 - 107)

எனும் நெடுநல் வாடைப்பகுதி எழுப்புகிறது. பாசறைகளிலும் குற்றேவல் பணியாளராகப் (முல்லை *43 - 49*) பெண்டிர் அமைந்துள்ளனர்.

சங்கச் சமூகச் பெண்டிர் பொருளுடைமையாளராக இருந்ததை ஆயர் மகள் 'அளைமாறி யாம் வரும் செல்வம் எம் கேள்வன் தருமோ' (கலி. *106:44-45*) என வினவுவதும், 'பெண்டிரும் தம் பதம் கொடுக்கும்' (புறம் *151 : 5*) எனும் குறிப்பும் வலி யுறுத்துகின்றன.

இதுகாறும் கண்டவற்றை நுணுகிக் காணுங்கால் கீழ்க் கண்டவாறு அட்டவணைப்படுத்த இயலும்.




★ இப்பகுதி விரிவை அடுத்த வரைபடங்கள் காண்க.

● இப்பருவச் சிறப்பு நோக்கித் தாய் எனச் சுட்டப்பட்டுள்ளது.


பெண்டிர் இல்லப்பணி
இளையோர்
தாய்
முதியோர்
பொது நிலை
1. நீர்கொணர்தல்
2. வீட்டுத்தோட்டம் அமைத்தல்
3. உணவுப்பொருள் தொகுத்தல்
4. சமைத்தல்
நில அடிப்படை
இல்லத்தை சுற்றி
குறிஞ்சி
1. நிணம் உணக்கல்
முல்லை
1. ஆனிரை பாதுகாத்தல்
2. தந்தைக்கு உணவு கொண்டு செல்லல்
3. சிறுசிறு இல்லப் பணிகள்
மருதம்
அரிசி யாக்கல்
நெய்தல்
1. மீன் உணக்கல்
2. தந்தைக்கு உணவு கொண்டு செல்லல்
வெளியே
குறிஞ்சி
1. தினைப் புனக்காவல்
முல்லை
1. மோர், நெய் விற்றல்
2. மாடு மேய்த்தல்
மருதம்
1. களையெடுத்தல்
2. கதிர்பாதுகாப்பு
3. பூவிற்றல்
நெய்தல்
1. மீன்விற்றல்
2. உப்புவிற்றல்
இல்லப்பணி
1. குழந்தை வளர்ப்பு
2. விருந்தோம்பல்
3. சமைத்தல்
4. இல்லத்தூய்மை
5. தேவையான பொருள் வாங்கல்
6. துணைவர் விழுப்புண் ஆற்றல்
7. திருமணம் நிகழ்த்துவித்தல்
புறப்பணி
1. பொருட்பங்கீடு
2. உப்பு விற்றல்
3. பொருள் உற்பத்தியில் ஈடுபடல்
1. விரிச்சிகேட்டல்
2. குறிபார்த்தல்
3. குழந்தைகளைப் பேணல்
4. பூ, பண்ணியும் விற்றல்.

*பெண்டிரின் செயற்பாடுகள்*

சங்கச் சமூகத்தில் பெண்டிரின் மனநிலை எங்ஙனமிருந்தது. தம் வாழ்வை அவர் எப்படி எதிர்கொண்டனர் என்பனவாகிய வினாக்களுக்கு விடை காண அவர் தம் செயற்பாடுகள் சிலவற்றை இங்கே சுட்டுதலும் தேவையாகிறது. அவற்றுள், வழிபாடு, நோன்பு, பாடல், உணவு என்பன நோக்கத்தக்கன.

அரிதாகத் தலைவனுடன் கோயிலுக்குச் சென்று பெண்டிர் வழிபடுவதாகக் காணப்படினும் (பரி திரட்டு 1:61-64) மிகுதியும் அவர் தனித்து வழிபட்டதையே பேசுகின்றன. அவையும் 'நெற்பல பொலிக பொன் பெரிது சிறக்க' (ஐங். 1:2), 'பகைவர் புல்லர்க்கபார்ப்பார் ஓதுக' (ஐங். 4 : 2) எனப் பொதுமை காட்டினும் 'யாணர் ஊரன் வாழ்க. பாணனும் வாழ்க என வேட்டோமே' (ஐங். 1:5-6) எனத் தம் ஆடவர் சுற்றியே அமைதல் குறிக்கத்தக்கது. விரும்பியவனே கணவனாகக் கிடைத்த மகிழ்வில் இல்லுறை கடவுட்கு வழிபாடு நிகழ்த்துவதும் (அகம் 282: 12-18); தலைவன் பிரிந்திருக்கும் பொழுது அவன் நலம் நாடி வழிபடுவதும் (அகம் 115 : 1-7) அவன் சூள் பொய்த்தமையால் சூளேற்ற கடவுள் வருத்துதல் கூடாது என அக்கடவுளை உயிர்பலி தூஉய்ப் பரவுவதும் (நற். 358 : 5-12) எண்ணற்பாலன.

நல்ல கணவன் வேண்டிக் கன்னிப் பெண்டிர் பிறை தொழுதலும் (அகம் 239 : 8-10) வையையில் நீராடி வேண்டு தலும் (பரி 11 : 116 - 117) கோயில் வேள்வியுள் யானை உண்ட மிச்சிலை அருந்துதலும் (பரி 19 : 90-92) காணப்படுகின்றன. திருமணமான பெண்டிரும் இவ்யானை எச்சிலைக் கணவனின் அன்பு நிலைத்திருத்தற் பொருட்டு அருந்துதலும் (பரி 19 : 92 - 94) மீன் பிடித்து நலமே திரும்பிய துணைவனுக்காகக் கடல் தெய்வத்திற்கு வழிபாடு நிகழ்த்துவதும் (அகம் 240 : 5-9) நோக்கத்தக்கன. இக்குறிப்புகளால் பெண்டிரின் வழிபாடு ஆடவருக்காக, அவர் நலனுக்காக எனவே அமைதல் வெளிப்படை. இக் கருத்தினை,

விடர்முகை அடுக்கத்து விறல்கெழு சூலிக்குக்
கடனும் பூணாம் கைந்நூல் யாவாம்
புள்ளும் ஓராம் விரிச்சியும் நில்லாம்
உள்ளலும் உள்ளாம் அன்றே தோழி
உயிர்க்கு உயிர் அன்னர் ஆகலின் தம்மின்று
இமைப்பு வரை அமையா நம் வயின்
மறந்து ஆண்டு அமைதல் வல்லியோர் மாட்டே (218)

எனும் குறுந்தொகைப்பாடலும் வலியுறுத்தக் காணலாம்.

'படிவ மகளிர்' எனச் சிறப்பித்துச் சொல்லப்படும் நோன்பு நோற்கும் பெண்டிரின் (நற். 272:1) நோக்கம் நல்ல கணவனை அடைதலாக அமைதலும் உன்னத்தக்கது. இதற்காக இளம் பெண்டிர் ஏற்கும் தைந்நீராடல் (அம்பா ஆடல்) முனித்துறை முதல்வியர் முறைமை காட்டி வழி நடத்த, தாய் அருகிருக்க நிகழ்த்துவதும் அறியற்பாலது.

இவ்வாறு கணவரைச் சுட்டியே நிகழ்ந்த வழிபாடும் நோன்பும், கணவனையே தெய்வமாகக் கோடற்கும் வழி வகுத்ததை,

'குறவர் மடமகளிர்
தாம் பிழையார் கேள்வர்த் தொழுது எழலால் தம் ஐயரும்
தாம் பிழையார் தாம் தொடுத்த கோல் (கலி. 39; 16 -18)

எனும் பகுதி காட்டுகிறது.

பெண்டிரின் பணிகள் பலவும் பணிச்சுமை உணரா திருப்பதற்காகப் பாடிக்கொண்டே நிகழ்வதாகச் சங்கப்பாக்கள் பகருகின்றன. விழவு மற்றும் ஓய்வு நேரப் பொழுதுபோக்கில் ஆட்டமும் பாட்டமும் சிறப்பிடம் கொள்கின்றன. சூழல் எதுவாயினும் ஆடுவோர், பாடுவோர் யாராயினும் பாடற் பொருண்மை ஆடவரைப் பற்றியதாக நிற்றல் குறித்தற்பாலது.

தந்தை,

மைபடு மால்வரை பாடினள் கொடிச்சி
ஐவன வெண்ணெல் குறூஉம் (நற். 373 : 2 - 4)

தேயா நோய் செய்தான் திறம் கிளந்து நாம்பாடும்
சேய் உயர் ஊசல் சீர் நீ ஒன்று பாடித்தை (கலி 131 : 23 - 24)

குரவை தழீஇ, யாம் மரபுளி பாடி
தேயா விழுப்புகழ்த் தெய்வம் பரவுதும்
.....
எம்கோ வாழியர் இம்மலர்தலை உலகே (கலி 103 : 75 - 79)

வளிமுனை அவிர்வரும் கொடி நுடங்கு தெருவில்
.....
நன்னுதல் விறலியர் ஆடும்
தொன்னகர் வரைப்பின் அவன் உரையானாவே

(பதி 47 : 4-8)

என்பன சில சான்றுகள்.

வினைவயிற் பிரிந்த தலைவன் திரும்புவதைக் குறிக்கும் பாடல்கள் மிகுதியும், 'மாலை நனிவிருந்து அயர்மார் தேர்வரும்

என்னும் உரை வாராதே' (குறுந். 155 : 6-7) 'பெருந்தோள் நெகிழ்ந்த செல்லற்கு விருந்து வரக் கரைந்த காக்கையது பலியே' (குறுந் 210 : 6-7), 'அரும் பெறற் காதலர் வந்தென விருந்து அயர்பு மெய்ம்மலி உவகையின் (குறுந் 398 : 6-7) என்பன போன்று, வரும் தலைவனுக்கு அளிக்கவிருக்கும் விருந்திற்கு முதன்மை அளிப்பது சிந்தனைக்குரியது. 'நிற் பிரிந்துறைநர் தோள் துணையாக வந்தனர்; போது அவிழ் கூந்தலும் பூ விரும்புகவே' (ஐங் 496 : 3 - 5) எனத் தலைவன் திரும்பிய பின்பே தம்மைப் பெண்டிர் அழகு செய்வதையும் இத்துடன் இணைத்து நோக்கும் பொழுது, துணைவர் பிரிவின் போது அவரது உணவு மிக எளிய நிலையினதாக இருந்திருக்குமோ என்ற எண்ணமும் எழுகிறது. கைம்பெண்டிரின் புல்லரிசி உணவும் உடன் ஒப்பு நோக்கற்பாலதாம்.

இவை அனைத்தையும் ஒருங்கிணைத்துக் காணுகையில் சங்கச் சமூகப் பெண்டிரின் வாழ்வும் உயிரும் ஆடவரை மையமிட்டே அமைந்திருந்தது தெளிவாகப் புலனாகிறது.

### பெண்டிர் பெற்ற மதிப்புகள்

1. பெண் மகவு மிக்க விருப்புடன் ஏற்றுக் கொள்ளப் பட்டதை மலை உறை குறவன் காதல் மடமகள் (நற். 201 : 1), 'சிறுகுடி நல் கூர்ந்தார் செல்வமகள்' (கலி. 50 : 12-13) எனும் குறிப்புகள் உணர்த்துகின்றன.
2. குறிப்பிட்ட பருவம் வரை பெண்டிர் எவ்விதக் கட்டுப்பாடு மின்றி விருப்பம் போல் ஆடிக் களித்துள்ளனர். நீராடல், மலைவளம், சோலைவளம் காணல் முதலானவற்றில் ஆடவருக்குச் சமமாக மட்டுமின்றி, இணைந்தும் இன்பம் நுகர்ந்துள்ளனர் (பரி, 10, பரி 19 : 20 - 24, கலி 27 : 12 - 26, புறம். 243 : 1 - 10, குறுந். 326 : 2 - 3, நற். 204 : 3 - 4)
3. விரும்பிய பெண்ணை மணப்பதற்கு இடையூறு பல இருப்பினும் எப்படியேனும் - அவளின் தந்தைக்குக் குற்றேவல் புரிந்தேனும் பெற முனைந்த ஆடவனின் செயலை,

    ஆய்தொடிக் குறுமகள்
    நலம்சால் விழுப்பொருள் கலம் நிறை
    பெறல் அருங்குரையள் ஆயின், அறம் தெரிந்து
    நாமுறை தேஎம் மருஉப் பெயர்ந்தவனொடு
    இருநீர்ச் சேர்ப்பின் உப்புடன் உழந்தும்
    பெருநீர்க் குட்டம் புணையொடு புக்கும்
    படுத்தனம் பணிந்தனம் அடுத்தனம் இருப்பின்

தருகுவன் கொல்லோ தானே,....
- கானலம் பெருந்துறைப் பரதவன் நமக்கே

(அகம். 280 : 3 - 14)

என்ற பாடல் காட்டுகிறது. பெண்ணைப் பெறுதற்காக ஆடவன் கொள்ளும் முயற்சியை ஒரு வகையில் அவள் பெற்ற மதிப்பாகக் கருதலாம். தன் திருமணத்திற்காகத் தானே பொருள் தேடிச் செல்லும் பண்டைத். தமிழ் ஆடவர் நிலையும் இவண் இணைத்துக் காணத் தக்கது.

4. திருமணச் சடங்குகளில் பெண்டிரே பங்கேற்றலும் அவர் பெருமைக்குரியதாகிறது (அகம் 86 : 7-10). ஆயின் இச் சிறப்பு புதல்வன் பெற்ற மங்கல மகளிர்க்கு மட்டுமே என்பதும் உணர்த்தற்பாலது. எனவே ஒருவகையில் மதிப்பும், தன்னிலை காரணமாக ஒருவகையில் மதிப்பின்மையும் ஒருங்கே அமைதல் சுட்டத்தக்கது.

5. 'ஆன்றோள் கணவ' (பதி 55 : 1) 'திருந்திய இயன் மொழித் திருந்திழை கணவ' (பதி. 24 : 11), 'ஒடுங்கீர் ஓதிக்கொடுங் குழை கணவ' (பதி. 14 : 13-15) என உரிமை மகளிருடன் இணைத்து ஆடவர் போற்றப்படுதலும் நோக்கத்தக்கது. இங்குப் பெண்மையால் ஆணுக்குச் சிறப்பா? அன்றி ஆணின் பெருமை பெண்ணுக்கும் ஆகச் சார்பு பெற்றுள்ளதா என்ற ஐயம் எழுகிறது. ''மகளிரைச் சார்ந்த வகையால் பாடு தலின்றித் தனித்துப் பாடுதல் மரபு அன்றாதலின் இங்கே சேரனொடு சார்த்தி அவன் மாதேவியைச் சிறப்பித்தார்'' எனப் பதிற்றுப்பத்தின் பழைய உரையாசிரியர் (14 : 15) நவில்வதும் நினைக்கத்தக்கது. கிடைக்கும் குறிப்புகள் இரண்டையுமே அரண் செய்கின்றன. முற்றிலுமாகப் புறக் கணிக்கப்படாது, உரிமை ஆடவருடன் இணைத்தேனும் பாராட்டுப் பெற்றுள்ள நிலையில் இம்மதிப்பு இடம் பெறுகிறது.

6. அரசனை வாழ்த்தும் பொழுது 'வேயுறழ் பணைத்தோள் இவளோடு ஆயிரம் வெள்ளம் வாழிய பலவே' (பதி. 21 : 37 - 38) என வாழ்த்துதல்; அவனைப் பெற்ற தாயை 'வயிறு மாசிலீயர் அவன் ஈன்ற தாயே' (பதி 20 : 27) எனப் போற்றுதல்; 'ஆராத் திருவிற் சேரலாதற்கு வேளாவிக் கோமான் பதுமன் தேவி ஈன்ற மகன்' (பதி. நான்காம் பத்துப் பதிகம் 1 - 3) எனத் தாயையும் முன் வைத்து அறிமுகம் செய்தல் ஆகியன அன்று சங்கச் சமூகம் பெண்மைக்கு

அளித்த மதிப்பை முன்னிறுத்துகின்றன. ஆடவரின் பெருமையைப் பேசுதலையே புறப்பாடல்கள் முதன்மை யாகக் கொளினும், அவர் சார்பில் பெண்மைக்கும் அங்குச் சிறப்பிடம் உள்ளதை இவை காட்டுகின்றன.

7. இல்லத்தினுள்ளே முடங்கிக் கிடக்காது, புறத்தே வந்து, வெளியுலகக் களியாட்டத்தில் ஆடவரோடு சமமாகப் பெண்டிரும் பங்கேற்றதை,

> 'நறவு நாள் செய்த குறவர் தம் பெண்டிரொடு
> மான்தோல் சிறுபறை கறங்கக் கல்லென
> வான்தோய் மிமிசை அயரும் குரவை' (மது 320-322)

எனும் குறிப்பால் சங்கச் சமூகம் உணர்த்துகிறது.

8. கலைஞர் பரிசில் நாடிச் செல்லும் பொழுது புரவலர், அதில் தலைமையேற்கும் ஆடவருக்கு மட்டுமின்றி இணைந்து நிற்கும் பெண்ணிற்கும் தனித்த சிறப்பளித்தலும் (புறம். 11 : 10-18) இதன் பாற்படும்.

சங்கச் சமூகம் பெண்மைக்கு அளித்த மதிப்புகளை ஆராய்ந்தால் ஆடவரைச் சார்ந்த நிலையில் பெற்ற மதிப்பே மிகுதியாக உள்ளமை புலனாகிறது.

### பெண்டிர் மதிப்புக் குறைதல்

ஆடவருக்கு இணையான, ஒத்த, சமமான நிலை பெண்டிருக்கு மறுக்கப்படுதல், பெண்ணுக்கு மட்டுமே உரித்தாக விதிக்கப்படும் கட்டுப்பாடுகள் ஆகியன பெண்டிரின் மதிப்பைக் குறைத்தலாக இங்கே வரிசைப்படுத்தப்படுகின்றன. 'வினையே ஆடவர்க்கு உயிரே, வாணுதல் மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிர்' (குறுந். 135 : 1 - 2), 'எவ்வழி நல்லவர் ஆடவர் அவ்வழி நல்லை வாழிய நிலனே' (புறம் 187 : 3-4) போன்ற கூற்றுகள், பெண்டிர் ஆடவருக்குட்பட்டமைவர் அல்லது அமைய வேண்டும் என்பதை வெளிப்படையாகத் தருகின்றன. பிறப்பு முதல் இறப்பு வரையிலாக எப்படி, எச்சூழல்களில் பெண்டிரின் மதிப்புக் குறைவு அமைகிறது என்பதை இப்பகுதி காட்டுகிறது.

1. பெண் மகவு வேண்டி இறைவழிபாடு நடத்திடினும் (ஐங். 257 : 1 - 2) நிலத்தில் சீறடி பட விடாது கண்ணிலும் பெரி தாகத் தந்தையும் தாயும் தம் பெண்ணைப் போற்றி வளர்ப்பினும் (அகம் 12 : 1-3) அவர்க்கு இம்மை உலகப் புகழும் மறுமை உலக இன்பமும் குறைவின்றித் தருவது ஆண்மகனே (அகம் 56 : 1-5) என்பது சங்கச் சமூகக் கருத்தாகும்.

2. பிறந்த மகவிற்குப் பெயர் சூட்டலிலும் இருநிலைகளில் வேறுபாடு காட்டப்படுகிறது. முதலாவதாக முன்னோர் பெயரைப் புதல்வன் மட்டுமே பெறுகிறான் (கலி.75:23) புதல்விக்கு இச்சிறப்பு யாண்டும் காணப்படவில்லை. முன்னோரிலும் தந்தை பெயரே, 'மேதக்க எந்தை பெயரன்' (கலி. 81 : 35) எனப் போற்றப்படுகின்றதேயன்றித் தாய்க்கு அவ் உரிமையோ, பெருமையோ இருந்ததாகத் தெரியவில்லை.

3. புதல்வன் பெற்ற பெண்ணே தனிச்சிறப்புக் கொள்வதை 'சிறுவர் தாயே பேரில் பெண்டே' (புறம் 270 : 6) செம்முது பெண்டின் காதலம் சிறாஅன் (புறம். 276 : 3) புதல்வன் ஈன்றெனப் பெயர் பெயர்ந்து அவ்வரி திதலை அல்குல் முது பெண்டாகி' (நற். 370 : 5-6) என்பன போன்ற பகுதிகள் தெளிவாக்குகின்றன. பரத்தையிற் பிரிந்த ஆடவன் தன் தளர் நடைப் புதல்வனை நினைத்து இல்லம் திரும்புகின்றானே (ஐங். 66 : 3-4) தவிர, புதல்வியை விரும்பியல்ல என்பதும் இங்குச் சுட்டற்குரியது.

4. பெண் திருமணப் பருவம் அடைந்தவுடன் அவளது விளையாட்டு ஆயத்திடமிருந்து பிரிக்கப்பட்டு முன்னெச்சரிக்கையாக இற்செறிக்கப்படுகிறாள் (நற். 351 : 1-2, அகம், 7: 1-7). அவளது களவொழுக்கம் வெளிப்படுகையிலும் (நற். 68 : 1-7) இந்நிலையள் ஆகிறாள். ஆண் எத்தடையுமின்றி விருப்பம் போல் வலம் வருகின்றான்.

5. தான் கொண்ட காம உணர்வினை ஆண் மட்டுமே வெளிப்படுத்தலாம்; பெண் நுண்ணிதின் தாங்கிக் கொள்ள வேண்டும் - வெளியிடக் கூடாது. (நற். 94: 1-3) என்ற கட்டுப்பாடும் உண்டு.

6. ஆண் பெண் தம் கருத்தொத்துக் காதலின்பம் மறைவாகப் பெறுகையில் பிறர் அறிய நேரிடில் அது அலராகி, அம்பலமாகிப் பெண்ணுக்குக் குறைவு தருகிறது (குறுந். 373:3, கலி. 105: 61-69). இதன் காரணமாக அன்னையிடம் அடி வாங்கும் துன்பமும் (நற். 149: 1-5) நேர்கிறது. ஆணுக்கு இத்தகு இடர்ப்பாடுகள் இல்லை. அலரால் அவனுக்கு எவ்வித பாதிப்பும் இருப்பதாக அறிய முடியவில்லை.

7. பெண்ணின் வருந்திய தோற்றத்திற்குக் காரணமாக, தெய்வம் வருத்தியுள்ளது என நவின்று வெறியாடல் நிகழ்த்துதலும் விரும்பத்தக்கதன்று என்பதை, 'பேஎய்க் கொளீஇயள் இவளெனப் படுதல் நோதக்கன்றே' (குறுந். 293 : 5-6) எனும்

உரையால் அறியலாம். சிறுவர்க்குப் பாதுகாப்பாக ஐம்படைத் தாலி அணிவிக்கும் வழக்கத்தை (புறம். 77) இங்கு ஒப்பு நோக்கலாம்.

8. தன்னை விரும்பாத பெண்ணை வலிந்து பற்றிக் கொண்டாலும் அது ஆடவர்க்கு இழுக்கன்று (கலி. 62. 14-15). பெண்ணின் விருப்பத்திற்கு இங்கு இடமில்லை. இதுபோன்றே பெண்ணை விரும்பியோனும், பெற்றோனும் அவள் கருத்திற்கு இடந்தராது தம்முள் பகைபாராட்டித் திரிதலும் (புறம். 336 - 354) அமையும்.

9. தன்னை விரும்பாத பெண்ணை மடலேறி அதன்வழிப் பெறுதலும் கட்டாயத்தின் பாற்படுவதே (கலி. 138: 8-13, குறுந். 173). ஆடவனின் மேலாண்மையை எடுத்துக்காட்டு வனவற்றுள் இதுவும் ஒன்று.

10. பெண், ஆடவனின் உடைமையாகக் கருதப்பட்டதை,

''ஓஓ! இவள் பொருபுகல் நல்லேறு கொள்பவர் அல்லால்
திருமா மெய் தீண்டலர் என்று கருமமா
எல்லாரும் கேட்ப, அறைந்து அறைந்து எப்பொழுதும்
சொல்லால் தரப்பட்டவள் (கலி. 102:9-12)

என்பது காட்டுகிறது. ஏறும் மகளிரும் இதனால் ஓர்நிலை நிற்பவராகின்றனர்.

11. பெண் தான் விரும்பிய ஆடவனை மணக்கப் பெற்றோர் தடை செய்யும் சூழலில் 'உடன்போக்கு' செய்ய வேண்டிய கட்டாயத்திற்குள்ளாகிறாள்.

12. பெண்ணை ஆண் விலைகொடுத்துப் (ஐங். 147:3, அகம். 90: 9-14) பெற்றுக்கொள்வதும் சமம் இன்மையைக் காட்டு வதாகும். ஒன்றை விலை கொடுத்துப் பெறும் பொழுது அது வாங்கியோருக்கு உரியதாக, அவர் விருப்பிற்கேற்பச் செயல் படக்கூடியதாக அமையுமே அன்றித் தன் விருப்பச் செயற் பாட்டிற்குரியதாதல் இயலாது என்பது இங்கு எண்ணத் தக்கது. 'உரிமை செய்தனர் நமரே' (குறுந். 351:3) நேர் இறை முன்கைப் பற்றி நுமர் தர நாடு அறி நல்மணம் அயர்கம்' (குறி. 231 - 232) என்பனவும் இணைத்துக் காணத்தக்கன.

13. திருமணச் சடங்கில் பெண் மட்டுமே அதற்குரிய அடையாள மாக இழையணிதலும் (புறம். 127:5), சிலம்பு கழித்தலும் (நற். 279: 10-11) அமைய இத்தகையன ஆடவர்க்கின்மையும் காணப்படுகிறது. இவையும் ஓர் வகையில் பெண் ஆணுக்குக்

கட்டுப்பட்டவள் என்பதை உணர்த்துகின்றன. திருமணத்தின் போது,

வால் இழை மகளிர் நால்வர் கூடி

கற்பினின் வழாஅ, நற்பல உதவிப்
பெற்றோன் பெட்கும் பிணையை ஆக

என (அகம். 86: 12-14) வாழ்த்துவது இக்கருத்திற்கு அரணாகும். திருமண விழாவின்போது ஆடவன், பெண்ணின் தலையில் பூச்சூடலும் (ஐங். 294: 2-5) இதனை வலியுறுத்துவ்தாகும்.

14. ஆடவரின் பலதார மணத்தைச் சங்கச் சமூகம் பாராட்டி ஏற்றுக்கொண்டதைச் சங்கப் பாடல்கள் (புறம். 209: 16-19, புறம். 224: 6-9) காட்டுகின்றன. ஆனால் கொண்ட கணவனால் புறக்கணிக்கப்பட்ட மகளிர், நீர் அருந்தியபின் வீசியெறியப்பட்ட பனை ஓலைக்குடையாக, சூடியபின் கழிக்கப்பட்ட பூவாக இழித்துரைக்கப்படுதல் (கலி.23: 8-15) எண்ணத்தக்கது.

15. ஆடவரின் களியாட்டிற்குப் பெண்டிர், கள்ளெடுத்துதவுதல் (பொருந. 85.89, புறம். 397: 6-8) இயல்பான தொன்றாகக் காட்டப்படுகிறது. புலவர், புரவலரை வாழ்த்தும் பொழுது,

விலங்கிழை மகளிர் பொலங்கலத்து ஏந்திய
மனம்கமழ் தேறல் மடுப்ப நாளும்
மகிழ்ந்து இனிது உறைமதி பெரும
விரைந்து நீ பெற்ற நல்லூழியையே (மது 778 - 782)

என வாழ்த்துவது பெரிதும் சிந்திக்கத்தக்கது. பெண் ஆணின் போகப் பொருளாகக் கருதப்பட்டதையே இது உணர்த்துகிறது. ஆங்காங்கே தென்படும் பெண்ணைப் பற்றிய எல்லை மீறிய வருணனைகளும் (பொருந. 6-8, 35 - 41) இதனை உறுதிப்படுத்துகின்றன.

16. இல்வாழ்வில் ஒன்றிய ஆடவன் மறைந்தால் பெண்டிர் தன் திருமண அடையாளச் சின்னமான இழைகளை களைகின்றனர் (புறம் 224:17) அத்துடன் அமையாது தன் கூந்தல் களைந்து (புறம். 261 : 13-19) சுவையற்ற மிக எளிய உணவை நேரம் தவறி உண்டு (புறம் 248) பரல்கள் பொதிந்த இடத்தில் பாயுமின்றித் தூங்கும் (புறம். 247:9) துன்பநிலை மனித நேயம் உடைய யாரையும் வருத்துவதாகும். இவர், தம் வாழ்வினை நூல் நூற்றுக் கழிக்க வேண்டிய கட்டாயத்தின் பாற்பட்டதால் பருத்திப் பெண்டாகின்றனர் (புறம். 326).

பாதுகாப்பார் அற்ற ஆளில் பெண்டுமாகின்றனர் (நற். 353: 1-2) இறந்துபட்ட கணவன் இவருக்கு வழிபாட்டிற் குரியவனாவதையும் (புறம். 234:1-4) அறிய முடிகிறது.

இவ்வுயவல் வாழ்க்கை மிகக் கொடுமையானதாக அமைந்ததனால் கணவனுடன் உடன்கட்டை ஏறினர் (புறம். 62:13-15; புறம். 240: 3-6) அல்லது அவனது ஈமத்தாழியுள் புகுந்து (புறம். 256) உயிர்விட்டனர்.

17. பெண்டிர்க்குக் கற்பொழுக்கம்[9] வலியுறுத்தப்பட, ஆடவர் பரத்தமையில் திளைத்த பொழுது கண்டிக்கப்படவில்லை. மாறாக,

'சேக்கை இனியார் பால் செல்வான் பனையாளால்
காக்கை கடிந்து ஒழுகல் கூடுமோ கூடா
தகவுடை மங்கையர் சான்றாண்மை சான்றார்

(பரி.20: 86-88)

எனப் பாதிக்கப்பட்ட மகளிர், பதிவத மாதராகி (பரி: 10:23) அதனை இயல்பாக எண்ணி ஏற்றுக்கொள்ளுமாறு சங்கச் சமூகம் அறிவுறுத்தியுள்ளது.

18. ஆடவர் பரத்தையிற் பிரிந்த பொழுது, பெண்டிரின் ஏவல் மகளிர் நிகழ்த்தும் செவ்வணி (பரி. 20-22) நிகழ்வு, பெண்டிரின் மதிப்புக் குறைத்தலில் ஆழமாக நோக்கத்தக்க தாகும். இது சங்கச் சமூகத்தில் பெண்டிர், ஆடவருக்கு வாரிசுகளைப் பெற்றுத் தரும் கருவியாகக் கருதப் பட்டனரோ என்ற எண்ணத்தை எழுப்புகிறது. இவ்வொரு சான்றுதவிர வேறு, சங்கப்பாக்களில் அறிய வராமை அக் காலத்திலேயே இவ்வழக்கம் கடியப்பட்டிருக்கலாம் என்ற உணர்வையும் தருகிறது.

19. இல்லப் பொறுப்பின் பெரும்பகுதியைப் பெண்டிரே கவனித்துக் கொண்டபோதிலும், நாடி வந்த இரவலருக்குப் பரிசில் அளித்தல் ஆடவர் உரிமையாகக் காணப்படுகிறது. பெண்டிருக்கு அஃது இன்மையை, வள்ளல் பேகனின் மனைவி கண்ணகி, அவன் பிரிவால் பொருள் வேண்டிவந்த புலவர்க்குப் பொருள் அளிக்க இயலாத துயரத்தால் வருந்தி அழுவதில் பெறலாம் (புறம். 143) 'புன்தலை மடப்பிடி பரிசிலாகப் பெண்டிரும் தம்பதம் கொடுக்கும்' (புறம். 151: 4-5) என்பது சிறப்பு நிலை காட்டுவது என்பதுடன், இது தவிர வேறு சான்று இல்லை என்பதும் நோக்கத்தக்கது. பெருஞ்சித்திரனார் தன் மனைவியிடம் 'என்னொடும்

சூழாது.... நீயும் எல்லோர்க்கும் கொடுமதி' (புறம். 153: 5-7) என மொழிதலும், ஈகையில் ஆடவர் கையே முன்னின்றதை வலியுறுத்துகிறது.

20. தென்புல வாழ்நராகிய முன்னோருக்குச் செய்யும் வழிபாட்டு உரிமையும் பெண்டிர்க்கு மறுக்கப்பட்டு ஆடவர்க்கு மட்டு மாக விதித்திருப்பதும் (புறம். 9: 3-4) பெண்டிர் ஆட வரோடான சமநிலையிலிருந்து கீழிறக்கப்பட்டதை உணர்த்துகிறது.

21. பகைவரை அவமதித்தலின் ஒரு கூறாக அவரைப் பெண்ணாக உருவகித்தலும் இங்குச் சுட்டத்தக்கது. 'செருப்புகன்றெடுத்த சேணுயர் நெடுங்கொடி வரிப்புனை பந்தொடு பாவைதூங்க' (67 - 69) என இதனைத் திருமுருகாற்றுப்படை காட்டுகிறது. இச்செயல் ஆடவர் பெண்டிரை விட உயர்ந்தவர் என்ற உணர்வின் வெளிப்பாடாகும். போர்க்களத்தருகில் இருந்து பாதுகாப்பான இடத்திற்குச் செல்ல வேண்டியவருள் ஒருவராகப் பெண்டிர் சுட்டப்படுதலும் (புறம் 9: 1-6) இங்கு இணைத்துக் காணத்தக்கது. போரிடலுக்கு மகளிர் ஏற்புடையர் அல்லர் என்பது இதன் கருத்தாகும். இதற்குப் பிறிதொரு காரணமும் கற்பிப்பர்[10].

பெண்டிர்க்கு அளிக்கப்பட்ட மதிப்பை விட அவர்தம் மதிப்பைக் குறைத்தலே சங்கச் சமூகத்தில் மிகுதியாக நிலவி யதை இவை காட்டுகின்றன.

### சில தனிக் கூறுகள்

சங்கப் பெண்டிரின் நிலையை உறுதி செய்ய உதவும் காரணிகளாகக் கருதப்படுவன இங்கு நோக்கப்படுகின்றன.

### உடன் போக்கு

தான் விரும்பியவனைக் கைபிடிக்க வாய்ப்பேயில்லாத சூழலில் பெண், உடன்போக்கிற்குத் தள்ளப்படுகிறாள். மனம் எண்ணியவனுடன் வாழ்வதையே கற்பாகச் சங்கச்சமூகம் அறிவுறுத்தியதால் (ஐங். 371: 3-5) அக் கற்பு நெறி காக்க உடன் போகிறாள், அயலவர் மணம்பேசல் (அகம் 369:1)12, களவில் மெய்யுறு புணர்ச்சி நிகழ்ந்தது (குறுந்.318), பெற்றோர் எதிர்ப்பு (ஐங். 385) என்பன இதற்குக் காரணங்களாகின்றன. அவ் உடன் போக்கிலும், எதிர்ப்பு தொடர்வதை, 'அமர்வரின் அஞ்சேன் பெயர்க்குவென், நுமர்வரின் மறைகுவென் மாஅயோளே' (நற். 362: 9-10) என்பது காட்டுகின்றது.

இதன் பின்னும் தடுத்தலை அன்றைய சமூகம் ஏற்றுக் கொள்ளவில்லை. திருமணம் நிகழ்த்துவித்தலே பெற்றோர் கடமை என்று கருதியதால் உடன் போகியோர் மீண்டும் பெண் வீடு திரும்புகின்றனர். (பெண் தன் 'இருத்தல் இல்லத்து நீதனிச் சேறல் இளிவரல்' (பரி. 11:44) என்று எண்ணப்பட்டதால், திருமணம் நிகழ்த்துவித்து உரிய மதிப்புடன் அனுப்பி வைத்தற் பொருட்டும் நற்றாய் அல்லது செவிலி உடன்போகியவளைப் பின் தொடர்கின்றனர் என எண்ணவும் இடனுண்டு. எனவே உடன்போக்கு என்பது பெண்ணின் தன் விருப்ப நிறைவேற்றம் என்பதைவிட சங்கச் சமூகக் கற்புக் கோட்பாடே முதன்மைக் காரணம் எனவும் கருதலாம்.

***சிலம்பு கழித்தல்***

திருமண வாழ்வின் போது பெண்ணுக்கு அவள் காலில் உள்ள சிலம்பு கழற்றப்படுவது சிறப்பானதொரு நிகழ்ச்சியாகச் சங்கச் சமூகம் காட்டுகிறது. (அகம். 385 : 16-18) ஒரு பெண் திருமணம் ஆனவள் என்பதை அறிவிக்கும் ஒரு நிகழ்வாக, இன்றியமையா விழாவாக இதனைக் கருதுவர்[11]. இங்கு, 'மாலை அணிய விலை தந்தான் மாதர் நின் கால சிலம்பும் கழற்றுவான்' (பரி. 20: 79-80) எனப் பரத்தை யொருத்திச் சூளுரைப்பதைக் காணின் திருமணத்தின் பின்னும் பெண் சிலம்பு அணிந்திருந்தமை தெளிவாகும்.

கிடைக்கும் தரவுகளைக் கொண்டு மேலும் ஆழ்ந்து பார்த்தால் சிலம்பு கழித்தல் என்பது பெண்ணின் தாய்வீட்டில் நிகழ வேண்டும் (அகம். 315: 6-8); அதற்குத் தடை ஏற்படின் கணவன் இல்லிலாவது நடத்தப்பட வேண்டும் என்பது (நற். 279: 10-11) பெறப்படுகிறது. இங்கு, தன் இல் துறந்து தலைவன் இல் ஏகுவாளைப் 'பிறள்' - பிறருக்கு உரியவள் (அகம், 35: 10-11, அகம். 189:9-10) என அவள் வீட்டார் கூறுவதையும் இணைத்துப் பார்ப்பின் பிறதொரு கருத்துப் புலனாகிறது.

திருமணத்தின் பின் பெண்ணின் வாழ்வு முழுமையும் அவளது கணவனுடனேயே பின்னிப் பிணைந்து அவன் இல்லப் பொறுப்புக்குரியவளாகப் பேரில் கிழத்தி ஆதல் (அகம். 86:19) வெளிப்படை. எனவே பெண் தன் தாய் வீடு மீது கொண்ட பற்றினை முழுமையாகக் களைந்து அவன் வீடு செல்கிறாள் என்பதனைக் குறிக்கும் குறியீடாக இச் சிலம்பு கழித்தலைக் கருதலாம். துணைவன் இல்லப் பொறுப்பேற்றத்திற்குரிய அறி குறியாக அவன் தரும் சிலம்பு அணிந்திருக்கலாம். திருமணத்தின்

பின் ஒரு பெண் தன் தாய் வீட்டிற்குச் சென்றதற்கான குறிப்பு சங்கப் பாக்களில் தென்படாமையும், மகள் இல்லத்திற்குச் செவிலி மட்டும் சென்று (ஐங். 400-410) வருகிறாளேயன்றி நற்றாயோ, தந்தையோ உடன்பிறப்போ சென்றதாகக் குறிப்பின்மையும் இக்கருத்தை அரண் செய்கின்றன.

''வெண்முத்தம் அணிபவர்க்கு அல்லதை
நீருளே பிறப்பினும் நீர்க்கு அவைதாம் என் செய்யும்
தேருங்கால் நும்மகள் நுமக்கு ஆங்கனையளே''

(கலி. 9: 15-17)

எனும் சங்கப்பாவும் இதனை வலியுறுத்தக் காணலாம்.

**கல்வி**

சங்கச் சமூகத்தில் கல்வியின் பெருமை உணரப்பட்டிருந்தது என்பதில் ஐயமில்லை (புறம். 183). அதில் பெண்டிர் நிலை குறித்தறிய போதுமான தரவுகள் இல்லை. கிடைக்கின்ற செய்திகள், புலமை வாய்ந்த பெண்மக்களைக் காட்டுக்கின்றன. ந. சஞ்சீவியின், 'சங்க இலக்கிய ஆராய்ச்சி அட்டவணைகள்'[12] பெண்பாற் புலவர் என உறுதிபடக் கூறக்கூடியவர்களாக முப்பதின்மரைக் காட்டுகிறது. இவர்களுள் மிக அதிகமான (59) பாடல்களைப் பாடியுள்ள ஔவையாரே புறநானூற்றுள்ளும் மிகுதியாகப் பாடிய புலவர் என்ற சிறப்பினைப் பெண்களுக்குப் பெற்றுத் தருகிறார். பதிற்றுப்பத்துள் ஆறாம்பத்தைப் பாடிய காக்கைப்பாடினி நச்செள்ளையாரும் குறிக்கத்தக்கவராவார். இப்புலவர் அரசரினம் (பூதப் பாண்டியன் பெருங்கோப்பெண்டு) முதல் சாதாரண குடிமக்கள் (வெண்ணிக் குயத்தியார், குறமகள் இளவெயினி) வரையிலாக அமைந்திருப்பதும் சுட்டத் தக்கது.

சங்கப் பாக்கள் 2379இல் 154 மட்டுமே இவரால் பாடப் பட்டன என்பதும் கருதற்பாலது. அவை அகப்பாடல் 87, புறப்பாடல் 67 ஆக அமைகின்றன. எண்ணிக்கையளவில் இவை மிகக் குறைவுபடினும் அன்று கல்வியில் வல்ல பெண்டிர் பலர் இருந்ததும், ஔவையாரை நோக்க ஆடவருக்கு இணையான சிறப்புப் பெற்றிருந்ததையும் அறிய முடிகிறது. தாயுடன் இணைத்து அஞ்சியத்தை மகள் நாகையார் (அகம். 352) என்று ஒரு பெண்புல்வர் பெயர் பெற்றிருப்பதும் நோக்கத்தக்கது.

அன்றைய, 'மகளிர் கற்ற கல்வி அவர்தம் உடலுறுப்பு களுக்குப் பயிற்சி தருவதாகவும் திருமணத்திற்குப் பிறகு இல்லற வாழ்வில் ஈடுபடுவதற்குத் துணை செய்யும் கருவியாகவும்

அமைந்தது. குடும்பக் கல்வியினைத் தாயிடமும் செவிலித் தாயிடமும் தோழியிடமும் கற்றாள்... ஆடவர்க்குரிய கல்வி வேறு; மகளிர்க்கு வேண்டிய கல்வி வேறு என்று கருத் துரைப்பர்[13]. ஆனால் இதற்கு மேற்பட்ட நிலையில் ஓரளவு அடிப்படைக் கல்வியைப் பெண்டிர் பெற்றிருந்தனர் என்பதை, தமது பொழுதுபோக்குகளில் ஒன்றாக, பறவைக்கூட்டம் (நற். *159: 3-4*) உப்பு வண்டிகள் (புறம். *117*), கடலில் செல்லும் திமில்கள் (நற். *372: 10-13*) ஆகியவற்றை எண்ணுதல் கொண்டு அறியலாம். கிடைத்த சூழலுக்கு ஏற்ப மேற்கல்வியில் தேறியிருத்தல் வேண்டும்.

***பரத்தமை***

சங்கச்சமூகத்தில் பரந்து காணப்பட்டதொரு குறையாகப் பரத்தமை அமைகிறது. பரத்தமை பெற்ற வருவாயில் வாழக்கை நடத்தியதால் பரத்தையரைத் தொழிலாளராகக் காட்டுவர்[14]. இவர் பற்றித் தனித்த விரிந்தளவிலான ஆய்வு தேவைப் படுவதால், இக்கட்டுரைக்கான தேவையளவில் மட்டும் சுருக்க மாகச் சிலக் கருத்துகள் முன் வைக்கப்படுகின்றன. ஒருத்திக்கு ஒருவன் என்ற விதிமுறை சமூகத்துள் புகுத்தப்பட்டபொழுது, உடனடியாக அதனை ஏற்க இயலாத, விரும்பாத மகளிரைப் பிறரிடமிருந்து வேறுபடுத்திக் காட்டப் 'பரத்தை' என அழைத் திருக்கலாம். காலப்போக்கில், குலமகளிர் போன்று வாழவிரும்பிய நிலையில், தன்னை விரும்பி ஏற்றுக்கொண்ட ஆடவனுடன் மட்டும் வாழ்க்கை நடத்திக் 'காமக் கிழத்தியர்' ஆயினர் போலும். இவரை ஆடவர் மணஞ் செய்து கொண்டனர் (கலி. *82: 9-24*).

பரத்தை, தன்னை விரும்பும் ஆடவன் இல்லிற்கே வரல் (கலி. *90: 10-19*) அவன் புதல்வன் மீது உரிமை கொண்டு பாராட்டுதல் (கலி. *86: 11-24*) பரத்தமை கொண்டோனின் பெண்டும் பரத்தையும் ஒருவருக்கொருவர் உறவுமுறை கூறிக் கொள்ளுதல் (அகம் *386: 8-15*), அகம் *16: 6-16*) தனித்தும் பொது விடத்திலும் ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக்கொள்ளுதல் (ஐங். *68: 3-4*, பரி. *20: 33-95*). தலைவன் மீது தலைவியிடமே வந்து குற்றஞ்சாட்டுதல் (கலி. *77: 12-15*) ஆகிய காட்சிகள், பரத்தமை மறை ஒழுக்காக அன்றிப் பலரறி வினையாக அமைவதைச் சுட்டுகின்றன.

இப்பரத்தமை சங்கச் சமூகத்தில் இரட்டை நிலை காட்டுகிறது. ஆடவர் இயல்பாக ஒருபுறம் ஏற்றுக் கொள்வதும்

மறுபுறம் 'தீதில் நெஞ்சத்துக் காதல் கொள்ளாப் பல்லிரும் கூந்தல் மகளிர் ஒல்லா முயக்கிடைக் குழைக என் தாரே' (புறம். 73: 12-14) என இகழ்ந்துரைப்பதும் முரண்பாடாகின்றது.

ஆண், பெண் இருபாலர் தொடர்பால் நிகழும். இப் பரத்தமையில் பெண் மட்டும் 'பரத்தை' என இகழப்படுவது எண்ணத்தக்கது. மற்றும்

பொய்ப் போர்த்துப் பான்தலையிட்ட பலவல் புலையனைத்
தூண்டிலாவிட்டுத் துடக்கித்தான் வேண்டியார்
நெஞ்சம் பிணித்தல் தொழிலாத் திருதரும் (கலி. 85. 22-24)

ஆடவரைக் குற்றஞ் சாட்டாது, பெண்ணை மட்டும்

மாயப் பொய்பல கூட்டிக் கலவுக் கரந்து
சேயரும் நணியரும் நலன் நயந்து வந்து
இளம்பல் செல்வர் வளந்தப வாங்கி
நுண்தா துண்டு வறும்பூத் துறக்கும்
மென்சிறை வண்டினம் மானப் புணர்ந்தோர் (மது. 570-574)

எனப் பழித்துரைத்தலும் இதன் மற்றொரு இரட்டை நிலையாகிறது. மற்றும் இத்தொழிற் பெண்டிரின் மகவிற்கும் சமூகத்தில் உரிய மதிப்பளிக்கப்படவில்லை (நற். 330 : 8-11) எனத் தெரிகிறது.

இவற்றை நோக்க, 'அடிக்கடிப் போர்கள் நிகழ்ந்தமையால் ஆடவர் பலர் போரில் மடிந்தனர். அதன் விளைவாக நாட்டில் ஆடவர் தொகை குறைந்தது. பெண்டிர் தொகை மிகுதியாயிற்று. சங்க காலத்தில் ஒருவன் ஒருத்தியைத் திருமணம் செய்து கொள்ளும் முறையே இருந்தது. இதனால் திருமணம் செய்து கொள்ள வாய்ப்பற்ற மகளிர் பரத்தையர் ஆகும் நிலை உண்டாயிற்று எனலாம்[15] எனும் கூற்று முரண்படக் காணலாம்.

*அரச மகளிர்*

சமூகத்தில் பொருளாதார நிலையில் உயர்வு பெற்றிருந்த அரச மகளிர் பற்றிச் சங்கப்பாக்கள் சில குறிப்புகள் அளிக் கின்றன. பொது நிலையில் பிற பெண்டிர் ஒப்பவே அமை கின்றனர் (புறம். 166: 13-18) (புறம். 144) எனினும் அரச மகளிர் என்ற தகுதி காரணமாகச் சில தனித்த மதிப்பிழத்தல்களையும் இவர் அடைந்துள்ளனர். அரசன் போரில் தோல்வியடைந்தால் மாற்றானால் துன்புறுத்தப்பட்டனர் (பதி. 8ம் பதிகம் 4-10). இப்பெண்டிரது கூந்தலைக் கொய்து, அதில் கயிறு திரித்து, அதனால் யானைகளைக் கட்டியிழுத்து (பதி 5ஆம் பதிகம் 15 - 17)

அவமதிக்கப்பட்டனர். கொண்டி மகளிராகிச் சிறைபிடிக்கப்பட்டு வெற்றிபெற்றோர் நாட்டுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அங்கு ஊர்ப்பொதுமன்றத்துக் கோயில்களில் விளக்கேற்றுதல் (பட். 246-249) முதலான பணிகளைச் செய்யும் குற்றேவல் மகளிராயினர். இவையே அரச மகளிரை உடன்கட்டை ஏறத் தூண்டியிருக்கலாம். அரச மகளிராயினும் சமூகத்தின் பொது விதிகள் அவர்களுக்கும் ஏற்புடையதே என்பதை உடன்கட்டை ஏறிய பெருங்கோப்பெண்டிர் பாடல் (புறம். 246) வலியுறுத்தும்.

*விதி விலக்குகள்*

சமூகத்தின் எந்த விதிமுறைகளும் எல்லோராலும் ஒன்றே போல் போற்றப்படுவதில்லை. அவற்றினின்றும் முரண்பட்டுச் செயல்படுதலும் உண்டு. அவ்வகையில் சங்கச் சமூகக் கட்டுப் பாடுகளை மீறிய மிகச் சில பெண்கள் பற்றிய குறிப்புகளைச் சங்கப் பாக்கள் அளித்துள்ளன. அரிதான நிகழ்வுகளையும் விதிவிலக்குகள் எனக் கொள்ளலாம். அவர்கள் இங்குச் சுட்டப்படுகிறார்கள்.

வயலில் பசு மேய்ந்தது என்று கோசர் அதன் உரிமை யாளரான, அன்னிமிஞிலியின் தந்தை கண்களைப் பறித்தனர். தண்டனை என்ற பெயரிலான இக்கொடுமையை அப்பெண் எதிர்த்துப் கோசரைப் பழிவாங்கியதைச் சங்கப் பாடல் (அகம் 262 : 4-12) பாராட்டுகின்றது. ஆணுக்குப் பெண் அடங்காமையை இது காட்டுகிறது. ஏதிலாளனின் தொல்லை காரணமாகத் திருமாவுண்ணி என்ற பெண் தன் ஒரு நகிலை அறுத்துக் கொண்டாள். ஆதலின் கற்பிற்கு இலக்கணமாகப் போற்றப் பட்டாள் (நற். 216 : 8-11). இவளின் துணிவு விதிவிலக்காகிறது.

ஆடவரைத் தேடிப் பெண்டிர் செல்லுதல் கூடாது என்பதை மீறி வெள்ளிவீதி சுரம்பல கடந்ததும் காணப்படுகிறது (அகம். 147: 8-10). தன் துணைவன் ஆட்டனத்தியைத் தேடித்தேடி அலைந்து கண்டுபிடித்த ஆதிமந்தியை ஒன்றுக்கு மேற்பட்ட பாடல்கள் (அகம் 236 : 14-20, குறுந். 31) காட்டுகின்றன. ஆதிமந்தியிடம் ஆட்டனத்தியைக் கண்டு ஒப்படைத்த பெண் மருதியென்றும், அதன் பின் அவள் தன்னைக் கடலுள் மாய்த்துக் கொண்டாள் என்றும் (அகம். 222: 5-12) அறிய முடிகிறது. ஆதிமந்தியின் இக்கடும் முயற்சியும் அரிதாக நிகழக்கூடிய தாகலின் சிறப்புப் பெற்றுள்ளது. நட்பின் பாலா அன்றித் தொழில் சார்பிலா என்று ஐயமறத் தெளிவாகக் கூற இயலா விடினும் ஔவையார் அதியமானுக்காகத் தொண்டைமான் இளந்திரையனிடம் தூது சென்றதும் தனிச்சிறப்புடையதே.

*எஞ்சிய குறிப்புகள்*

1. திருமணத்திற்கு முன் தழையுடை அணிவதில் பெண்டிர் காட்டும் விழைவு (நற். 123 : 5-3) திருமணத்தின் பின் இல்லை.
2. தந்தை யில்லாவிடில் தமையன்மார் பொறுப்பில் உள்ளனர் (அகம். 320 : 1-5, சிறு 190-195, குறுந். 335; 6, ஐங். 362 : 2)
3. தொழிலும் பொழுதுபோக்கும் பெரும்பாலான இடங்களில் இணைந்து காணப்படுகின்றன (அகம். 20 : 1-10, பதி 73: 4-7).
4. சமூகம் தமக்கு விதித்த கட்டுப்பாடுகளைப் பெண்டிர் விரும்பி ஏற்றுக் கொண்டதைக் 'கொல்லேற்றுக்கோடு அஞ்சுவானை மறுமையும் புல்லாளே ஆயமகள்' (கலி. 103 ; 63 - 64); ஈமத்தீயையும் குளிர்ப்பொய்கையையும் ஒன்றாகக் கருதிய பெருங்கோப்பெண்டின் செயல் ஆகியன காட்டுகின்றன.
5. பெண்டிர் நலனுண்டு ஏற்க மறுக்கும் அறனிலாளரை ஊர்ப்பெரியோர் தண்டித்துள்ளனர் (அகம் 256 ; 14-21).
6. கருத்து வேறுபாடு காரணமாகப் பெண்டிர் ஆடவரால் கை விடப்பட்டுப் பெற்றோரிடம் திரும்பியிருக்கலாமோ என்ற எண்ணம் 'தணந்தனை ஆயின் எம் இல் உய்த்துக்கொடுமோ' (குறுந். 354) என்பதால் எழுகிறது.
7. தலைவியை ஒத்த சிறப்பில் தோழி வாழ்ந்திருந்தாலும் தோழி, செவிலியாகிப் பின் அவள் மகள் தோழி, செவிலி எனத் தொடரும் மரபு 'கொத்தடிமைக்கு' வித்தோ என்ற ஐயத்தைத் தருகிறது.

*பெண்டிர் ஆடவர் ஒப்புநோக்கல்*

சங்கச் சமூகப் பெண்டிரின் நிலையை அறுதியிடுவதற்கு அக்காலத்திய பெண்டிர், ஆடவர் இயல்பு குறித்து ஒப்பு நோக்கல் இன்றியமையாததாகிறது. முன்பகுதிகளில் ஆங்காங்கே இவ்வொப்பீடு அமைவதாலும், விரிவஞ்சியும் இப்பகுதி கீழே அட்டவணையாகத் தரப்படுகிறது.

*பெண்டிர் ஆடவர் ஒப்புநோக்கு அட்டவணை*

| கூறுகள் | பெண்டிர் | ஆடவர் |
|---|---|---|
| பிறப்பு | மகிழ்வு | சிறப்பு<br>இன்றியமையாதது |
| குழவிப்பருவம் | ------- | (ஐம்படை)த்தாலி<br>சிறுதேர் |

| கூறுகள் | பெண்டிர் | ஆடவர் |
| --- | --- | --- |
| இளமை | தழையுடை | -- |
| திருமணம் | பெற்றோர் உடன்பாட்டில் தன் விருப்பம், பெற்றோர் விருப்பம் | தன்விருப்பம், ஏறுதழுவல் தான் சூட்டிய பொருளில் பெண்ணுக்கு விலை தரல் |
| கடமை | குழந்தை வளர்ப்பு விருந்தோம்பல், இல்லப்பொறுப்பு பொருளீட்டல் | பொருளீட்டல் இல்லம், சுற்றம் பேணுதல் நாடு காத்தல் |
| உரிமை | | முன்னோர் பெயர் கொளல் முன்னோர் வழிபாடு செய்தல் பலதாரமணம், மடல் பரிசில் அளித்தல் |
| சிறப்பு | திருமணம் நிகழ்த்து வித்தல் மகன் பெற்றால் | திருமண முடிவெடுத்தல், ஆட்சிப் பொறுப்பு, நீதிவழங்கல், நடுகல், பாடல் பெறல், துறவு |
| இயல்பு | அலங்கரித்தல் முதல் அனைத் திலும் கணவன் உணர்வுடன் அவனே உயிராக | தன் விருப்பச் செயற்பாட்டினர் |
| தொழில் | தினைப்புனம், வயல் காத்தல், மீன், நினம் உணக்குதல், மோர், நெய், உப்பு, மீன், பூ விற்றல், இல்லம் சார்ந்த பணிகள் கலைஞர், குற்றேவல் | உழவுத்தொழில், வேட்டையாடல், மீன்பிடித்தல், வணிகம், காவல், போர், கலைஞர், தச்சு, கொல்லத் தொழில், விலங்கு களை இயக்குதல் குற்றேவல் |

| கூறுகள் | பெண்டிர் | ஆடவர் |
|---|---|---|
| சடங்கு | இழையணிதல், தலைவன் பூச்சூடல், சிலம்பு கழற்றுதல் | ....... |
| நோன்பு | தைந்நீராடல் | ...... |
| வழிபாடு | கணவனுக்காக | பொதுமை |
| கட்டுப்பாடு | காமம் வெளியிடல் கூடாது, இற்செறிப்பு, மடல் ஏறக் கூடாது, கற்பு, கைம்மை | |
| பொழுதுபோக்கு | ஆடல், பாடல், கிளிவளர்ப்பு, நீர்வளம், மலைவளம், காணல் | ஆடல், பாடல், போர்ப் பயிற்சி, நீர்வளம், மலைவளம் காணல் |
| மதிப்புக் குறைத்தல் | அலர், வெறியாட்டு, கைம்மை, உடன்கட்டை | போரில் புறமிடல், இல்லப் புறக்கணிப்பு உள்ளது சிதைத்தல். |

பெண்டிர் கட்டுப்பாடுகளுடனும் உரிமையற்றும் வாழ்தலும், மாறாக ஆடவர் உரிமைகள் பலவுடன் கட்டுப்பாடுகளற்ற வாழ்க்கை மேற்கொள்வதும் ஏற்றத்தாழ்வுகள் இருப்பது வெளிப் படை. ஆடவர் தொடர்பான முழுச் செய்திகளையும் தொகுத்து முறைபடக் காணும் பொழுது சில மாற்றங்கள் ஏற்படுதற்கும் இடமுண்டு.

***சங்கச் சமூகப் பெண்டிர் நிலை***

''அக்காலத்துச் சமுதாயம் அவளுக்கு எவ்வளவு கவுரவமும் பெருமையும்தர உடன்பட்டதோ அதற்கு உடன்பட்டுப் பெண் ஆணின் உடைமையாகக் கருதப்பட்டாள்[16]. ''இந்தச் சூழலில் தன்னுரிமை நிறைவோடு எவரையும் சாராது வாழ்வதற்குப் பெண்ணுக்கு வாய்ப்பில்லை[17]. ''தூய்மை, கற்பு, மற்றும் புனிதத்தின் சாயல்களுடன் கூடிய தாய் உருவகம் குறிப்பிட்ட ஒருவகைத் தமிழ்ப் பெண்ணின் தொடர்ச்சிக்காக இருப்பது''[18] ''கணவனை இழந்தவர்களையும் கணவனைப் பிரிந்தவர்களை யும் ஒரு நிகராகக் கணிக்கும் சங்கக் காலச் சமுதாயப் பார்வை''[19] எனும் இக்கருத்துரைகள் ஒப்புக்கொள்ளக்கூடியனவாகும்.

சங்கப் பெண்டிர் நிலையாக, கருத்துரைகள் தவிர ஆய்வாளர் கருத்தில் புலப்படுவன.

1. பெண்மை வெறுக்கப்படவில்லை.
2. குறிப்பிட்ட பருவம் வரை எவ்விதக்கட்டுப்பாடும் இல்லை.
3. பெண்ணுக்குத் தரப்படும் மதிப்புகள் அவளது துணைவனைச் சார்ந்தே அமைந்தன.
4. அளிக்கப்பட்ட மதிப்புகளை விட மதிப்புக்குறைவுகளே மிகுதி.
5. பெண்ணின் செயற்பாடுகள் அனைத்தும் ஆண் எனும் வட்டத்துக்குள்ளேயே அமைந்திருந்தன. அதுவே வற்புறுத்தப் பட்டது.
6. கட்டுப்பாடுகள் பெண்ணுக்கும் உரிமை ஆணுக்கும் என்ற நிலை காணப்படுகிறது.
7. எல்லாப் பருவங்களிலும் பெண் தன் சூழலுக்கேற்ற பணி களை நிறைவேற்றி இல்லப் பொறுப்பேற்றிருந்தாலும் தலைமைப் பொறுப்பில்லை.
8. பெண்டிர் தமக்கு விதிக்கப்பட்ட விதிகளுக்கு உடன்பட்டனரே யன்றி எதிர்ப்புக் குரல் எழுப்பவில்லை.
9. பொழுதுபோக்குகளிலும், கலைஞரிடையேயும் வேறுபாடு காண இயலவில்லை.
10. கல்வியறிவு புறக்கணிக்கப்படவில்லை.

சுருங்கக் கூறின், பெண்டிர் மென்மையானவர்; மக்கட் பேற்றிற்கு இன்றியமையாதவர்; ஆடவரின் அன்பிற்குரியவர்; அறியாமை கொண்டவர்; பொறுமை நிறைந்தவர் எனும் கணிப்பில் அவரைப் பாதுகாத்ததைத் தனது பொறுப்பாகக் கருதினர் ஆடவர். எனவே அன்பாலும் பரிவாலும் பெண்டிரைத் தம் ஆளுகைக்குட்படுத்தினர். அதன் நிலைபேற்றிற்காகக் கடமை களையும் கட்டுப்பாடுகளையும் வரையறுத்தனர் என்பது சங்கச் சமூகப் பெண்டிர் நிலை உணர்த்தும் கருத்தாகும். இதற்குப் பெண்டிரிடையே எதிர்க்குரல் எழாமையால் அன்பும் பரிவும் சிறுகச் சிறுக ஆணவமும் ஆதிக்கமுமாக மாறிப் பெண்ணை அடிமைப்படுத்தும் முயற்சி தொடங்கியது.

### முடிப்புரை

தமிழறிஞர் மு. வரதராசனார் (கலித்தொகைச் சொற் பொழிவுகள் பக். 63-54) வ.சுப. மாணிக்கனார் (தமிழ்க்காதல் ப.152) திரு.வி.கல்யாணசுந்தரனார் (பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத்துணை, (பக். 39-40) ஆகியோர்

போற்றுமளவிற்குப் பெண்டிர் உயர்ந்த நிலையினராகக் காணப் படவில்லை. பெண்டிர், ஆடவரின் உரிமையாக, உடைமை யாகக் கருதப்பட்டனர். 'கணவனே கண்கண்ட தெய்வம்' என்ற பிற்காலச் சமூக அமைப்பிற்கான வித்தும், அடித்தளமும் சங்கச் சமூகத்தில் காணப்படுகின்றன.

பெண்ணை ஆளுபவனாக ஆண் இருப்பினும் அதில் பெண்ணுக்கு ஓரளவு மதிப்பும் மரியாதையும் அளித்துள்ளான். ஒரு பருந்துப்பார்வை கொள்ளும் பொழுது, பெண்ணுக்குத் தரும் மதிப்பும், விதிக்கும் கட்டுப்பாடுகளும் காலந்தோறும் மாற்றம், தளர்வு, இறுக்கம் என வேறுபாடு கொள்கின்றன. ஆனால் ஆணின் தலைமைப் பொறுப்பில் மட்டும் மாற்றம் இல்லை.

தொல்காப்பியம் மற்றும் சங்கச் சமூகங்களுக்கிடையே பெண்டிர் நிலையில் மாற்றம் காண்பது தனி ஆய்விற்குரிய தாகும்.

'நோய்ப்பாலேன்' (நற்.107:10). 'தெறுவதம்ம இத்திணைப் பிறத்தல்லே' (குறுந். 45) எனும் சங்க மகள் கூற்றுகள் அவள் அன்று துன்பச் சுமையுடன் தான் வாழ்ந்தாள் என்பதை அறிவிக்கின்றன.

## குறிப்புகள்

1. இரா. பிரேமா, பெண்ணியம்; உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1994; ப. முன்னுரை.
2. அ) க. வெள்ளைவாரணன்; சங்க காலத் தமிழ்மக்கள்; நேஷனல் பப்ளிஷிங் கம்பெனி, சென்னை; கி.பி. 1950.
   ஆ) எஸ். இராமகிருஷ்ணன், இந்தியப் பண்பாடும் தமிழரும், மீனாட்சி புத்தக நிலையம், மதுரை; சூன், 1971.
   இ. ம.ரா.போ. குருசாமி, சங்க காலம்; மெர்க்குரி புத்தகக் கம்பெனி; கோயம்புத்தூர்; இ.ப. ஏப். 1971.
3. சி. பாலசுப்பிரமணியன்; சங்க கால மகளிர்; பாரி நிலையம், சென்னை, மு.ப. டிச. 1983.
4. கலைக்களஞ்சியம் - தொகுதி நான்கு: தமிழ்வளர்ச்சிக் கழகம், சென்னை, மு.ப. 1956: பக். 477 - 478.
5. அச்சமும் நாணும் மடனும் முந்துறுத்த
   நிச்சமும் பெண்பாற்குரிய என்ப (தொல். 1045)
   கற்பும் காமமும் நற்பால் ஒழுக்கமும்
   மெல்லியற்பொறையும் நிறையும் வல்லிதின்
   விருந்து புறந்தருதலும் சுற்றம் ஓம்பலும்
   பிறவும் அன்ன கிழவோள் மாண்புகள் (தொல்.1098)

6. சாந்தி சச்சிதானந்தம்; பெண்களின் சுவடுகளில்; சென்னை, மு.ப. மார்ச். 1989, ப.65.

7. க.ப. அறவாணன், தமிழ் இலக்கியச் சமூகவியல்; தமிழ்க் கோட்டம்; புதுச்சேரி, மு.ப. டிச. 1992; பக்.65-66.

8. வி.சி. சசிவல்லி: பண்டைத் தமிழர் தொழில்கள்: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை; மு.ப. நவ. 1989. பக் 310-313.

9. அகவன் மகளிர், விறலி எனும் இவர் களிறின்றிப் பிடியையே பரிசிலாகப் பெறலும், பிறமகளிர் பிடியின் மீதே ஊர்வதாகக் காட்டலும் (பரி. 12:27 தனித்துச் சிந்தித்தற்பாலன.

10. களவின் முடிவான கற்பினைப் பற்றி ஆராய்ந்த பொழுது, 'கற்பென்றால் தலைவியின் மனநிறை - மனத்தின்மை, தலைவன் மீது கொள்ளும் அன்பு, விருந்தோம்பல், தலைவனின் பரத்தையர் ஒழுக்கத்தைக் கடிந்து அவனைத் திருத்தி ஏற்றுக்கொண்டு குடும்பக் கட்டுக்கோப்பு கலையாமல் காத்தல்' என்றெல்லாம் கிடைத்த விளக்கங்களால் அச்சொல் சமுதாய அறத்தை வலியுறுத்த எழுந்ததே என அறிய முடிகிறது. இத்தகைய கற்பு வாழ்வு அமைவதையே சங்கத் தலைவியர் விரும்பினர்.

இராம. சண்முகம், சங்க இலக்கியங்களில் வரைவு கடாதலும் அறத்தொடு நிற்றலும், சரவணா பதிப்பகம், மதுரை, மு.ப. மே. 1993, ப.249.

11. போர் வீரத்தை போற்றும் சமுதாயத்தில் மகளிர் களம் புகுந்து விந்தை நிகழ்த்தும் உரம் உடையரே ஆயினும் போர்களில் பெண்கள் அழிந்தால் வமிசம் விளங்குவதற்கு வாய்ப்புக் குன்றும் என்பதை மறுப்பதற்கில்லை. ஆடவர் பலர் களத்தில் உயிரிழந்தனராயினும் பலதார மண முறையினால் அனைத்துப் பெண்களும் இல்லறம் ஓம்பி மக்கட் செல்வத்தை அடைவது சாத்தியம். பெண்களே களம் புகுந்து பல்லாயிரக்கணக்கில் மாண்டனர் எனின் மக்கள் செல்வப் பெருக்கத்துக்கு வழியில்லாது போகும்.

எஸ். இராமகிருஷ்ணன், இந்தியப் பண்பாடும், தமிழரும்; மீனாட்சி புத்தக நிலையம், மதுரை, சூன், 1971; பக். 311-312.

12. வ.சுப. மாணிக்கம், தமிழ்க்காதல், பாரிநிலையம், சென்னை, மு.ப. பிப். 1980. பக். 167.

13. ந. சஞ்சீவி, சங்க இலக்கிய ஆராய்ச்சி அட்டவணைகள்; சென்னைப் பல்கலைக்கழகம்; சென்னை, 1973, பக்.

14. சி. பாலசுப்பிரமணியன், சங்க கால மகளிர்; பாரி நிலையம், சென்னை, மு.ப. டிச. 1983, ப.18.

15. வி.சி. சசிவல்லி, முன் சுட்டிய நூல். பக். 296.

16. செ. பழனிச்சாமி, புறநானூற்றில் தமிழர் பண்பாடு, வாணிப் பதிப்பகம், கோவை, மு.ப. 1989, ப.73

17. ந. சுப்பிரமணியன், சங்க கால வாழ்வியல், என்.சி.பி.எச்; சென்னை, மு.ப. ஆக. 1986, ப. 35.

18. எஸ். இராமகிருஷ்ணன், முன்சுட்டியது, ப.313.

19. சி.எஸ். லட்சுமி (அம்பை) தமிழகத்தில் தாய், தாய்க்குலம் மற்றும் தாய் அரசியல்: பெண்ணியமும் கலை இலக்கியப் பிரதிகளும், காவ்யா, பெங்களூர், மு.ப. டிச. 1994. பக். 139.

20. ஆ.இராமகிருட்டிணன், அகத்திணை மாந்தர் - ஓர் ஆய்வு; சர்வோதய இலக்கியப் பண்ணை, மதுரை, சன. 1982, பக். 239.

## துணை நூல்கள்

அகநானூறு, ந.மு. வேங்கடசாமி நாட்டார், ரா. வேங்கடாசலம் பிள்ளை (உரை). பாகனேரி த.வை. தமிழ்ச்சங்கம், சென்னை, மறு.ப.1957.

ஐங்குறுநூறு மூலமும் பழைய உரையும்; டாக்டர் உ.வே. சாமிநாதையர் நூல் நிலையம், சென்னை, 1980.

கலித்தொகை மூலமும் நச்சினார்கினியர் உரையும் (இ.வை. அனந்தராமையர் அடிக்குறிப்புகளுடன்), தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1984.

குறுந்தொகை, உ.வே.சாமிநாதையர் (பதி) டாக்டர் உ.வே. சாமிநாதையர் நூல்நிலையம், சென்னை, நா.ப. 1962.

நற்றிணை மூலமும் உரையும், எச். வேங்கடராமன் (பதி): டாக்டர் உ.வே. சாமிநாதையர் நூல்நிலையம், சென்னை, மு.ப. 1989.

பத்துப்பாட்டு மூலமும் நச்சினார்க்கினியர் உரையும்: உ.வே. சாமிநாதையர் (பதி.) டாக்டர் உ.வே. சாமிநாதையர் நூல்நிலையம், சென்னை, எ.ப. 1974.

பதிற்றுப்பத்து மூலமும் பழைய உரையும், உ.வே. சாமிநாதையர் (பதி) டாக்டர். உ.வே. சாமிநாதையர் நூல்நிலையம், எ.ப. 1994.

பரிபாடல் மூலமும் பரிமேலழகர் உரையும், உ.வே. சாமிநாதையர் (பதி) டாக்டர். உ.வே. சாமிநாதையர் நூல் நிலையம், சென்னை ஐ.ப. 1980.

புறநானூறு மூலமும் பழைய உரையும், உ.வே. சாமிநாதையர் (பதி) டாக்டர் உ.வே. சாமிநாதையர் நூல்நிலையம், சென்னை ஏ.ப. 1971.

அகத்திணை மாந்தர் - ஓர் ஆய்வு, ஆ. இராமகிருட்டினன்; சார்வோதய இலக்கியப் பண்ணை, மதுரை, சன. 1982.

அகப்பொருள் பாடல்களில் தோழி ஈ.கோ. பாஸ்கரதாஸ்; திருமனை பப்ளிஷர்ஸ்; கோவை, அக. 1979.

இந்தியப் பண்பாடும், தமிழரும், எஸ். இராமகிருஷ்ணன், மீனாட்சி புத்திக நிலையம், மதுரை, சூன், 1971.

காலந்தோறும் பெண், ராஜம் கிருஷ்ணன், தாகம், சென்னை, மு.ப. 1989.

கலைக்களஞ்சியம் தொகுதி நான்கு, தமிழ்வளர்ச்சிக்கழகம், சென்னை, மு.ப. 1956.

சங்க இலக்கிய ஆராய்ச்சி அட்டவணைகள், ந. சஞ்சீவி, சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை, 1973.

சங்க இலக்கியங்களில் வரைவு கடாதலும் அறத்தொடு நிற்றலும், இராம. சண்முகம், சரவணா பதிப்பகம், மதுரை, மே. 1993.

சங்க இலக்கியத்தில் புறப்பொருள், கு.வெ. பாலசுப்பிரமணியன், மீரா பதிப்பகம், புதுக்கோட்டை, மு.ப. டிச. 1986.

சங்க இலக்கியம் - மருதம், இலா. குளோறியா சுந்தரமதி: கேரளப் பல்கலைக்கழகம், திருவனந்தபுரம், மு.ப. 1973.

சங்க காலத் தமிழ்மக்கள், க. வெள்ளைவாரணன், நேஷனல் பப்ளிஷிங் கம்பெனி, சென்னை, இ.ப. 1950.

சங்க காலம், ம.ரா.போ. குருசாமி, மெர்க்குரி புத்தகக் கம்பெனி, கோயம்புத்தூர், இ.ப. ஏப். 1974.

சங்க கால மகளிர் சி. பாலசுப்பிரமணியன், பாரி நிலையம், சென்வை மு.ப. டிச. 1983.

சங்க கால வாழ்வியல் (சங்கத் தமிழரின் அரசு முறையும் சமூக வாழ்வும்) ந. சுப்பிரமணியன், நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை மு.ப. ஆக. 1986.

தமிழ் இலக்கியச் சமூகவியல், க.ப. அறவாணன், தமிழ்க்கோட்டம், புதுச்சேரி, மு.ப. டிச. 1992.

தமிழ்க்காதல், வ.சுப. மாணிக்கம், பாரிநிலையம், சென்னை, மு.ப. பிப். 1986.

தொல்காப்பியம், (தி. சு. பாலசுந்தரம் பிள்ளை, விளக்கக் குறிப்பு) தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை 1967.

பண்டைத் தமிழர் தொழில்கள், வி.சி. சசிவல்லி, உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை மு.ப. நவ. 1989.

பத்தினித் தெய்வங்களும் பரத்தையர் விதிகளும் (தொல்காப்பியர் முதல் சித்தர் வரை பெண்களின் சித்தரிப்பு) பிரேமா அருணாசலம், சவுத் ஏசியன் புக்ஸ், சென்னை, மு.ப. சூன். 1993.

பெண்களின் சுவடுகளில்; சாந்தி சச்சிதானந்தம், தமிழியல், சென்னை, மு. ப. மார்ச். 1989.

பெண்ணியம், இரா. பிரேமா, உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, மு.ப 1994.

பெண்ணியமும், கலை இலக்கியப் பிரதிகளும், சு. சண்முகசுந்தரம் (பதி. காவ்யா, பெங்களூர், மு.ப. டிச. 1994.

புறநானூற்றில் தமிழர் பண்பாடு; செ. பழனிச்சாமி, வாணிப் பதிப்பகம் கோவை, மு.ப. 1989.

## உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை - 600 113

### அண்மை வெளியீடுகள்

| | |
|---|---|
| இ.ப.த. மன்ற ஆய்வுக் கோவை 1969 தொகுதி-1 | 70.00 |
| இ.ப.த. மன்ற ஆய்வுக் கோவை 1969 தொகுதி-2 | 65.00 |
| இ.ப.த. மன்ற ஆய்வுக் கோவை 1970 தொகுதி-1 | 75.00 |
| இ.ப.த. மன்ற ஆய்வுக் கோவை 1970 தொகுதி-2 | 70.00 |
| இ.ப.த. மன்ற ஆய்வுக் கோவை 1970 தொகுதி-3 | 50.00 |
| சங்ககால மன்னர்களின் காலநிலை-1 | 56.00 |
| சங்ககால மன்னர்களின் காலநிலை-2 | 64.00 |
| தாய்நாட்டிலும் மேலைநாடுகளிலும் தமிழியல் ஆய்வு | 75.00 |
| லவகுச நாடகம் | 30.00 |
| திருக்குறள் பூரணலிங்கம் பிள்ளை ஆங்கில மொழிபெயர்ப்புடன் | 100.00 |
| நானும் என் கவிதையும் | 40.00 |
| காசி விசுவநாதர் சதகம் | 40.00 |
| தொல்காப்பியப் பாவியல் கோட்பாடுகள் | 40.00 |
| இந்திய விடுதலைக்கு முந்தைய தமிழ் இதழ்கள் - 2 | 65.00 |
| On Translation | 95.00 |
| ஐங்குறு நூறு மூலமும் உரையும் | 85.00 |
| தனிநாயகம் அடிகளாரின் சொற்பொழிவுகள் | 40.00 |
| Literary Criticism in Tamil and Sanskrit | 45.00 |
| செந்தமிழ் அகராதி | 150.00 |
| சொற்பிறப்பு - ஒப்பியல் தமிழ் அகராதி | 200.00 |
| தமிழ்ச்சொற் பிறப்பாராய்ச்சி | 30.00 |
| அரசினர் கீழ்த்திசைச்சுவடி நூலகத் தமிழ்ச்சுவடி விளக்க அட்டவணை-1 | 110.00 |
| பிரதிமா ஸ்வப்ன வாசவதத்தம் | 55.00 |
| அறநூல் | 38.00 |
| இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் நாடகங்கள் | 75.00 |
| பொருள் புதிது | 35.00 |
| ஆளும் தமிழ் | 28.00 |
| தமிழ்நாட்டில் பைரவர் வழிபாடு | 19.00 |
| மன்னான் சின்னாண்டிக் கதைப்பாடல் | 18.00 |
| தனிநாயகம் அடிகளாரின் ஆய்வுகள் | 22.00 |
| புதிய அமைச்சகம் புரிந்த பணிகள் | 10.00 |
| நன்னூல் மூலமும் விருத்தியுரையும் | 225.00 |
| பல்லவர் செப்பேடுகள் முப்பது | 250.00 |
| பாண்டியர் செப்பேடுகள் பத்து | 125.00 |
| Studies in Tamil Prosody and Poetics | 45.00 |
| Critical Studies in Kural | 30.00 |
| Tamil India | 40.00 |
| அரசினர் கீழ்த்திசைச்சுவடி நூலகத் தமிழ்ச்சுவடி விளக்க அட்டவணை-2 | 110.00 |
| செந்தமிழ்ச் செல்வியின் இலக்கியப் பணி | 20.00 |

Pub.No. 377 **சங்க இலக்கிய ஆய்வுகள்** Rs. 30.00